
கல்கி
ALKI
30-8-1964
30



எவருக்கும் அதிக நன்மை

தனி நபரால் செய்ய முடியாத காரியத்தை ஆயிரமாயிரம் கிராமங்களிலே இன்று கூட்டுறவு சங்கங்கள் செய்து வருகின்றன. தூண்போல, அவற்றுக்குப் பின்பலமாக இருந்து வருவது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா.

1600 கிளைகளைக்கொண்டு, ஆண்டுதோறும் அவற்றின் மூலம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவும் அதன் துணையகங்களும், கூட்டுறவு பாங்குகளுக்கு மட்டுமின்றி, விற்பனைத்துறை மற்றும் பிராஸஸிங் கழகங்கள், சர்க்கரை ஆலைகள், தொழில்துறைக் கூட்டுறவு நிறுவனங்கள், நுகர்வுப்பண்ட மொத்த விற்பனைக் கடைகள் ஆகியவை போன்ற கூட்டுறவு சங்கங்களுக்கும் நேரடியாக நிதி உதவியும் பிற உதவிகளும் வழங்குகின்றன.

பரஸ்பர மகிழ்ச்சி தழைக்கும் வட்டம் எனலாம். நாங்கள் உதவுவது அவர்களுக்கு. அவர்கள் உதவி நாட்டுக்கு. அதுவே எங்களுக்கும் உதவி. ஆக மொத்தம் எல்லோருக்குமே அதிக நன்மை.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

எளியவருக்கும் பெரும் பணி புரியும் மாபெரும் பாங்க்.

கல்கி பொருளடக்கம்

குரோதி ஆவணி 15 ★ ஆகஸ்டு 30 1964

'கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

பூவே பூ!......

பூவே பூ! பொன்னிறப் பூ!
பூவையின் முகத்தில் எத்தனை பூ!

கண்க ளிரண்டும் குவளைப் பூ! – அவள்
கன்ன மிரண்டும் ரோஜாப் பூ!


பண்கள் மிழற்றும் செவ்விதழ்கள் – அவை
பரவச மீட்டும் மாதுளம் பூ!


நண்ணும் முகமோ தாமரைப் பூ! – அவள்
நாசி எழிலோ எள்ளின் பூ!

கண்ணைக் கவரும் புன் னகைப் பற்கள்
கட்டுக் குலையா முல்லைப் பூ!

மலரினை நாடி வண் டோடும் – புது
மதுவினைத் தேடி உண் டாடும் – அந்த
நிலையினில் என்மனம் இண்டாடும் – அவள்
நேசத்திலேகளி கொண் டாடும்!

— திருச்சிற்றம்பலக் கவிராயர்


திட்ட இலட்சியங்கள்
சர்க்கஸ் வேடிக்கை போதும்; உணவுக்கு ஏதேனும் வழி செய்யுங்கள்.
காங்கிரஸ் அரசாங்கம்
மக்கள்
அந்நியக் கடன்கள்
PK



மலர் 24 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 5

காமராஜ் கேலி செய்தார்!

'நமக்குக் கடன் கொடுத்துள்ள அயல் நாட்டார் அதைப்பற்றிக் கவலைப்படாத போது ராஜாஜி எதற்காகக் கடனைத் தீர்ப்பது பற்றிச் சங்கடப்படுகிறார்?' என்று முன்னொரு சமயம் திரு காமராஜ் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் கேலியாகக் கேட்டார். உடனே பலத்த கரகோஷம் எழுந்ததாகப் பத்திரிகைகள் குறிப்பிட்டன. ராஜாஜியின் 'சங்கடம்' எவ்வளவு நியாயமானது என்பது இப்போதுதான் தெளிவாகி யிருக்கிறது.

அமெரிக்க சட்டசபையானது கடன் தொகைகளைத் திரும்பப் பெறுவது குறித்து விதிமுறைகளை வகுத்து விட்டது. உருக்கு ஆலைகள், மின்சார நிறுவனங்கள் ஆகியவற்றுக்காகக் கொடுத்த கடனுக்கு மூன்றே முக்கால் சதவிகிதம் வட்டி தரவேண்டுமென்றும், வியாபார ரீதியில் அல்லாத மற்றத் திட்டங்களுக்கு இரண்டரை சதவிகிதம் வட்டி தரவேண்டும் என்றும் அமெரிக்க ஸெனேட் நிர்ணயித்திருக்கிறது. சிறிது காலமாகவே இந்தியா அமெரிக்க சர்க்காருக்கு வட்டித் தொகைகள் கட்டி வருகிறது. வட்டி தரவேண்டுமானால் அசலையும் திருப்பத்தான் வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். ஆனால் அதனையும் அமெரிக்க சட்டசபை வியக்தமாகச் சொல்லி விளங்க வைத்திருக்கிறது. இருபத்தைந்தாண்டுகளுக்குள் அசல் முழுவதையும் திருப்ப வேண்டும் என்றும், கடனில் நிறுவிய திட்டங்களில் உற்பத்தி தொடங்கியவுடன் தவணைகள் செலுத்தத் தொடங்க வேண்டுமென்றும் விதித்திருக்கிறது.

நம்முடைய கடனாளி நிலைமை எவ்வளவு பயங்கரமானது என்பது இனித்தான் ஆட்சியாளருக்கு உறைக்கப்போகிறது. ஆண்டுதோறும் கோடிக் கணக்கில் அமெரிக்காவுக்குக் கடனைத் திருப்பத்தான் வேண்டும் என்ற அவசிய நிலையை இப்போதுதான் அவர்கள் உணரப் போகிறார்கள். அரசியல் அறிவு இருந்திருந்தால் முன்பே அறிந்திருக்க வேண்டிய விஷயம் இது. 'இது கடன் அல்ல; தானம்' என்று முன்பு ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால் அது ராஜநீதியுமல்ல; சுயமரியாதையும் அல்ல. 'நடுநிலைமை' என்ற இரண்டுங்கெட்டான் கொள்கையினால் அமெரிக்கா — ருஷியா இரு வல்லரசுகளையும் நமக்குச் சாதகமாக வைத்துக் கொண்டு நமது சர்க்கார் ஏராளமாகக் கடன் வாங்கினார். இப்போது உலகப் பனிப்போர் கெடுபிடி குறைந்து விட்டது. அந்நிய நாடு கடன்களைத் திரும்பக் கேட்கிறது. அந்தப் பெரும் கடன் வரிகளாக மாறி மக்கள் தலையில் விழப்போகிறது.

இதையெல்லாம் முன்கூட்டியே எதிர்பார்த்துத்தான் ராஜாஜி அந்நியக் கடனைப்பற்றி நீண்ட காலமாக எச்சரித்து வந்தார். 'நாட்டின் மகத்தான முன்னேற்றத் திட்டங்களுக்கு அவர் குறுக்கே நிற்கிறார்' என்று குற்றம் கூறினார்கள். இப்போதுதான் அப்படிக் குற்றம் கூறினவர்களும், இந்த 'மகத்தான திட்டங்களை'த் தாங்க நாட்டுக்குத் திராணியில்லை; குறைக்க முடிந்த திட்டங்களை யெல்லாம் நீக்கி, அவசியமானவற்றை மட்டும் நிறைவேற்றினால் போதும் என்று ஓரளவு உணரத் தொடங்கி யிருக்கிறார்கள். இந்த உணர்ச்சியைச் செயலாக்காவிடில் அடுத்த தலைமுறையினரை வரிச் சுமையும் கடன் சுமையும் நெரித்துக் கொல்லும். அடுத்த தலைமுறையின் சம்மதத்தைக் கேட்டுத் திட்டங்கள் வகுக்கப்படவில்லை. அவ்வாறிருக்க, இன்றைய அரசாங்கத்தின் குருட்டுப் பிடிவாதத்துக்காக அவர்களைத் துன்புறுத்துவது பாதகமாகும்.

அதிகபட்சம் அதமபட்சமாயிற்று!

அரசாங்கத்தில் அரிசிக்கு அதிக பட்ச விலைகள் நிர்ணயித்தார்களோ இல்லையோ, உடனேயே அந்த விலைக்குக் குறைவாக விற்பனையான ரகங்களும் சர்க்காரின் நிர்ணய விலைக்கு உயர்ந்து விட்டன. சர்க்கார் விதித்த அதிகபட்ச விலைக்குக் குறைவாக இன்று எந்த ரகமும் கிடைக்க வில்லை. திருட்டு வியாபாரம் அதிகரித்து வருகிறது. தேசம் முழுவதும் பரவியுள்ள சிக்கலான ஒரு துறையில் சர்க்கார் கெடுபிடி செய்ததன் முக்கியமான விளைவு இதுவே.

கடைகளில் அதிகாரிகள் சோதனை செய்வதும், பதுக்கல்களை வெளிப்படுத்துவதும், நியாயமான கையிருப்பையே பதுக்கலாக நினைத்துக்கொடுமை செய்வதும் மற்ற விளைவுகள். உற்பத்தி பெருகுவதற்கு உகந்த முறையில் சர்க்கார் தன் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டிய ஒரு பிரச்னையைப் போலீஸின் பிரச்னையாக்கி விசேஷ போலீஸிடம் அரிசி வியாபாரக் கண்காணிப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. உயிரும் உடலும் சேர்ந்திருக்க ஒரு பண்டம் வேண்டுமென்றால் அதை எவர் தேடிப் பெறாமல் இருப்பார்கள்? போலீஸாரும் அதிகாரிகளும் அதைத் தடுக்க முடியாது.

சென்னை ஜார்ஜ் டவுனிலும், திருவல்லிக்கேணியிலுமாக இரண்டு அரிசி வியாபாரிகளைக் 'கண்ணி' வைத்துப் பிடித்திருக்கிறார்கள். இப்படியே எல்லாக் கடைகளுக்கும் அரிசி வாங்குவது போல் ஆட்களை அனுப்பி அதிக விலை வைத்து விற்பவர்களைப் பிடிப்பது சாத்தியமான காரியமா? அல்லது அது அவசியம் தானா? அரிசி குறைந்த விலைக்கு கிடைப்பதற்கோ, அல்லது பதுக்கல் சரக்கு வெளியாவதற்கோ இந்த நடவடிக்கை உதவாது. சாமர்த்தியசாலிகளான ஒரு சில வியாபாரிகள் போலீஸாருடன் ரகசிய ஏற்பாடுகள் செய்து கொள்வதற்கும், மற்றவர்கள் இந்த வியாபாரத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டு வேறு துறைகளில் ஈடுபடவும்தான் இந்த நடவடிக்கை வழி வகுக்கும்.

உணவு தானிய உற்பத்தியில் ஈடுபட்டவர்களை ஊக்கம் குன்றச் செய்து, வேறு தொழில்களில் திருப்பியாயிற்று. இப்போது வியாபாரிகளையும் அப்படியே செய்யப் பார்க்கிறார்கள். இதைப் போல் இன்னும் பல புதிய நடவடிக்கைகள் எடுப்பது பற்றி ஸ்ரீ ஸி.சுப்பிரமணியம் அவர்கள் பேசுகிறார். ஸ்ரீ நந்தர் அவர்கள் சதாசார சமிதிகளை வேகமாக முடுக்கி விட்டுக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் லஞ்சமும் அதோடு அடக்குமுறையும் பெருகுவதற்கு என்னவெல்லாம் செய்யலாமோ அவ்வளவையும் இன்னொருபுறம் செய்து வருகிறார்கள்!

விவசாயிகளின் வாழ்க்கை நிலையைக் கவனியாது, குறிப்பிட்ட விலைக்கு விற்குமாறு நிர்ப்பந்தம் செய்வதும், பயங்காளிகள் என்று பெயரெடுத்த வியாபார சமூகத்தைப் போலீஸ் ஆட்சியின் கீழ் கொண்டு வருவதும் நாட்டில் சொல்லொணாக் குழப்பத்தைத்தான் உண்டாக்கும். பயமுறுத்தலினால் மட்டுமே உணவு தானியங்களின் விலையைக் குறைக்க முடியுமா, அல்லது அரசாங்கத்தின் நிலைக் கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டுமா என்பதே கேள்வி.

உதவி எதற்கு?

இந்தோனேஷியாவுடன் சமாதானம் செய்து கொள்வதற்காக மலேஷியா எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் இந்தியா உதவி செய்யும் என்று அந்நிய விவகார மந்திரி ஸ்ரீ ஸ்வர்ண ஸிங் கூறியிருக்கிறார். முன்பு ஸ்ரீ டி. டி. கே. அவர்கள் லண்டனில் கூறியதும் இதுவே. மலேஷியாவின் சமாதான நடவடிக்கைகளுக்கு மட்டுமே இந்தியா உதவும்; இந்தோனேஷியாவின் அநியாயமான ஆக்கிரமிப்பை எதிர்த்து மலேஷியா செய்யும் போராட்டத்துக்கு இந்தியா உதவ முன் வராது என்பதே இதன் உட்பொருள். யாருடன் எப்போது சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்பதை ஆராய்ந்து பாராமல், யாராக இருந்தாலும் எப்படியேனும் சமாதானம் செய்து கொண்டேயாக வேண்டும் என்று எண்ணினால் அக்கிரமக்காரர்களிடம் எதிராளிகள் நியாயமான உரிமைகளையும் பறி கொடுக்க நேரிடும். சீனா விஷயத்தில் நாம் இப்படித்தான் நஷ்டத்தைத் தேடிக் கொண்டோம். மலேஷியா விஷயத்திலும் இதே வழியைக் கடைப்பிடிப்பது துர்ப்பாக்கியமாகும்.

அளவுக்கு மீறினல் அமுதமும் நஞ்சு

ராஜாஜி

'நீங்கள் அநுபவஸ்தர்; எனக்கு நல்லது நினைக்கிறவர். உங்களுடைய கொள்கை என்ன என்று எனக்குத் தெளிவாகத் தெரிந்தால் நலம்' என்று புதிய பிரதமர் லால்பஹாதுர் அவர்கள் என்னிடம் கேட்பாராகில் அது நியாயமே. சர்க்காரின் சர்வப்பிரவேச சர்வாதிபத்தியத்தை எதிர்ப்பவன் நான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதே போல் தனி மனிதர்கள் யாவரும் கட்டுப்பாடற்றுச் சர்வ சுதந்திரமாக மனம் போனபடி நடப்பதையும் நான் முறையென்று ஒப்புக் கொள்ள மாட்டேன். மக்கள் ஒன்றுகூடி வாழ வேண்டும்; அவ்வாறு வாழ்வதால் ஏற்படுகிற கடமைகளை ஒட்டிச் சில கட்டுப்பாடுகளை அநுசரிக்க வேண்டும். சர்க்கார் சர்வாதிபத்தியம், தனி மனிதர்களின் வரம்பில்லாத சுதந்திரம் இரண்டையும் திருத்தி, இரண்டையும் வரம்புக்குட்படுத்த வேண்டும் என்பது என் கருத்து. தனி மனிதன் மனம் போனபடி சர்வ சுதந்திரமாக நடப்பதற்குத் தற்காலத்தில் எந்தச் சமூகமும் அநுமதிப்பதில்லை. எனவேதான் நான் சர்க்காரின் சர்வாதிகாரத்தைத் திருத்துவதில் முக்கியமாக ஈடுபட்டிருக்கிறேன்.

ஏதேனும் ஒன்று நன்மை செய்வதாகத் தெரிந்தால் அதை மிகையாகச் செய்ய முயலுவது மனிதனுடைய சுபாவம். ஆனல் அது மகத்தான தவறு. வாய்ப்பு மட்டும் இருந்து விட்டால் நன்மைக்கு உகந்த எதையும் மிகையாகச் செய்வதே மக்களின் இயற்கைச் சுபாவம். எதிலும் நிறுத்த வேண்டிய ஓர் இடம் உண்டு. நன்மையாகத் தோன்றுவதும்கூட அதற்குமேல் சென்றால் தீமையாகி விடும்.

சர்வாதிகாரம் பெற்று விட்டால் தங்கள் வரம்பு எங்கு முடிகிறது என்று உணரும் அறிவை இழந்து விடுகிறார்கள். குடிப் பழக்கத்தில் சிக்கிக் கொண்டவர்களைப் போலவே, அதிகார போதைக்கு ஆளாகி மிகையாகச் செயல்புரியத் தொடங்கி விடுகிறார்கள். இந்த மிகையான நடவடிக்கைகளையே நான் எதிர்க்கிறேன்.

நாகரிக முன்னேற்றத்திலும் இந்த அபாயம் இருக்கிறது. நாம் நாகரிகம் என்று நினைத்துக் கொண்டிருப்பது கூட ஓர் எல்லையை மீறி விடலாகாது. நாகரிக முன்னேற்றம் என்று நாம் நினைத்துச் செய்கிற காரியங்கள் முடிவில்லாத நன்மைகளைத் தரும் என்று மயங்கக் கூடாது. அதற்கும் ஒரு முடிவு உண்டு. அப்பால் சென்றால் தீய விளைவுகளே நேரிடும். நாகரிக முன்னேற்றத்தின் சின்னமாக இருப்பவை இயந்திரத் தொழிற்சாலைகள். இவற்றின் புகைப் போக்கிகளிலிருந்து வருகிற புகையும் விஷ வாயுக்களும் சூழ்நிலையை மிகவும் பாதிக்கின்றன என்று அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் கவலையுடன் எழுதுகிறார். அணுச் சக்தி ஆலைகளின் தீய கழிவுப் பொருள்கள் போல, நாகரிக முன்னேற்றத்தின் தீய கழிவுப் பொருள்தான் ஏமினி வாயுக்கள்.

இந்த உண்மைகளை யெல்லாம் கவனித்தால் ஒரு பொது விதி பிறக்கிறது: நன்மைக்குச் சாதனமாக இருப்பவற்றைக்கூட ஓர் எல்லையில் நிறுத்தவேண்டும் என்று உணர்ந்து, அவ்வாறு நிறுத்த வேண்டிய இடம் எது என்று அறிவதே மக்கள் பெற வேண்டிய மிகப் பெரிய, மிக முக்கியமான பாடம். நன்மை விளைவிப்பதாக அநுபவத்தில் ஊர்ஜிதமான சாதனங்களையும்கூட வரம்புக்கு மேல் நீடிக்கக் கூடாது. ஒரு கொள்கையை அல்லது உபகரணத்தை அளவில் விஸ்தரித்துக் கொண்டே சென்றால், ஓர் எல்லைக்குப் பிற்பாடு அதன் தரம் குன்றத் தொடங்கும். 'இது வரையில் செல்லலாம்; மேலே போகக் கூடாது' என்ற எச்சரிக்கைப் பலகையைக் கவனித்துக் கொண்டே செல்ல வேண்டும். இல்லாவிடில் அகம்பாவமும், மயக்கமும் நம்மை மடமையில் ஆழ்த்திவிடும். மடமையோடு அதிகார பலமும் சேர்ந்து விட்டால் அனர்த்தம்தான்!

மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பது சித்தாந்தம். இதன் மேல்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சோஷலிஸ மேல் கட்டிடம் கட்டப்பட்டது. ஆனல் வரம்பு மீறிச் சென்றதால் சர்க்கார் சர்வப் பிரவேச முறையும் யதேச்சாதிகாரமும் உருவாகி விட்டன. ஆட்சியில் உள்ள அதிகார வர்க்கத்தால் மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்பது உண்மை. அதனல் மக்களின் சுய ஈடுபாடு குறுகிப் போய், அரசாங்கமே எல்லா நன்மையும் செய்ய வேண்டும் என்று ஏற்பட்டால் தனிமனிதனின் பிரத்தியேகப் பண்புகள் யாவும் அழிந்து போகும். நாகரிகத் தனி வாழ்வு போய் காடுவாழ் மக்களின் நிலையை நாடு அடையும். ஒரு சில சர்வ வல்லமை பொருந்திய கொடுங்கோலர்களின் கீழ்

மக்கள் யாவரும் அடிமை வாழ்வு வாழ நேரும்.

பிறருக்கு உதவி செய்து அவர்களை மகிழச்செய்வோம். ஆனால் மக்களின் சுய ஈடுபாட்டைப் பாதிக்கும் நிலையில் இந்த தர்மத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். சுய முயற்சி அழிந்து போன பின் மகிழ்ச்சி ஏதும் கிடையாது. தனித்தனியாக ஒவ்வொரு மனிதனும் திட்டம் போட்டு வீணை போட்டிப் பூசல்களில் ஈடுபடுவதைவிட, சமுதாயம் முழுவதையும் கவனத்தில் வைத்து அநாவசியமான போட்டியில்லாமல் சமுதாயத் திட்டங்களை முடிப்பது நன்மை என்று கருதி, வரம்பை மீறி எல்லாவற்றையும் சர்க்காரின் பொறுப்பாக்கி விட்டால் தனி மனிதர்களைவிட அதிக விரயம் செய்கிற அதிகார வர்க்கத்திடம் மக்கள் யாவரும் அடிமையாகி விடுவார்கள்.

கூட்டுறவு என்பது நல்ல சித்தாந்தம். அவசியமானதும் கூட. ஆனால் அளவை மீறி, சட்டத்தின் மூலம் கூட்டுறவை நிர்ப்பந்தப்படுத்தினால் அது யதேச்சாதிகாரமாகி விடும். ஹிட்லர் கொள்கை என்றோ, கம்யூனிஸம் என்றோ, வேறு எந்தப் புதுப் பெயரிட்டாலும் சரி, அது தனி மனிதனை காலக்கிரமத்தில் அழித்து விடும்.

தாய் மொழிப் பற்றும் இப்படியே. தாய் மொழி தேன்போல் இனிமை தரும் பொருள். ஆனாலும் பல தாய் மொழிகள் அடங்கிய ஒரு தேசத்தில் தாய் மொழிப் பற்றை வெறியாக்கி விட்டால் நாட்டில் பேதங்களும் வெறுப்புக்களும் அதிகமாகிவிடும். "நீங்கள் பல மொழிக்காரர்கள்; பல மதக்காரர்கள்; சேர்ந்து வாழ முடியாதவர்கள், உங்களுக்கும் சுயராஜ்யத்துக்கும் வெகுதூரம்" என்று ஆங்கிலேயர்கள் கூறியபோது நாம் அதை ஒப்புக்கொள்ளவில்லை. எப்படியோ சுயராஜ்யம் சம்பாதித்தும் விட்டோம். ஆனால் இப்போது அந்த மொழி பேதத்தின் காரணமாகக் குழியில் விழப் போகிறோம். ஹிந்தி வெறி வலுத்தால் ஹிந்தியர்களும், ஹிந்தி பேசாதவர்களும் இரண்டு கூறாக பேதப்பட்டு நிற்பார்கள். ஹிந்தியரின் வெறி வலுக்க வலுக்க, எதிராளிகளின் தீவிரமும் வலுக்கும். தி. மு. க. பிரிவினைவாதிகள் விரும்பும் நிலையை ஆட்சியாளர்களே உண்டாக்கி வருகிறார்கள். ஞானத்தின் தெய்வமாகிய சரஸ்வதி தேவி வடக்கத்தியரின் மொழிக் குருட்டுத்தனத்தை நீக்கி அவர்களுக்கு என்று ஞானம் அருளுவாளோ? காமராஜ் அவர்கள் இவ் விஷயத்தில் ஹிந்தியர்களுக்கு நல்ல யோசனையும் எச்சரிக்கையும் அளிக்க வேண்டும். அதற்குத் தகுந்த சமயமும் பதவியும் அவர் பெற்றிருக்கிறார். தி. மு. க.வின் தாக்குதலை மீண்டும் மீண்டும் பெற்று அடிபட்டுக் காயம் அடைந்திருக்கும் அவர் தி. மு. க. வின் வெற்றிக்கெல்லாம் ஹிந்தித் திட்டம்தான் காரணம் என்பதை வட நாட்டவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

நான் எழுத வந்தது ஹிந்தி விஷயம் மட்டுமல்ல. எந்தத் துறையிலும் மிகையாகச் செல்வதின் அபாயத்துக்குத் திருஷ்டாந்தமாகவே இதைச் சொன்னேன். நம்முடைய எல்லாப் பிரச்னைகளிலுமே மிகைப்படச் செய்யும் அபாயம் மறைந்திருக்கிறது. மிதமாக நடக்க வேண்டும் என்பதே கீதையின் மகத்தான ஆணை. அளவு மீறிய உற்சாகமும் அகம்பாவமும் கீதை வழிக்கு நேர் எதிர்த் திசையில் இட்டுச் செல்லும். மிதமே யோகம். அரசியல், நிர்வாகம் உள்பட எல்லா விஷயங்களிலும் எல்லாரும் பின்பற்றவேண்டிய யோகம் இதுவே.

அட்டைப்பட விளக்கம்

கண்ணன் பிறக்கிறான்!

தாயிற் சிறந்த தயாவான தத்துவன் என்றும், ஜன்ம ஜன்மத்துக்கும் தொடர்ந்து வரும் தாய் என்றும் போற்றப்படுபவன் எம்பெருமான். அவனே குழந்தையாகித் தாயன்பை அநுபவிக்க வேண்டும் என்று கண்ணனாகப் பிறந்தான். பிறப்பற்ற அந்த மாயப் பிள்ளை அன்று பிறந்தது மட்டும் அதிசயமல்ல. அன்றிலிருந்து ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஒவ்வொரு ஸ்ரீஜயந்தியன்றும் பிறந்து புதுமையில் எல்லாம் புதுமையாகி நம்மை மகிழ்விக்கிறான். அவனுக்குத் 'தாயன்பு' செய்தவள் அவனைப் பெற்றெடுத்த தேவகியல்ல. ஆயர்பாடித் திருமாது யசோதைக்குத்தான் அந்தப் பெரும் பேறு கிடைத்தது. காராகிருகத்தில் பிறந்த கண்ணனை அவள் தாலாட்டி மகிழும் புனிதமே பல கவிதைகளிலும் ஓவியங்களிலும் வடித்தெடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் ஒன்றாக இவ்விதழ் அட்டைச் சித்திரத்தை சைத்திரிகர் 'மணியம்' வழங்கி யிருக்கிறார். கோகுலத்தின் எளிய மக்கள் சூழ்ந்து தொழுத அமுதனை நாமும் எளிமையுடன் வணங்கி இகபர சுகங்களைப் பெறுவோமாக.

ஜீவாத்ம கைங்கரியம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் அருள் உரை

ஏழைகளிடமும் அநாதைகளிடமும் அன்பு கொண்டு அவர்களின் கஷ்டத்தை நிவர்த்திப்பதில் பங்கு கொள்வதுதான் தர்ம மார்க்கத்தின் அடிப்படை. வசதியுள்ளவர்கள் இந்த மனப்பான்மையுடன் தாராளமாய் இருந்தால்தான் சமூகம் நன்மையை அடைய முடியும்.

நமது ஹிந்து மதத்தின் அவல நிலை எனக்கு மிகவும் வேதனையை அளிக்கிறது. ஆஸ்பத்திரிகளிலும் தெருக்களிலும் சிறைச்சாலைகளிலும் மரணமடையும் ஹிந்து சமூகத்தைச் சேர்ந்தவர்களைக் கவனிக்க யாருமே இல்லை. இதர மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவர்கள் சமூகம் நல்ல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. ஹிந்து சமூகத்தைக் கவனிக்க யார் இருக்கிறார்கள்? இது விஷயத்தில் எனக்குத்தான் அதிக துக்கம். குரு ஸ்தானம் வகிக்கும் எனக்குத்தான் இந்த விஷயத்தில் பொறுப்பு அதிகம். நானே கண்ணும் கருத்துமாய் இருந்து கவலைப்பட வேண்டும். நீங்கள் எல்லாரும் எனக்கு வந்தனம் செய்வதால் உங்கள் பாவத்தைப் போக்கும் பொறுப்பையும் என்னிடம் ஒப்படைக்கிறீர்கள். நீங்கள் செய்யத் தவறிய காரியத்தால் ஏற்படும் பாவமும் என்னை வந்தடைகிறது. ஹிந்து மதத்தை நாதனுள்ளதாக்கி, அதைப் புனிதத் தன்மையுடன் விளங்க வைக்க வேண்டிய கடமையும் எனக்கு உண்டு.

அந்த அந்த மதஸ்தர்கள் அவரவர்கள் மதத்தை அநாதையாக்கி விடாமல் கவனித்தால்தான் தேசத்தில் க்ஷேமம் ஏற்படும். சிறிய ஊர்களிலும் ஜீவாத்ம கைங்கரியக் கமிட்டியை நிறுவி, ஆஸ்பத்திரியில் வியாதியால் துன்புறுபவர்களுக்கு ஆறுதல் அளிக்கும்படியும், அநாதைகளாய் இறந்தவர்களை அப்படியே கவனிப்பாரற்றுக் கிடக்கும்படி விட்டு விடாமலும் அந்தப் பணியை நன்கு நடத்த வேண்டும்.



நம் நாட்டில் ஆஸ்பத்திரிகளிலும் தெருக்களிலும் அடிக்கடி அநாதைகள் மரணமடைகிறார்கள். நம் மதத்தைச் சேர்ந்த இறந்தவர்களின் பிரேதங்கள் அநேகமாகச் சர்க்கார் ஊழியர்களாலேயே எவ்விதச் சடங்குமின்றிப் புதைக்கப்படுகின்றன.

இதைவிட நம் மதத்தவர்களுக்குப் பாவமும் அவமானமும் வேறில்லை. இவ்விதச்சம்பவங்கள் நேரிட்டால் உடனே அந்தப் பிரேதத்தை அது எந்த உட்பிரிவைச் சேர்ந்ததோ அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு ஒப்படைத்து, ஏதாவது பொருளுதவி செய்தாவது அவர்களைக் கொண்டு முறைப்படி ஸம்ஸ்காரம் செய்விப்பது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். அச்வமேத யாகத்துக்குச் சமமான இந்தப் புண்ணிய காரியத்தை ஏகதேசத்தில் நமக்குச் செய்யச் சக்தியில்லாமல் போனால் அன்பர்கள் பலர் ஒன்று சேர்ந்தாவது, ஹிந்து தர்ம ஸ்தாபனங்களிலிருந்து பொருளுதவி பெற்றேனும் இந்த உத்தமப் பணியைச் செய்து முடிக்க வேண்டும்.

இந்தக் காரியத்தில் கவனக் குறைவாக இருப்பது நம்முடைய சமூகத்துக்கு மன்னிக்க முடியாத ஒரு குறையாகும். இந்தக் குறையை விலக்க உடனே நாம் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். நமக்குத் தெரிந்து எந்த அநாதைப் பிரேதத்தையும் அரசாங்க வேலைக்காரர்கள் புதைப்பதைப் பார்த்திருப்பது பெரும் பாவமாகும்.

ஸ்ரீமாதாவின் கிருபையால் அவளுடைய குழந்தைகளான எல்லாச் சாதி வர்ண குல ஆச்ரமங்களைச் சேர்ந்த ஜீவகோடிகளுக்கும் பரஸ்பரம் உண்மையான சகோதர மனப்பான்மை ஏற்பட்டு அதன் மூலம் உலகத்துக்கே அன்பும் பொருளும் அருளும் குறையாது வளர்வதற்கு இந்த அச்வமேத கைங்கரியமே அஸ்திவாரமாகும்.

★

(அநாதைப் பிரேத சம்ஸ்காரம் என்ற இந்தப் புனிதகைங்கரியம் பொது மக்களின் பேருதவியால் தான் நடக்க வேண்டும்.


மனம் தனம் படைத்த பெரியோர்கள் ரூ. 100 கொடுத்துச் சங்கத்தின் ஆயுள் அங்கத்தினராகச் சேர வேணும்.

ஓர் உடலுக்கு சம்ஸ்காரச் செலவு சுமார் ரூ. 20 ஆகிறது. வசதியுள்ளோர் வருஷந்தோறும் ஒரு சம்ஸ்காரச் செலவையேனும் கொடுத்து ஆதரிக்க வேணும்.

சாதாரண நிலையில் உள்ளோர் வருஷந்தோறும் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் கொடுத்து வருஷ அங்கத்தினராகச் சேர்ந்து கொள்வதுடன் மற்ற உறவினர்களையும் நண்பர்களையும் சேர்த்து உதவக் கோருகிறோம்.)

ஹிந்து மத 'ஜீவாத்ம' கைங்கரிய சங்கம், கும்பகோணம்.

அறிந்தீர்களா?
இதுதான் உங்கள்
பனாமா



1 தேர்ந்தெடுத்த வர்ஜீனியாப் புகையிலைகளின் கலவைப் பலுக தன்மையான புகையம்—அதுவே உங்கள் பனாமா!

---

2 நாடெங்கும் நல்லின்பம் பரப்பும் மக்கள் ரகமாகிய பனாமா ஒத்த இனத்திலே உன்னத விற்பனையுள்ள ரகமாகும்.

---

3 நாட்டின் பல பகுதிகளிலே தலைசிறந்த ரகமாகத் திகழுவதும் உங்கள் பனாமா.

---

4 இன்று மக்கள் மனங்கவர்ந்துள்ள இருபதடங்கிய உறையினைப் பல்லாண்டுகளுக்கு முன் தோற்றுவித்த ரகமே பனாமாதான்.

உயரிய
பண்போடு
உபயோகிப்பதற்கும்
உதவுவதற்கும்
உகந்தது
பனாமா

கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட். பம்பாய்-56

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது

GT. (P) 635 A TH Greens' Advtg.

ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன்

ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் இம்மாதம் 26ம் தேதி அமெரிக்காவுக்குப் பயணமாகிறார். அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று அவர் செல்கிறார். அமெரிக்க அரசாங்கத்தின் கல்வி, கலாசாரத் துறையினர் அவ்வப்போது நம் நாட்டில் இத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு அழைப்புகள் அனுப்பி அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்யக் கோருகின்றனர். இப்படிச் செய்வதில் இரு வித நன்மைகள் உண்டு. ஒன்று அமெரிக்காவில் அனுபவங்களைப் பெற்று வர ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. அந்த நாட்டில் சில பிரச்னைகளை எப்படி அணுகிப் பரிகாரம் காண்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அதே சமயத்தில் அவர்கள் தீர்க்க முடியாது தவிக்கும் பிரச்னைகளுக்கு நம் நாட்டில் எப்படிப் பரிகாரம் கண்டிருக்கிறோம் என்று அவர்களுக்குச் சொல்லலாம். அப்படிப் பார்க்கும்போது அமெரிக்க அரசாங்கம் ஸ்ரீமதி சரோஜினி வரதப்பனை விடச் சிறந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்திருக்க முடியாது.

அவர் சென்னை முதன் மந்திரி திரு பக்தவத்ஸலம் அவர்களின் புதல்வியாதலால் நமது நாட்டில் சமூக கலாசாரத் துறையில் இருக்கும் அத்தனை பிரச்னைகளையும் அவருக்கு அறிய நல்ல வாய்ப்பு. அத்துடன் அன்றி, மாதர் நல சங்கம் போன்ற பல சமுதாய நலப் பணிகள் புரியும் ஸ்தாபனங்களில் எல்லாம் அவர் தீவிரப் பங்கு கொண்டு பணியாற்றி வருகிறார். அவரே ஒரு மாணவிகளின் பள்ளி நடத்தி வருகிறார். இப்படிப்பட்டவர் அமெரிக்கா சென்று வருவது தமிழ் நாட்டுக்குப் பயன்தரும் வகையில் அமையும் என்பதை யாரும் ஊகிக்கலாம்.



அதற்கேற்றபடி அவரைத் "தாங்கள் அமெரிக்காவில் எந்தெந்த ஸ்தாபனங்களைப் பார்க்கத் திட்டமிட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டபோது ஒரு முழுங்கை நீளமுள்ள தான் நிரம்ப அவர் குறித்திருந்த ஸ்தாபனங்களைக் காண்பித்தார். அவற்றைப் பார்த்தபோது அமெரிக்காவில் இத்தனை ஸ்தாபனங்கள் இருக்கின்றன என்று அவருக்கு எப்படித் தெரிந்தது என்ற மலைப்புத்தான் ஏற்பட்டது. ஆம், அந்த ஸ்தாபனங்கள் யாவும் அமெரிக்க அரசாங்கமோ, அமெரிக்கத் தூதரகமோ, நகவல் நிலையமோ அளித்ததல்ல. ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் தாமே நண்பர்கள் வாயிலாகக் கேட்டறிந்து தொகுத்த ஜாபிதாவாகும்.

இளம்பிள்ளைகள் குற்றம் செய்தால் அவர்களை விசாரிக்கும் நீதி மன்றங்கள்; அவர்களுக்கென ஏற்பட்ட பிரத்தியேகப் பள்ளிகள், சிறைச் சாலைகள், மாணவர் நிர்மாணிக்கும் நகரங்கள், பெண் வாக்காளர் ஸ்தாபனங்கள்; விவசாயத் துறையில் ஈடுபட்ட மாதர் கழகங்கள்; பின்தங்கிய ஏழை நாடுகளுக்கு உணவு அனுப்புவதற்கு இயக்கம் நடத்தும் ஸ்தாபனங்கள்; வகைவகையான கோதுமைப் பலகாரங்கள் செய்து, கோதுமை உணவுப் பிரசாரம் செய்யும் ஸ்தாபனங்கள் — இப்படிப் பலதரப்பட்ட ஸ்தாபனங்களைக் காண விரும்புகிறார். இவற்றைக் காண அமெரிக்காவில் கிழக்குக் கோடியிலிருந்து மேற்குக் கோடி வரை சுற்றுப் பிரயாணம் செய்யவிருக்கிறார். சுற்றுப் பிரயாண காலம் அறுபது நாட்கள். இந்நாட்களில் எத்தனை ஸ்தாபனங்களையும், பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்களையும் காண முடியுமோ, பேச முடியுமோ, அத்தனை ஸ்தாபனங்களையும் பார்த்து விட்டுத் திரும்பி வரவிருக்கிறார்.

அமெரிக்காவிலுள்ள பல ஸ்தாபனங்களைப் பற்றி முன்கூட்டியே பல தகவல்களை அறிந்து கொண்டிருப்பதுடன் நம் நாட்டைப் பற்றிய பல தகவல்களையும் புள்ளி விவரங்களையும் — நமது பண்பாடு, சுதந்திரத்துக்குப் பிறகு நமது முன்னேற்றம் போன்றவை—ஆராய்ந்து வருகிறார் ஸ்ரீமதி சரோஜினி. மேனாட்டில் தம்மிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான பதில் கூறத் தயாராக இருக்க வேண்டும் என்பதில் அவ்வளவு அக்கறை காட்டி வருகிறார்.

அவருடன் சென்னை சட்டசபையில் அங்கத்தினராக இருக்கும் ஸ்ரீமதி அனந்தநாயகியும், கேரள நாட்டைச் சேர்ந்த ஸ்ரீமதி சாந்தா பாலகிருஷ்ணன் அவர்களும் அமெரிக்க நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்யச் சேர்ந்து புறப்படுகிறார்கள். அமெரிக்காவை அடையும் வரைதான் சேர்ந்திருப்பார்கள். பிறகு அவரவர்கள் அக்கறை காட்டிவரும் ஸ்தாபனங்களைப் பார்த்துவரப் பிரிந்து சுற்றுப் பயணம் செய்ய வேண்டியதாக இருக்கும். அமெரிக்காவின் கிழக்குப் பகுதியிலுள்ள வாஷிங்டன் நகரத்திலிருந்து மேற்கே கலிபோர்னியாவரை பல வகைப்பட்ட மக்களைக் காண்பதும் பேசுவதும் அறிவு வளர்ச்சிக்கும் பரந்த மனப்பான்மை ஏற்படுவதற்கும் நல்ல வாய்ப்பாகும்.

இவர்களுடைய பிரயாணம் வெற்றிகரமாக முடிந்து நாட்டுக்கு நலம் தரும் முறையில் அமைய வேண்டும் என்பதே நமது பிரார்த்தனை.

கயல்விழி

அகிலன்

பாட்டுடைத் தலைவி தீக்குளித்து விட்டாள் என்பதைக் கூத்து பார்ப்பவர்களுக்கு உணர்த்துவதற்காக மேடையின் ஒரு பக்கத்தில் திரை மறைவில் தீ மூட்டிப் புகையைக் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். உண்மையாகவே கயல்விழி அதன்மீது விழுந்ததோ அவள் ஆடை தீப்பற்றிக் கொண்டதோ பைந்தமிழ்க் குமரனுக்குத் தெரியாது. அவன் மேடையில் அவளுக்காகப் புலம்பிக் கதறினான்; வீரத்துடன் சூளுரைத்தான்.

''பாண்டித் திருமகளே, நீ நிறையழிந்தவளல்ல! நீ பழி சுமந்தவளல்ல! பத்தரை மாற்றுப் பசும் பொன் நீ! பத்தினித் தெய்வமாம் கண்ணகி நீ! அங்கயற்கண்ணியின் அருமைச் செல்வி நீ! மறு இல்லாக் கற்பினளே, என் சான்றாண்மைத் தவற்றுக்கு நீ இன்று பலியானாய்! இந்த நாட்டு ஆண் மகனாகிய என்னுடைய பழி பாவத்தை நீ சுமந்திருக்கிறாய்! சான்றாண்மை கொண்ட ஆண் மக்கள் நிறைந்திருந்தால், பெண்மைக்கு இந்தப் பெருங்கேடு நேர்ந்திருக்குமா? காக்கப் பிறந்தவன் காக்கத் தவறி விட்டேன்! வீட்டையும் காக்கவில்லை; நாட்டையும் காக்கவில்லை!'' — அவன் குமுறினான்.

அவளை நீறாயுருக்கி விட்ட அந்த நெருப்பின் மீதும் அவளைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் மீதும் அவனுக்காகவே வாழத் துடித்த அந்தக் கற்புக்கரசி மீதும் ஆணையிட்டான் அவன்.

''என் எண்ணத்தில் நிறைந்தவளே, உன் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்: உன்னைச் சூழ்ந்த தீ, அதை உனக்கு இட்டவனின் சாம்ராஜ்யத்தையே பொசுக்கிச் சாம்பலாக்கும் வரை நான் இனி ஓயப் போவதில்லை. கண்ணகியாம் கற்புக்கரசி எப்படி மதுரையை அழித்தாளோ அப்படியே உன்னுடைய கற்புத் தீ கங்காபுரியைக் கொளுத்தப் போகிறது. பெண் தெய்வமே! நீ எனக்குச் சான்றாண்மை மிக்க வீர மகன் ஒருவனைப் பெற்றுத் தருவதாகக் கூறினாயல்லவா? ஒருவன் போதாது. இந்த நாட்டிலுள்ள ஆண்மக்கள் அனைவரையுமே நீ வீரர்களாக மாற்ற வேண்டும். தம்பியை இழந்து தவிக்கும் குலசேகர பாண்டியருக்கு, 'இங்கே ஆயிரமாயிரம் தம்பிகள் இருக்கிறோம்' என்று இளைஞர்கள் கூறுமளவுக்கு நீ அவர்களின் உள்ளத்தில் சக்தியாகச் சுடர்விட வேண்டும். உன் ஆணை நிறைவேறும் வரையில் இந்தத் தீ பரவிக் கொண்டேயிருக்கட்டும்!''

கூத்து முடிந்த பின்பும் கூடியிருந்த மக்கள் ஆடாமல் அசையாமல் அமர்ந்திருந்தார்கள். கண்ணீர் பெருகி வழிந்த நிலையில் அதைத் துடைக்கக் கூட அவர்களுக்குச் சிந்தையில்லை. பெண்களில் சிலர் மூர்ச்சித்து விழுந்து விட்டார்கள். ஆண்களின் கண்கள் சிவந்து மீசைகள் துடிதுடித்தன.

பின்னர்தான் அவர்களுக்குக் கூத்தின் தொடக்கத்தில் கட்டியக்காரர் கூறிய செய்தி நினைவில் வந்தது. பெருமக்கள் கூத்துக்காக ஏதும் பொன்னோ, பொருளோ கொடுப்பதாக இருந்தால் அதை அங்கிருந்த மட்குடத்தில் போடும்படி கேட்டுக் கொண்டிருந்தார் அந்தக் கட்டியக்காரர்.

''நமக்காகப் போரிட்டு அழிந்த மட்டியூர் நம்மை அடுத்திருக்கிறது. அதை நாம் முதலில் புதுப்பிக்க வேண்டும். அவ்வூர் மக்களுக்கு உணவு, உடை, இடம் கொடுத்துக் காக்க வேண்டியது நமது தலையாய கடமை. அதற்காகவே இந்தக் கூட்டத்தில் கிடைக்கும் பொருளை நாங்கள் மட்டியூருக்கு வழங்கப் போகிறோம். கையில் பொருளில்லாதவர்கள் அந்த ஊரைப் புதுப்பிக்கும் பணியில் தங்கள் உழைப்பைத் தர வேண்டும். நாளைக்குப் புலவர்கள் பலர் இந்த நகரத்துக்குள் சுற்றி வருவார்கள். தனம், தானியம் எதைக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்து உதவலாம். அடுத்தவர் பசித்திருக்க, நாம் புசித்து மகிழ்வது பெரும் பாவமாகும்....!''

கூத்து முடிந்த மறுகணமே பெண்ணொருத்தி அந்த மட்குடத்தருகே எழுந்து சென்று, தனது அணிகளனைத்தையும் கழற்றி அதற்குள் போட்டாள். அவளைத் தொடர்ந்து சென்ற



பெண்கள் கூட்டம் தங்களது கனங்குழை, மேகலை, நூபுரம், பொன்னாரம், மணியாரம் முதலியவற்றைக் கழற்றி உள்ளே விசியது. கழங்குகளையும் காசுகளையும் அள்ளிப் போட்டார்கள் ஆடவர்கள். அந்த மட்குடத்தருகே பெருங்கூட்டம் சூழ்ந்துகொண்டு, தங்களால் முடிந்த அனைத்தையும் மனமாரக் கொடுத்து விட்டுச் சென்றது.

இவ்வளவுக்கும் காரணமாக இருந்த பைந்தமிழ்க் குமரன் அப்போது அங்கு இல்லை. அவன் இந்தக் காட்சியைக் கண்டிருந்தால் ஆனந்தக் கண்ணீர் வடித்திருப்பான். அவனுக்குப் பதிலாக அங்கே விழுப்பரையர் நின்று கொண்டிருந்தார். மேலும் மேலும் வந்து குவிந்து கொண்டிருந்த பொன்னையும் மணியையும் கண்டு அவர் வியப்படையவில்லை. குடிமக்களின் உள்ளத்தின் ஆழத்தில் அமிழ்ந்திருக்கும் அன்பும் தியாக உணர்வும் அவரை மெய்ம் மறக்கச் செய்து விட்டன. அந்தப் பண்புகளை அவருக்குச் சுட்டிக் காட்டிய அரும் தலைவனை அவர் நினைத்துக் கொண்டார்.

''இளவரசே! நீங்கள் சான்றாண்மைக்குள்ள மெய்ப்பொருளை இன்று தான் என்னையே உணர வைத்தீர்கள்; அது நமது மக்களிடமே மறைந்திருக்கிறது என்பதை வெளிப்படுத்தி விட்டீர்கள்'' என்று தமக்குள்ளாகவே தழுதழுத்த குரலில் கூறிக் கொண்டார்.

அப்போது பைந்தமிழ்க் குமரனும், ''கயல் விழி! கயல் விழி!'' என்று தழுதழுத்த குரலில்தான் அவளை அழைத்துக் கொண்டிருந்தான். தரையில் நினைவற்றுக் கிடந்தாள் அவள்.

அரங்கத்தின் மூலையில் புகைமூட்டத்துக்காகப் போட்டிருந்த சிறு தீயில் அவள் வேண்டுமென்றே வந்து விழுந்து விட்டாளாம். கடைசிக் காட்சியில் நடித்துக் கொண்டிருந்த புலவன் இதைக் கண்ணுறவில்லை. நல்ல வேளையாக அருகில் இருந்த தோழிகள் அவளைப் பற்றி இழுத்துத் தீயை அணைத்திருக்கா விட்டால், மெய்யாகவே அவள் உயிர் நீத்திருப்பாள்.

''கயல் விழி!'' என்று மீண்டும் அழைத்தான் அவன்.

''எனக்குள்ளே பற்றிக் கொண்ட தீயை என்னால் தாங்க முடியவில்லை'' என்றாள் அவள். அவள் விழிகளில் நீர் நிறைந்து துளும்பியது.

நான்காம் அத்தியாயம்

போராட்டம்


கயல்விழியின் ஆட்டமும் புலவர் கன்னன் கூட்டமும் பைந்தமிழ்க்குமரன் எதிர்பார்த்ததற்கும் மேலாகக் குடிமக்களிடம் புத்தெழுச்சியைத் தோற்றுவித்து விட்டன. விழுப்பரையரின் ஆனந்தத்துக்கோர் எல்லை இல்லை. ஆனால் இந்த நிகழ்ச்சிகளால் எவன் ஒருவன் பூரித்துப் பெருமிதமடைய வேண்டுமோ அவன் மட்டிலும் தனிமையில் புழுங்கிக் கொண்டிருந்தான். எவளிடம் அவன் தன் பெருமகிழ்ச்சியைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்று கற்பனை செய்து கொண்டிருந்தானோ, அவள் அவனுக்குப் பேரதிர்ச்சியைத் தந்து விட்டாள்.

கயல்விழிக்கு அப்படி யொன்றும் மிகுதியான தீப் புண்கள் ஏற்பட்டுவிடவில்லை. ஆனால் தக்க சமயத்தில் அவள் தோழிகள் அவளைத் தடுத்திருக்கா விட்டால் அவளுக்கு என்ன நேர்ந்திருக்கும்? பைந்தமிழ்க் குமரனின் நெஞ்சு நெருப்பால் இப்போது வெந்து கருகியது. ஒவ்வொரு கணமும் இப்படி யாரும் அவளைக் கண்காணித்துக் கொண்டிருக்க முடியுமா? எந்த விநாடியில் எப்படி நடந்து கொள்வாளோ என்ற ஓர் அச்சத்தை யல்லவா எழுப்பிவிட்டிருக்கிறாள்!

அவளை விழுப்பரையரின் இல்லத்துக்கு அனுப்பி விட்டு, மண்டபத்தில் வந்து படுத்தவனுக்கு இரவில் உறக்கம் வரவில்லை. முதன் முதலாகக் கூத்தின் கதையை அவளிடம் கூறி, அதில் நடிக்க வேண்டுமென்று கேட்டபோது, பிடிவாதமாக அவள் மறுத்ததை அவன் நினைத்துக் கொண்டான்.

'நீங்கள் வற்புறுத்தினால் முதற்கூத்தின் முடிவில் நானும் மெய்யாகவே தீக்குளித்து விடுவேன்' என்று அவள் அன்று சீற்றத்துடன் கூறினாள். ஆனால் பின்னர் அவன் வற்புறுத்தாமலே இசைந்து விட்டாள். இசைந்து என்ன பலன்? முதலில் கூறியதையே நிறைவேற்றுவதற்காகத்தான் இசைந்தாளா?

ஆனால் அவளிடம் இருந்த மற்றொரு கயல்விழியையும் அவன் மறந்து விடத் துணியவில்லை. அவனிடம் முழு மனத்தோடு அடைக்கலம் புகுந்தவள் அவள்; சரணாகதி அடைந்தவள் அவள். 'நீங்கள் எதைக் கூறினாலும் அதை நான் விரும்பிச் செய்கிறேன்; தங்களுடைய மகிழ்ச்சியைவிட நான் வேறு எதை



யும் பெரிதாகக் கருத மாட்டேன்' என்று கூறியவனும் அவனே. ஒரே கயல் விழிக்குள் இரு வகைப் பெண்கள் குடி கொண்டிருக்கிறார்களோ என்ற கலக்கம் தோன்றியது அவனுக்கு.

கண்ணுறங்காமல் புரண்ட அவன் களைத்துப் போய் ஒரு முடிவுக்கு வந்தான். அவனுக்கு விருப்பமில்லையென்றால் இந்தக் கூத்தில் அவளை நடிக்கும்படி வற்புறுத்தலாகாது. நடைபெற்றது முதற் கூத்தாகவும் கடைசிக் கூத்தாகவுமே இருந்து விட்டுப் போகட்டும்.

மறு நாள் முற்பகலில் பைந்தமிழ்க் குமரனைச் சுற்றிக் கூட்டம் கூடத் தொடங்கி விட்டது. அவனைக் கண்டு பேசுவதற்காகப் பலர் வந்து கூடங்களிலும் வெளியிலும் காத்திருந்தார்கள். பெரிய பெரிய வண்டிகளில் நெல், தினை, வரகு முதலிய உணவு தானிய மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வந்து, வெளியில் நிறுத்தியிருந்தார்கள் கொடுங்குன்றத்துப் பெருமக்கள். முதல் நாள் இரவில் சேகரிக்கப் பெற்ற அணி மணிகள் அந்த மட்குடத்தில் நிறைந்திருந்தன. அது ஓரமாக வைக்கப் பெற்றிருந்தது.

கொடுங்குன்றம் நகரத்துப் பெருமக்கள் மட்டியூர் மக்களுக்காகத் திரட்டிய உணவுப் பொருளை அவனிடம் கொடுப்பதற்காக வந்திருந்தனர். அவனுடைய தெளிவான சொற்கள் தங்களுக்கு வழிகாட்டியிருப்பதாகத் தெரிவித்தார்கள். அது வரையிலும் ஏதும் குற்றங் குறைகள் இருந்தாலும், இனி நகரத்தை முன்னிலும் சிறப்பாகக் கவனிப்பதாய் வாக்களித்தனர்.

''புகழுக்கு ஆசைப்பட்டு மக்களுக்குப் பணியாற்றுங்கள். உடுப்பது நான்கு முழம்; உண்பது நாழி அரிசி. உறங்குவதற்குத் தனிக் கூரை போதுமே நமக்கு! பொருட்செல்வத்துக்குப் பேராசைப் படுகிறவர்களின் மீது சிறிது எச்சரிக்கையாக இருங்கள். அன்பில்லாதவர்கள் அவர்கள். மக்களிடம் அன்போடு நடந்து கொள்ளுங்கள்.''

''பாண்டிய நாட்டில் மீண்டும் படை திரட்டக் கூடாதென்று சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறாராம். நம்முடைய குலசேகர பாண்டியரின் படையில் இளைஞர்கள் சேர முடியாது. இந்த நிலையில் நாம் பகையை எப்படி வெல்வது?'' என்று கேட்டார் ஒருவர்.

''படையில் சேர்ந்தால்தானா பயிற்சி பெற முடியும்? ஒவ்வொரு வீட்டிலுள்ள ஆண் மக்களுக்கு அவர்களுடைய பெண்களையும் குழந்தைகளையும் காக்கும் பொறுப்பு இருக்கிறதல்லவா? ஊருக்குள் கள்வர்களோ காட்டு மிருகங்களோ வராமல் காப்பதற்கு நீங்கள் ஊர்க் காவல் வைத்திருக்கிறீர்களா? அங்கங்கே ஒவ்வோர் ஊரிலும், படையில் சேராமலே இளைஞர்கள் பயிற்சியை மேற்கொள்ளலாம்.''

அவனுடைய சொற்களின் கருத்தை ஊடுருவிக் கண்டு கொண்ட ஒருவர், ''அவசியம் நேர்ந்தால் திடீரென்று பெரும் படை திரட்டி விடலாம் என்று கருதுகிறீர்கள்'' என்றார்.

''நானொரு புலவன். குறிப்பால் உணர்த்துவதை ஊருக்குத் தக்கவாறு செயலாற்றப் பாருங்கள்.''

அவர்கள் விடைபெற்றுக் கொண்டு எழுந்தார்கள். ''மட்டியூர்ச் சபையோருக்குச் சொல்லி யனுப்புங்கள். நாளைக்கே இவற்றை அவர்களிடம் கொடுத்து, ஊரைப் புதுப்பிக்கும்படி கூறலாம். உடனடியாக அந்த ஊர் எழும்பியாக வேண்டும்'' என்றான். அவ்வாறே வாக்களித்துச் சென்றனர் ஆளுங்கணத்தார்.


வந்தவர்களிடமெல்லாம் உரையாடி அனுப்பி விட்டுத் தன்னுடைய கூடத்துக்குள் நுழைந்தான் பைந்தமிழ்க் குமரன். அங்கே கயல்விழி அவனுக்காக வெகு நேரம் காத்துக் கொண்டிருந்தாள். அவள் எப்போது வந்தாள் என்பதை அவன் கவனிக்கவில்லை. அவளைக் கண்டவுடன் சிறிது அதிர்ச்சியடைந்தான்.

மௌனமாகவே விழிகளால் ஒருவரிடம் ஒருவர் பேச முயன்றனர். கயல் விழி புன்னகை பூத்தாள். ''கூண்டுப் பறவையாக நீங்கள் இங்கு இருந்த போது எப்போதும் உங்களைக் காண முடிந்தது. இப்போது சிறகடித்துப் பறக்கத் துணிந்து விட்டீர்கள்.''

''எங்கு பறந்தாலும் கூண்டுக்குத் தானே திரும்ப வேண்டும்? அங்கு தானே அமைதி கிடைக்கிறது?'' என்றான் புலவன்.

பின்னர் அவளை அழைத்துக்கொண்டு அணிகலன்கள் நிறைந்த அந்த மட்பாண்டத்தின் அருகில் வந்தான். அதற்குள்ளே எட்டிப் பார்த்த கயல்விழியின் கண்கள் வியப்பால் விரிந்தன. தன் இரு கரங்களால் அவற்றை வாரி எடுத்து அவனிடம் நீட்டினாள். அவனும் கரங்களை ஏந்தினான். பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப் பெற்ற பல்வகை ஆபரணங்களும் கழுஞ்சுகளும் காசுகளும் அதில் இருந்தன.

அதனிடையே தென்பட்ட ஒரே ஒரு காதோலைச் சுருளை எடுத்து உற்றுப் பார்த்தான். அவன் கண்கள் கலங்கின. ஒரே ஒரு வெள்ளிக் கம்பியால்



''ராமசாமியின் பெண்ணுக்கு என்னடா குறைச்சல்? ஏன் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேனென்கிறாய்?''
''இதுவரையிலும் அவள் யாரையுமே காதலித்தது இல்லையாம்! காதலிக்கத் தெரியாதவளைக் கட்டிக் கொண்டு எப்படியப்பா காலம் தள்ளுவது?''

சுற்றப் பெற்ற தென்னை ஓலைச் சுருள் அது. பொன்னாலும் வெள்ளியாலும் அணிகலன் பூண முடியாத ஓர் ஏழைப் பெண், அதில் சுற்றியிருந்த வெள்ளிக் கம்பியை வழங்க வேண்டும் என்ற துடிப்பால் தன் காதோலைகளைக் கழற்றிப் போட்டிருக்கிறாள்.

''கயல்விழி! நமக்குக் கிடைத்த இவ்வளவு பொருள்களிலும் இந்த ஓலைச் சுருளே மிகவும் விலை மதிக்க முடியாத பரிசாக எனக்குத் தோன்றுகிறது. இதில் ஒட்டியிருக்கும் வெள்ளியைக் கொடுக்க முன்வந்திருக்கிறாள் ஓர் ஏழைப்பெண்.''

வெளியில் உணவு மூட்டைகளுடன் காத்திருந்த வண்டிகளைச் சுட்டிக் காட்டினான்.

''பாண்டியர் உபரியாகத் திறை செலுத்த வேண்டுமென்று கட்டளை பிறப்பித்திருந்தால்கூட, இவ்வளவு ஆவலோடு குடிமக்கள் முன் வந்து கொட்டியிருப்பார்கள் என்று நம்புகிறாயா? உன்னுடைய கலைப் பணிக்கு அன்பைத் தூண்டி விடும் சக்தி இருக்கிறது; மக்கள் மனத்தை அழகுபடுத்தும் ஆற்றல் இருக்கிறது. புதிதாக எழும்பும் மட்டியூர் உன்னுடைய அன்புக்கும் அழகுக்கும் சான்று கூறும்.''

''என் பணி என்று கூறுகிறீர்கள்'' என்றாள் கயல்விழி. ''நீங்களும் உங்கள் உயிர்ப் பாடலும் இன்றி நானுமில்லை; என் நடனமுமில்லை.''

பைந்தமிழ்க் குமரன் திகைப்படைந்தான். இப்படிக் கூறும் இந்தக் கயல்விழி மெய்யானவளா? அல்லது கூத்து முடிந்தவுடன் தீயில் விழப் போனாளே, அவள் மெய்யானவளா?

''நேற்று நடந்த நிகழ்ச்சியை என்னால் மறக்க முடியவில்லை. உனக்குள்ளே மற்றோர் ஆவேசம் கொண்ட கயல்விழி இருந்து கொண்டு திடீரென்று எதையாவது செய்யத் துடிக்கிறாள். அன்றொரு நாள் அவள் வைகையில் குதிக்கப் போனாள். நேற்று அவள் நெருப்புக்குத் தாவி விட்டாள். என்னைத் திடீரென்று ஒரு நாள் தனிமையில் தவிக்க விட வேண்டும் என்று எண்ணம் போலும் அவளுக்கு.''

அவள் அதிர்ச்சியடைந்தாள்.

''சொல்! உனக்கு விருப்பமில்லையென்றால், விருப்பமற்ற ஒரு செயலை எனக்காக நீ ஏன் மேற்கொள்ள வேண்டும்?''

''நீங்கள் விரும்புகிறீர்கள்.''

''என் விருப்பம் இந்த நாட்டின் எதிர்கால நல்வாழ்வுதான். நான் ஆண் மகன்; கடமைப் பற்றுக் கொண்டவன்; அதற்காக நான் உன்னைத் துன்புறுத்தவும் விரும்பவில்லை.''

''உங்கள் நோக்கமே என் நோக்கமாகவும் விருப்பமாகவும் இருந்தால்?''

''நீ இப்படித் தீயில் குளிக்கத் துணிந்திருக்க மாட்டாய்!''

கயல்விழியால் அதற்கு மேல் அவனிடம் தொடர்ந்து பேச முடியவில்லை.

''கயல்விழி! உன்னை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை; புரிந்துகொள்ள முடியவில்லை'' என்று நாத் தழுதழுக்கக் கூறினான் அவன். ''பாணர் குலப் பெண்ணாக இருந்தும் மிகவும் மென்மையான உணர்ச்சிகளைப் பெற்றிருக்கிறாய். நாம் ஒரு தீமையை எதிர்த்துப் போராடும் நிலையில் உந்தித் தள்ளப்பட்டிருக்கிறோம். நம்முடைய போராட்டத்தின் தொடக்கமே வெற்றிக்கு அடிகோலி விட்டது. இந்த நிலையில் நீ தளர்ந்து விட்டாய். உன்னை இழந்து விடும் துணிவும் எனக்கில்லை.''

''கட்டாயம் இனி நான் நேற்று நடந்தது போல் நடந்து கொள்ள மாட்டேன். நேற்று நான் என்னுடைய சுய உணர்வில் இல்லை.''

''மீண்டும் இப்படி நிகழ்ந்தால்?''

''ஒருகாலும் நிகழாது. அப்படி நிகழ்ந்தால் அது உங்களுக்குத் துன்பம் தரும் என்பதால் இனி நிகழாது. உங்களை முதலில் வைத்தே நான் எதையும் நினைக்கப் பழகிக் கொள்கிறேன்.''

வருத்தத்துடன் சிரித்து விட்டுக் கூறினான் இளைஞன்: ''நீ யாரோ? நான் யாரோ? முதன் முதலில் சிலம்புக்கூத்தின் போது நாம் ஒருவரை ஒருவர் விரும்பியா சந்தித்தோம்? கூத்துப் பார்க்கும்

நினைவே இல்லாதவன் அங்கு வந்தேன். பிறகு, வைகை யாற்றங்கரையில் நாம் சந்தித்த போது, நாம் விரும்பியா சந்தித்தோம்? அடுத்தாற்போல் இங்கு வந்து நாம் எப்படி ஒன்றாக வாழ முடிந்தது? நம் வாழ்க்கையில் ஏதோ ஓர் உட்பொருள் இல்லாவிட்டால், நாமே அறியாத ஒரு பந்தம் இல்லா விட்டால் இப்படியெல்லாம் நேர்ந்திருக்காது. நீ இதையெல்லாம் மறந்து விடக் கூடாது.''

அவன் கூறிய ஒவ்வொரு சொல்லையும் தனக்குள்ளே ஆழ்ந்து சிந்திப்பவள்போல் உற்றுக் கேட்டாள் கயல்விழி. பிறகு, அவனிடம் விளக்கம் கோருவதுபோல் ஓர் ஐயப்பாட்டை வெளியிட்டாள்.

''கூத்தில் வரும் பாண்டித் திருமகளைப் பற்றி நீங்கள் கடைசிக் காட்சியில் மிகவும் உயர்வாகவும் உருக்கமாகவும் பேசுகிறீர்கள். அவளைப் பத்தினித் தெய்வமென்றும் உத்தமிச் செல்வம் என்றும் போற்றுகிறீர்கள். தங்களுடைய அவ்வளவு போற்றுதல்களுக்கும் உரியவள்தானா அவள்?''

இளங்குமரனின் விழிகள் கோபத்தால் சிவந்தன. ''நானா பத்தினி என்று கூறினேன்! என் தெய்வமே எழுத்தில் வந்து அப்படி என்னைக் கூற வைத்தது. இயற்கைப் புலவன் எவனும் சுய நினைவில் எல்லாவற்றையும் பாடி விடுவதில்லை. கவிதையின் ஆவேசம் வந்து அவனிடம் சொற்களாய்க் கொட்டுகிறது....''

''அப்படியானால்....?''

''ஆயிரம் முறை கூறுவேன்; திரும்பத் திரும்பக் கூறுவேன். பத்தினித் தெய்வம் அவள். தீமையால் அவளை அழிக்க முடியாது. தீமையை அழிக்கப் பிறந்தவள் அவள்.''

நீண்ட பெருமூச்சு விட்டாள் கயல்விழி. பிறகு எங்கோ நினைவாகத் தன் இரு கரங்களையும் கூப்பினாள். ''இனி என்றுமே உங்களுக்குத் துன்பம் தரமாட்டேன்'' என்று தனக்குள்ளாகவே கூறிக் கொண்டாள்.

(தொடரும்)

குட்டிக் கதை

ஆங்கிலேயரது ஆட்சி நம் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. கல்கத்தாவின் புகழ்பெற்ற சாலையான 'ரெட் ரோடு' வழியாக இந்தியனாக இருப்பவன் நடந்தோ வாகனத்திலோ செல்லக்கூடாது என்று தடை விதித்திருந்தார்கள். அப்படி யாராவது தப்பித் தவறி அல்லது உத்தரவு மீறிப் போனால் அவர்களுக்குக் கடுந் தண்டனை விதித்து வந்தனர்.

டாக்டர் சியாமப் பிரசாத் முகர்ஜியின் தந்தையான சர் ஆசுதோஷ் முகர்ஜிக்கு இது மனத்தை உறுத்தியது. அவர் கல்கத்தா ஹைகோர்ட்டு நீதிபதியாக இருந்தார். ஒரு நாள் கோர்ட்டு கலைந்ததும் தம் இல்லத்துக்குப் புறப்பட்டார். தமது வண்டிக்காரனைக் கூப்பிட்டு, ''இன்று வண்டியை ரெட் ரோடு வழியாக விடு'' என்று உத்தரவிட்டார்.

வண்டிக்காரன் அயர்ந்து நின்றான்.

''என்ன நிற்கிறாய்? சொன்னதைக் கேள்!'' என்று அதட்டினார் ஆசுதோஷ். தன் எஜமானர் சொன்னால் சொன்னதுதான்; தம் பிடிவாதத்தை விடமாட்டார் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். எனவே, மறு பேச்சின்றி வண்டியை 'ரெட் ரோட்'டுக்கு விட்டான். ரெட் ரோடை அடைந்ததும் போலீசார் வண்டியை நிறுத்தினர்.



ஆனால் வண்டியில் அமர்ந்திருக்கும் ஆசுதோஷைக் கண்டதும் சிறிது தயங்கினர். 'இந்த வழியாகப் போக வேண்டாம்' என்று வேண்டினர். ஆனால் ஆசுதோஷா கேட்பார்? தமது எண்ணத்தைச் சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை அவர்.

''நம் நாடு இது. நம் நாட்டுக் காசைக் கொண்டு நம் நாட்டு மக்களின் உழைப்பை நல்கிப் போடப்பட்ட சாலை இது. இதில் நம் நாட்டவர்கள் போகக் கூடாதா? என்ன நியாயம் இது?'' என்று ஆசுதோஷ் சிம்மமென உறுமினார். ''உன் கவர்னர் ஜெனரல் துரையிடம் போய்ச் சொல், ஆசுதோஷ் இந்த வழியாகத்தான் போவாராம் என்று!'' என மொழிந்தார்.

கடைசியில் அவரது பிடிவாதத்துக்குக் கவர்னர் ஜெனரல் தணிந்து போகும்படியாகிவிட்டது. ''யூ மே கோ'' — ''நீங்கள் போகலாம்'' என்று அரசாங்க உத்தரவு பிறந்தது.

அந்த உத்தரவு அறிவாளியான நீதிபதிக்குச் சாதகமாக அமைந்தது. அவர் 'யூ' என்னும் அந்த ஆங்கிலச் சொல்லுக்கு 'தமக்கு' என்று மட்டும் பொருள் கொள்ளவில்லை. இந்தியர்களாகிய 'உங்களுக்கு'- என்று பொருள் கொண்டார்.

கவர்னர் ஜெனரல் தாம் அந்தப் பொருள்படச் சொல்லவில்லை என்று எத்தனையோ எடுத்துச் சொல்லியும் ஆசுதோஷ் முகர்ஜி விடவில்லை. இந்தியர்களனைவரும் அவ்வழியே போகலாம் என்று அநுமதி பெற்ற பிறகே நிம்மதி பெற்றார். அதற்குப் பின்தான் இந்தியர்களும் 'ரெட் ரோடு' வழியாகச் செல்லலாம் என்ற உத்தரவு பிறந்தது. தடை உத்தரவும் நீங்கியது.

அமெரிக்காவில் பாரதி அன்பர்

ஐக்கிய அமெரிக்கா தேசத்துக்கு விஜயம் செய்பவர்களில் பெரும்பாலோர் அரசாங்க விஷயமாகவோ, வர்த்தக சம்பந்தமாகவோ, உயர் கல்விக்காகவோ போகிறவர்களாகத் தான் இருப்பார்கள். அவர்களுக்கு என்று ஒரு தனிக் குறிக்கோளும் வட்டமும் உண்டு. அதற்குள்ளேயே நின்றுவிட்டுக் குறிப்பிட்ட அனுபவங்களைப் பெற்றுத் திரும்புகிறார்கள்.

ஆனால் பொதுப்படையாக அமெரிக்கா வாழ் மக்களின் பல பிரிவினரையும் கவனித்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் ரசனையையும் பழக்க வழக்கங்களையும் தெரிந்து கொள்வதற்கான அதிக வாய்ப்புடன் அந்த நாட்டுக்குச் சென்று வருபவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவு. அந்தக் குறைந்த நபர்களில்கூடப் பெரும்பாலோருக்குத் தங்கள் அநுபவத்தையும், தாங்கள் கண்டு மகிழ்ந்த சம்பவங்களையும் சுவைபட எடுத்துச் சொல்லும் திறமையோ, பொறுமையோ தேவையான அளவுக்கு இருக்காது. இதற்கு விதிவிலக்கு சில ஆண்டுகளுக்கு முன் ஐக்கிய அமெரிக்க நாட்டுக்குப் போய்ச் சில மாதங்கள் தங்கிவிட்டுத் திரும்பிய பாரதி பக்தர் திரு ஆர். ஏ. பத்மநாபன் அவர்கள். சில மணி நேரங்கள் அவருடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு விடைபெற்றபோது அமெரிக்கா போய்த் திரும்பியவர் அவரா? நாமா? என்ற உணர்ச்சி ஏற்படும் அளவுக்குத் தாம் கண்டவற்றைச் சுவைபடச் சொன்னார்.

அமெரிக்காவுக்குப் பாரதத்திலிருந்து போகிறவர்களுக்கு அவர் சென்ற காலத்தில் எழுபத்தி ஐந்து ரூபாய்கள் (ஸ்டெர்லிங் மதிப்பு) தான் கொண்டு போக அனுமதி உண்டு. நண்பர் ஒருவர் இரண்டு சாதாரண சில்க் புடவைகளைப் பார்சல் பண்ணாமலே கொடுத்தனுப்பினார், அங்குள்ள நபருக்கு அன்பளிப்பாக. மற்றொரு நண்பர் நன்றாக மூடி முத்திரையிடப்பட்ட சிறு டப்பா ஒன்றையும் அமெரிக்க அன்பர் ஒருவரிடம் சேர்ப்பிக்கும்படி இங்கிருந்து ஒப்படைத்தார்.

விமானப் பிரயாணமானாலும் கெய்ரோ, பாரீஸ் இரு இடங்களிலும் சற்றுத் தங்கி உணவு முடித்துக்கொண்டு பத்மநாபன் நியூயார்க் நகரில் போய் இறங்கியபோது காப்பி சாப்பிடக்கூட அவரிடம் அனுமதிக்கப்பட்ட ரூபாயில் மிச்சம் ஏதும் இல்லை. நல்லவேளை! விமான தளத்தில் சக பிரயாணி ஒருவர் உபசாரமாகப் பத்மநாபனைக் காப்பி சாப்பிட அழைத்தார். அவரும் பிகு இல்லாமல் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

வெளி நாடுகளிலிருந்து வரும் பிரயாணிகளின் சுங்கப் பரிசோதனையை நியூயார்க் நகரிலேயே முடித்து விடுகிறார்கள்.

''கையில் என்ன?'' என்று அந்தப் புடவைகளைப் பார்த்துக் கேட்டார் சுங்கப் பரிசோதகர். பத்மநாபன் அதை இடுப்பில் வைத்துக் காட்டி மாதர்கள் அணியும் ஆடையென்றும் நண்பர் வீட்டுக்கு அன்பளிப்பாகக் கொண்டு போகப்படுகிறது என்றும் சொன்னார். சிறு தகர டப்பா பார்சலில் என்ன இருக்கிறது என்று அவருக்கே தெரியாதாகையால் அதை அங்கேயே திறந்தார்கள். ஒரு சிறு கதர்த் துண்டு இருந்தது.

''இவைகளுக்கு நீங்கள் சுங்கவரி கட்டியாக வேண்டும்'' என்று கூறி அதிகாரிகள் ஒரு தொகையைக் குறிப்பிட்டார்கள். பத்மநாபனிடம்தான் காப்பி சாப்பிடக் கூடச் சில்லறை இல்லையே! அந்த உருப்படிகள் அங்கேயே இருக்கட்டுமென்றும் வாஷிங்டன் போனவுடன் பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்வதாகவும் சொன்னார்.

அவருக்குத் தெரியாத விஷயங்கள் இரண்டு. அந்தத் துணிகள் அவருடைய சொந்த உபயோகத்துக்கென்று சொல்லியிருந்தால் சுங்கவரி கிடையாது. 'இது ஒருவகை லுங்கி' என்று சொன்னாலும் அவர்கள் நம்பியிருப்பார்கள். இரண்டாவதாக இறக்குமதியாகும் துணிகள் மீது அங்கு தீவிரமான கண்காணிப்பு உண்டு.

அந்தச் சுங்க அதிகாரி பெருந்தன்மையுடையவர். அந்த வெளிநாட்டுப் பிரயாணி வெள்ளை உள்ளத்துடன் அந்தத் துணிகளைக் கொண்டு வந்திருக்கிறார் என்று தெரிந்ததும் 'இனி வரும்போது இப்படித் துணிகளைக் கொண்டு வராதீர்கள். இப்போது பரவாயில்லை. வரி இல்லாமல் எடுத்துப் போங்கள்' என்று அனுதாபத்துடன் சொன்னாராம்.

பத்மநாபன் தமக்குள் சிரித்துக் கொண்டார். என்னவோ இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை பாரதத்திலிருந்து பறந்து வந்து இறங்குபவர் போலல்லவா



டெய்லி சுனின் பத்திரிகை பிரசுரகர்த்தர், நிர்வாக ஆசிரியரோடு திரு பத்மநாபன்



'டைம்' பத்திரிகைக் காரியாலயத்தைப் பார்வையிடுகிறார்.

அவரை நினைத்துக் கொண்டார் சுங்க அதிகாரி!

அவர் வாஷிங்டன் நகர் போய் இறங்கியதும் செய்த முதல் காரியம் செலவுக்குப் பணம் கடன் வாங்கியதுதான். அப்புறம்தான் இந்தியத் தூதுவராலயத்துக்குப் போய்ச் சுங்கம் சம்பந்தமான விஷயங்களை யெல்லாம் தெளிவு படுத்திக் கொண்டார்.

எத்தனையோ விஷயங்களில் வாஷிங்டன் நகரில் அவர் கவனத்தைக் கவர்ந்தது 'பன்னிரண்டரையாவது தெரு' என்னும் தெருவாகும். தெருவுக்கெல்லாம் நம்பர் தானும். 'இது என்ன அரை குறைத் தெரு?' என்று திகைத்தபோது அவருக்கு விளக்கம் கிடைத்தது. பதின்மூன்று என்ற நம்பர்தான் மேலை நாட்டவர்களுக்கு அபசகுனமான எண்ணிக்கை யாயிற்றே! ஆகையால் அந்த எண்ணிக்கையை ஒரு தெருவின் தலையில் சுமத்துவதற்குப் பதிலாகப் பன்னிரண்டு, பன்னிரண்டரை, பதினாறு என்று தாவி விட்டார்கள்!

பத்மநாபன் 'க்ளெயர்மாண்ட்' என்னும் ஒரு சிற்றூரில் சுமார் இரண்டு வாரங்கள் போய்த் தங்கி யிருப்பதாக ஏற்பாடாகியிருந்தது. அந்த ஊர்க்காரர்கள் அவருக்கு ஹோட்டல்களில் தங்குமிடம் பிடிப்பதற்குள் திணறிப் போனார்களாம். இத்தனைக்கும் 'டுவின்வாலி ஸ்டேட்' என்று குறிப்பிடப்படும் அந்தப் பகுதியில் 'நிறபேதம்' தெற்குப் பிராந்தியங்களைப் போல் அத்தனை தீவிரமாக இல்லை. ஓட்டல்காரர்கள் பத்மநாபனை எங்கள் ஓட்டலில் அனுமதிக்க மாட்டோம் என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஆனாலும் வரப் போகும் விருந்தாளி எவ்வளவு தூரம் கருப்பாக இருப்பார், கொஞ்சம் கருப்பாக இருப்பாரா, அழுத்தமான கருப்பாக இருப்பாரா என்றெல்லாம் ஆட்சேபனை எழுப்பித் தட்டிக் கழித்தார்கள். இது பற்றியெல்லாம் அவர் அங்கு இருந்தவரையில், அவர் மனம் புண்படக் கூடாதென்பதால் திரு பத்மநாபனிடம் யாரும் எதுவும் பிரஸ்தாபிக்கவில்லை. அவர் அங்கு போய் இரண்டு வாரங்கள் தங்கியிருந்து அந்த ஊர்க்காரர்களின் அன்புக்குப் பாத்திரமாகி விடை பெற்றுத் திரும்பிய பிறகு, 'க்ளெயர்மாண்டி லிருந்து வெளியாகும் 'சுகின்' என்னும் தினசரிப் பத்திரிகையில் அவருக்கு இடம் பிடிக்கும் முயற்சியில் பட்ட கஷ்டங்களையும் ஹோட்டல்காரர்களின் மனோபாவங்களையும் பற்றிச் சுவாரஸ்யமாக ஒரு கட்டுரை எழுதி அதன் ஆசிரியர் பத்மநாபனுக்கு அனுப்பி வைத்தார். கடிதத்தில் அமெரிக்காவைப் பற்றித் தங்கள் மனத்தில் பதிந்திருக்கக்கூடிய அபிப்பிராயங்களுடன் இதையும் தாங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தத் தலையங்கம் வெளியாகியிருக்கும் பத்திரிகைப் பிரதியொன்றை அனுப்புகிறேன் என்று குறிப்பிட்டிருந்தார். ஒளிவு மறைவு இன்றி, உண்மையை மதிக்கும் அவர்களுடைய பண்பை மிகவும் வியந்தார் திரு பத்மநாபன். "அமெரிக்காவில் சிந்தனை செய்யும் அறிவாளிகள் அனைவருமே நிற பேதத்தை வெறுக்கிறார்கள். அது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. ஆனால் நிற பேதம் மறையும் வேகம் நீக்ரோக்களுக்குப் போதவில்லை. காலதாமதமாவதை அவர்களால் பொறுக்க முடியவில்லை. கலகங்கள் விளைகின்றன. இதுதான் அங்கு இன்றைய பிரச்னையாகும்" என்றார் பத்மநாபன்.

'க்ளெயர்மாண்ட்' ஊரின் மொத்த ஜனத்தொகை சுமார் பதின்மூன்றாயிரம். அந்த ஊர் மக்களுக்காக உள்ளூரில் பிரசுரிக்கப்படும் 'சுகின்' தினசரி பத்தாயிரம் பிரதிகள் விநியோகமாகின்றன. உள்ளூர்ச் செய்திகளுக்குத்தான் முக்கியத்துவம். அந்த ஊர் வாசிகளின் வீடுகளில் நடக்கும் கல்யாணம், பிரசவம் எல்லாமே கண்டிப்பாக இடம் பெறுகின்றன. பத்மநாபன் அவர்களுடன் நடந்த பேட்டியும், அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பிய செய்தியும் ஒரே அளவான அச்சில் முதல் பக்கத்தில் வெளியானது என்றால், அவர்கள் உள்ளூர் நிகழ்ச்சிகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை ஊகித்துக்கொள்ளலாமே! அந்தப் பத்திரிகைக் காரியாலயத்திலேயே இரண்டு வாரங்கள் பணி செய்து அனுபவம் பெறும் வாய்ப்பு பத்மநாபனுக்குக் கிடைத்தது. சர்வதேசீய, தேசீயப் பத்திரிகைகளைத் தவிர இதுபோன்ற பிராந்தியப் பத்திரிகைகள் நம் நாட்டிலும் நிறையத் தோன்ற வேண்டும் என்று ஆசைப்படுகிறார் திரு பத்மநாபன்.

அமெரிக்காவில் இந்த மாதிரி சிறு பத்திரிகை ஸ்தாபனங்களோடு மாத்திரம் அவர் தொடர்பு கொள்ளவில்லை. ராட்சத வேகத்தில் லட்சக்கணக்கான பிரதிகள் விநியோகிக்கும் 'டைம்', 'லைப்' சஞ்சிகைகளின் காரியாலயத்துக்கும் போனார். அவரை அழைத்திருந்த அந்தப் பத்திரிகை ஸ்தாபனத்தார் அவரை அவருடைய தேசீய உடையிலேயே வரும்படி அழைத்திருந்தனர். பத்மநாபன் ஜோராக ஒரு நான்கு முழம் கதர் வேட்டியையும் கதர் ஜிப்பாவையும் அணிந்து கொண்டு கிளம்பிவிட்டார். பத்திரிகை ஸ்தாபனத்தினருக்குப் பரம சந்தோஷம். ஆனால் நியூயார்க் நகரத் தெருவில் இப்படி ஜிப்பாதாரியாக நடக்கும் உருவத்தைப் பார்த்த அமெரிக்க மாது ஒருத்திக்கு மயக்கம் போடும் நிலையே ஏற்பட்டு விட்டதாம்!

''லைப்', 'டைம்' பத்திரிகைக் காரியாலயங்களில் உலக நாடுகள் சம்பந்தப்பட்ட பல விஷயங்களையும் ஆச்சரியப்படும் வகையில் சேர்த்து அகர வரிசையாக வைத்திருக்கிறார்கள். எந்த நிமிஷத்திலும் எந்தப் பிரபலஸ்தரையோ நகரத்தையோ அல்லது நாட்டையோ பற்றிய தகவல்களையும் எடுக்கலாம்'' என்றார்.



அமெரிக்க ரயிலில் திரு. பத்மநாபன்;

நியூயார்க் நகரத் தெருக்கள் எல்லாம் கோடு போட்டாற் போல் குறுக்கேயும் நெடுக்கேயும் போகின்றன. அநேகமாக எல்லாத் தெருக்களிலும் பஸ்கள் ஓடுகின்றன. ஆனால் ஒரு பஸ்ஸிலாவது கண்டக்டர் கிடையாது. டிக்கட் கொடுப்பதற்கென்று பஸ்களை ஆங்காங்கு மணிக்கணக்கில் நிறுத்துவதும் கிடையாது. கதவுகளை இருந்த இடத்திலிருந்தே திறந்து மூடும் விசை டிரைவருக்குப் பக்கத்திலிருப்பதால் நிற்கும் இடம் வந்ததும் விசையை அழுத்துகிறார். முன் பக்கமும் பின் பக்கமும் கதவுகள் திறந்து கொள்கின்றன. பிரயாணிகள் முன் பக்கமாக ஏறி டிரைவர் பக்கத்திலிருக்கும் ஒரு யந்திரத்தில் குறிப்பிட்ட சென்ட் நாணயங்களைப் போட்டு விட்டு ஆசனங்களில் உட்கார வேண்டும். டிக்கட் கொடுப்பது என்று கிடையாது. எங்கு ஏறி எங்கு இறங்கினாலும் ஒரே கட்டணம்தான்.

நியூயார்க் நகரமே ஒரு தீவுதானே! அதை மற்றப் பகுதியுடன் இணைக்கப் பிரம்மாண்ட பாலங்கள் உண்டு. அவைகளில் ஜார்ஜ் வாஷிங்டன் பாலமும் ஒன்று. அந்தப் பாலத்தின் அமைப்பை விவரிக்க ஓர் உத்தியோகஸ்தர் வந்து சேர்ந்தார். பத்மநாபனும் அவருடைய நண்பர்களும் போயிருந்தார்கள். பொதுவாக அமெரிக்கர்களுக்குப் புள்ளி விவரங்களில் அலாதி மோகம். அந்த உத்தியோகஸ்தரும் ஒரு புள்ளி விவர மோகம் கொண்டவர். பாலத்தையும் அதற்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் இரும்பு, கம்பி முதலியவற்றைப் பற்றியும் பேச ஆரம்பித்தார்.

''இப்பிரம்மாண்டமான கம்பிகள் இருக்கின்றனவே! இவை பல சிறிய கம்பிகளைச் சேர்த்து முறுக்கப்பட்டவை! அவைகளைப் 'பிரித்துத் தனியாக நீட்டினால்.....'' உத்தியோகஸ்தரின் விளக்கத்தைச் சிரிப்பொலி குறுக்கிட்டு நிறுத்தியது. இப்படி விவரிப்பவர்கள் எப்படி முடிப்பார்கள் என்று எல்லோரும் ஊகித்துக் கொள்ளலாமே!


''அந்தக் கம்பியினால் இந்த உலகத்தை இருபத்தி ஐந்து முறை சுற்றி முடிக்கப் போடலாமாக்கும்?'' என்றார் ஒரு முந்திரிக்கொட்டை நபர் கிண்டலாக. ''இல்லை, சந்திரனைப் போய்த் தொடும்!'' என்றார் இன்னொருவர்.

அந்த அதிகாரி ஒரு கணம் சும்மா இருந்து விட்டு ''நான் அப்படிச் சொல்ல வரவில்லை. அந்தக் கம்பிகளைப் பிரித்துத் தனியாக நீட்டினால் இந்தப் பாலம் தகர்ந்து விழுந்து விடும் என்று சொல்ல வந்தேன்'' என்று நிதானமாகக் கூறினார்! அமெரிக்கர்களின் நகைச்சுவைக்கு இது ஒரு நல்ல உதாரணம் தானே!

தனியார் துறையில் இயங்கும் அமெரிக்க ரயில் பிரயாணம், கட்டணம் சற்று அதிகமாக இருந்தாலும் சௌகரியமானதுதான். இதைத் தவிர புல்மென் ஸ்தாபனத்தினர் செய்து தரும் சௌகரியங்கள் வேறு. அதிகக் கட்டணம் செலுத்தினால் அநேகமாக எல்லா ரயில்களிலுமே புல்மென் வசதிகளைப் பெறலாம். அந்த நாட்டில் தங்கள் சாமான்களைத் தாங்களே தூக்கிக்கொண்டு போக யாரும் தயங்குவதில்லை. அந்தஸ்துக் குறைவாகவும் நினைப்பதில்லை. அதிகப்படியான சாமான்கள் இருந்தால்தான் போர்ட்டர்கள் உதவியை நாடுகிறார்கள். ஒரு சாமானுக்கு அது எந்த அளவாக இருந்தாலும் போர்ட்டர் கூலி இருபத்தி ஐந்து சென்டுகள். போர்ட்டர்களுடன் வாய் திறந்து பேச வேண்டிய அவசியமில்லாத நாடு ஒன்று இருக்கிறதென்றால் அது அமெரிக்காதான்.

இப்படிச் சத்தமில்லாமல் சேவை செய்யும் நீக்ரோப் போர்ட்டர்களின் செல்வ நிலை எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் பத்மநாபனுக்குக் கிடைத்தது.

'க்ளீவ்லாண்ட்' என்னும் பெரிய ஸ்டேஷனில் அவர் இறங்கினார். அங்கிருந்து சுமார் பத்து மைல் தூரத்தில் உள்ள 'ஷேகர் ஹைட்ஸ்' என்னும் ஊரிலுள்ள ஒரு நண்பரைப் பார்க்கப் போக வேண்டியிருந்தது. சாமான்களைப் பிளாட்பாரத்தில் இறக்கி வைத்த போர்ட்டரிடம் 'இங்கிருந்து 'ஷேகர் ஹைட்ஸுக்கு'ப் போக டாக்ஸி ஏதும் கிடைக்குமா?' என்றார்.



அமெரிக்க ரயிலில் தனி நபருக்குப் 'புல்மென்' வசதி



''எனக்கு உட்கார இடம் கொடுக்க வேண்டு பேசாமல் பலகை மேலே ஏறிப் படுக்க வேண்டியதுதான்!''

அந்தப் போர்ட்டர் சிரித்தான். ''டாக்ஸியா? வாடகை கொடுத்துக் கட்டாதே!'' என்று சொன்னவன் சில விநாடிகள் மௌனத்துக்குப் பிறகு ''நீங்கள் சற்றுப் பொறுத்திருக்க முடியுமானால் என்னுடைய காரிலேயே உங்களை அங்கே கொண்டு போய் விடுகிறேன். என் வீடு அந்தப் பக்கம்தான் இருக்கிறது'' என்றானும். ரயில்வே போர்ட்டர் சொந்தத்தில் கார் வைத்துக்கொள்ளும் அளவுக்குச் செல்வம் கொழிக்கும் நாடு அது!

'கான்ஸாஸ் ஸிட்டி' ரயில் நிலைய ஹாலில் உட்கார்ந்து ஒரு நண்பருடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அவர் பிரயாணம் செய்ய வேண்டிய ரயில் பெட்டியில் வந்து உட்கார்ந்து விட்டார். வெகு நேரம் கழித்துத்தான் அவருடைய மழைக் கோட்டை ஹாலிலேயே விட்டுவிட்டது நினைவுக்கு வந்தது. அவசரம் அவசரமாக வெளியே வந்து பார்த்தார். கோட் பத்திரமாக அவர் விட்டிருந்த இடத்திலேயே இருந்தது!

பிளாட்பாரத்துக்குள் வந்து ரயில் கிளம்புகிறவரை பிரயாணம் செய்பவர்களுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு வண்டி புறப்பட்டதும் கைகளையும் கர்சீபுகளையும் ஆட்டி விடை கொடுக்கும் பழக்கத்தை அங்கே காண முடியாது. வண்டிகள் புறப்படும்போது பிளாட்பாரங்கள் வெறிச்சோடித்தான் இருக்கும். வழியனுப்ப வருபவர்களெல்லாம் ஸ்டேஷனை ஒட்டியிருக்கும் பெரிய ஹாலிலேயே விடைபெற்றுக் கிளம்பி விடுவார்கள்.

அமெரிக்காவில் திரு ஆர். ஏ. பத்மநாபனை வெகுவாகக் கவர்ந்த இன்னொரு விஷயம் அங்கு நகரசபைகளில் பேச அவற்றின் அங்கத்தினர்களுக்கு மட்டுமின்றிப் பொதுஜனங்களுக்கும் உரிமை உண்டு என்பதுதான். ஒருவர் நகரசபையின் ஒரு செயலால் தமது நலன் பாதிக்கப்படுகிறது என்று கருதினால், நகரசபைக் கூட்டத்தில் அந்த நபர் தமது ஆட்சேபணைகளை எடுத்துச் சொல்லலாம்.

உணவு விஷயத்தில் சைவமாகவே காலம் கழிக்க அங்கு வசதி உண்டு. ஆனால் உணவு கொண்டுவரச் சொல்லும்போது வார்த்தைகளைக் கவனத்துடன் சொல்ல வேண்டும். 'வெஜிடபிள் சூப்' என்று சொன்னால் மாத்திரம் போதாது. எந்த வெஜிடபிள் சூப்பிலும் அஸ்திவாரப் பொருள் புலால்தான். ஆனால் 'வெஜிடேரியன் வெஜிடபிள் சூப்' என்று அழுத்தமாக நீட்டிக் குறிப்பிட்டால் சுத்த மானதனிக் காய்கறி உணவு கிடைக்கும்!

காமிராவைக் கையில் வைத்திருப்பவர்களுக்கு எங்கும் வழியுண்டு என்பதைப் பத்மநாபன் உணர்ந்துகொள்ள பாஸ்டன் நகரில் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. ஒரு நாள் மாலை. அவர் எதிர் வாடையிலுள்ள வாசல் வழியாக ரயில் நிலையத்துக்குப் போய்ப் பக்கத்து ஊருக்கு ரயில் பிடித்தாக வேண்டும். ஆனால் அவரைத் தெரு தாண்ட விடாதபடி தீயணைப்புப் படையினரின் விழா ஊர்வலம் மைல் கணக்கில் இடைவெளி விடாமல் வந்து கொண்டிருந்தது. அவருக்கோ ஊர்வலத்தை ஊடுருவி மறுபக்கம் போகத் தயக்கம். பொழுது போகாமல் கையிலிருந்த காமிராவைக் கொண்டு ஊர்வலத்தைப் படம் பிடிக்க ஆரம்பித்தார். 'நேரமாகிக் கொண்டிருக்கிறதே, எதிர்ப்பக்கம் எப்படிப் போவது?' என்று முணுமுணுத்தார். அவர் அவஸ்தையைப் புரிந்துகொண்ட பக்கத்திலிருந்த ஒரு வேடிக்கை பார்ப்பவர், ''காமிராவை வைத்துக்கொண்டா குறுக்கே போகத் தயங்குகிறீர்கள்? ஒரே பக்கத்திலிருந்து படம் எடுக்காமல் எதிர்ப் பக்கமும் போய் நின்று படம் எடுத்தால் மாறுபட்ட படங்கள் கிடைக்குமே!'' என்று யோசனையை வெளியிட்டார். அவ்வளவுதான்; பத்மநாபன் ஊர்வல வரிசையை நெருங்கியபோது அவர் காமிராவைக் கண்டு ஊர்வலம் இடைவெளிவிட்டது. மறுபக்கம் பாய்ந்து ஓடி ரயிலையும் பிடித்து விட்டார்! காமிராவுக்கு அத்தனை மதிப்பு!

இப்படி அவசர நேரங்களில் ரயில்களையும் பஸ்களையும் பிடித்தது போல் அவகாசம் இருந்தபோதெல்லாம் அவர் நிறைய வர்ணப் புகைப்படங்களையும் பிடித்துத் தள்ளினார். அவைகளை அங்கேயே கலர் ஸ்லைடுகளாக மாற்றினார். அறுநூற்றுக்கும் மேலான அமெரிக்க வாழ்க்கைக் காட்சிகள். பத்மநாபன் அமெரிக்காவிலிருந்து திரும்பியபோது அமெரிக்காவையே கொஞ்சம் பெயர்த்துத் தம்முடன் இந்தப் படங்கள் மூலம் கொண்டு வந்துவிட்டார் என்றால் மிகையாகாது.

நயாக்ரா நீர்வீழ்ச்சி முன்னால் அவர் போய் நின்றபோது

'வெடிபடு மண்டத்திடிபல தாளம் போட—
வெறும்
வெளியில் இரத்தக் களியொடு பூதம் பாட'

என்னும் பாரதியாரின் 'ஊழிக் கூத்து' அடிகள் அவருக்கு நினைவு வந்ததாம்! பாரதியாரை எங்கும் காணக்கூடிய பக்தரல்லவா அவர்!

—கோமதி ஸ்வாமிநாதன்



அருணகிரிநாதர்

திரை: புகழ் அழியாதது என்பார்கள். ஆனால் என் வரை அது பொய்த்து விட்டது. கைகொடுத்த தெய்வம் கொடுத்த புகழ் இவ்வளவு சீக்கிரமாகக் கைவிட்டுப் போகும் என்று நான் நினைக்கவில்லை. என்ன செய்வது?

சௌந்தரராஜன்: தமிழ்த் திரைப்படக் கதாநாயகர்களுக்கு இரவல் குரல் கொடுத்து, பாட்டிலிருந்து அவர்கள் யார் என்று அறியும் அளவுக்குப் புகழ் சம்பாதித்தேன். ஆனால் ஆசை விடவில்லையே. முழுப் பெருமையும் என்னைச் சேரவில்லையே?—பின்னணியிலேயே எவ்வளவு காலம் இருப்பது? அவர்களில் ஒருவராக எனக்குத் தகுதியில்லையா என்ன? என்ன சிரிக்கிறீர்கள்? அருணகிரி நாதரைப் பார்த்து விட்டீர்களா? முற்பகுதியில் ராதாவைப் பின்பற்ற முயற்சி செய்திருக்கிறேன். அது தவறு? ஆனால் அநுபவம் புதுமை என்று தெரிகிறது. ரத்தக் கண்ணீர் ராதா எங்கே? நான் எங்கே? என் அக்காள் என்னைச் சொல்லால் கொல்லும் கட்டத்திலும், முருகன் எனக்கு அருளும் காட்சியிலும் நடிப்புத் துடிப்பையும், பாசத்தையும், பச்சாத்தாபத்தையும் பக்தியையும் காட்டிச் சிறப்பூட்டவில்லை; புல்லரிக்கச் செய்ய வில்லை. தப்புத்தான். குரலையும் தாடியையும் வைத்துக் கொண்டு சமாளிக்க முயன்றேன். முடியவில்லை. 'சும்மா இட' என்று முருகன் சொன்னதை எடுத்துக் கொள்ளச் சொல்கிறீர்களா?

ராதா: அருணகிரி, என்னை ஏண்டா இந்த வம்பில் இழுக்கிறாய்? என்னமோ காளி-பராசக்தி என்று கூப்பாடு போடுகிறார்களே, அதையும் ஒரு கை பார்க்கலாம் என்று பார்த்தேன். எனக்கும் அதற்கும் ரொம்ப தூரம் என்று தெரிகிறது. தோற்றுவிட்டேன் என்று ஒப்புக்கொள்கிறேன். ஆளை விடு.

சாரதா: நீங்களே இப்படிச் சொன்னால் நான் என்ன சொல்வது! கொடுக்கப்பட்ட பாகம் என்னவோ ரொம்பக் குறைவு. அதைச் சரிவரச் செய்யப் பாடுபட்டிருக்கிறேன். அது உண்மை. ஆனால் அந்தச் சிரிப்பு இருக்கிறதே. அருணகிரி நான் அவரைக் கணவனாக மதிக்கவில்லை என்ற கட்டத்தில் அந்தச் சிரிப்பு, வேதனைச் சிரிப்பாக — புண்பட்ட உள்ளத்தில் வெடிக்கும் சிரிப்பாக இல்லை. உணர்ச்சிகரமாக இருக்க வேண்டிய உச்ச கட்டம் பிசுபிசுத்துவிட்டது. ஆனால் நான் ஒன்றும் தெரியாத பேதையாகப் படுக்கையறைக் காட்சியிலும் (அது இல்லாத தமிழ்ப் படம்தான் கிடையாதே). சபதம் செய்யும் காட்சியிலும் நன்றாக நடித்திருக்கிறேன் என்று கூறுகிறீர்களா? ரொம்ப நன்றி. என்ன அத்தாட்சி? சிரிக்கிறீர்களா?

சரோஜா: போடி, வேஷப் பொருத்தம் எனக்கு இருக்கிறது. ஆனால் தம்பியிடம் பாசத்தைக் காட்டும் இடத்தில் நடிப்பு களை கட்டவில்லை. கூலி வேலை செய்வது, கஞ்சி காய்ச்சுவது ஏதோ சமூகப் படக் காட்சியாகவே தோன்றுகிறது. ஆனால் தம்பிக்கு என்னையே கொடுக்கும்படி இல்லையே என்ற கட்டத்தில் சரிவரச் செய்திருப்பதாகத் தோன்றுகிறது. பிறகு தம்பியை வேண்டி என்னை முருகனடி சேர்த்துக் கொள்ளும்படி கேட்கும் கட்டத்தில் பக்தி இல்லை. தம்பி அருணகிரியை வற்புறுத்திப் பிடிவாதம் பிடிக்கிறதுபோல இருக்கிறது. எனக்கே பிடிக்கவில்லை, போங்கள்.

மனோகர்: ஏதோ சிணுக்காரன் வருகிறானே என்று மொட்டை அடித்துக் கொண்டேன்! அதை உபயோகிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. நழுவ விடவில்லை.

வசனகர்த்தா: என்ன நீங்களே பேசிக் கொண்டு போகிறீர்கள்! வசனம் என்னுடையது. இந்த மாதிரிப் படங்களுக்கு வசனம் எழுதுவது சற்றுச் சிரமம்தான். வசனத்தை விடப் பாட்டுக்கள் நன்றாக இருப்பதாகத் தோன்றுகிறது. எப்படியோ என் வேலையை நான் கச்சிதமாக முடித்து விட்டேன்.

டைரக்டர் ராமண்ணா: இந்த மாதிரிப் படங்களில் திறமை காட்ட என்ன சந்தர்ப்பம் இருக்கிறது? ஓட்ட வேண்டியிருக்கிறது. டைரக்ஷன் மிகச் சாதாரண ரகம். நானே ஒப்புக் கொள்கிறேன்.

ரசிகன்: உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. காலம் மாறிவிட்டது.

பரிசு பெற்ற பேயர்:

செ. வெ. சௌந்தரம்
நெ. 10, மோகன்தாஸ் லேன்
சென்னை — 2



பாமினிப் பாவை

5. கூண்டுக் கிளி

கூட்டுண்டு நின்ருள் அந்தக் காரிகை. அவள் முகத்தில் பீதியில்லை. பார்வையில் பயமில்லை. பலத்த போராட்டத்துக்குப் பிறகே அவள் கட்டுண்டிருக்கிருள் என்பதை அவள் நின்ற கோலம் நிதரிசனமாக்கிக் கொண்டிருந்தது. கலைந்த கேசம், கசங்கிய ஆடை, சந்தன மேனியில் குங்குமத்தைத் தெளித்தது போல் ஆங்காங்கே உடல் கன்றிச் சிவந்திருந்தது. சீறிச் சினந்து நின்ருள் சிங்காரி.

அந்தக் கட்டான உடலிலே அவளைப் போலவே இளமை கட்டுக் கடங்காமல் திமிறிக் கொண்டிருந்தது. அருவருப்பும் அலட்சியமும் அவள் பார்வையில் கலவையிட்டிருந்தன. துடிப்புடன் நின்றுகொண்டிருந்த அவள் ஒரு துருக்கியப் பெண். இருபது வயதே நிரம்பிய அவளது மேனி எழிலை அவள் அணிந்திருந்த இறுக்கமான உடை எடுப்பாகக் காட்டிக் கொண்டிருந்தது. தலைக்கு மேலாக வந்து முகத்தை மறைத்திருக்க வேண்டிய சல்லாத் துணியோ தோளிலே சரிந்து கிடந்தது. அந்நிய ஆடவரின் முன்னே நாணிக் கவிழ்ந்திருக்க வேண்டிய தலை, நடுக்கமின்றி நிமிர்ந்திருப்பதிலிருந்து நிலைமை கட்டு மீறிப்போய் விட்டதென்பதை உணர்ந்து கொண்டார் ராயர்.

அந்தரங்க ஆலோசனைக் கூடத்தினுள் அடியெடுத்து வைத்த ராமராயர் சுற்றுமுற்றும் பார்த்தார். கைதியாக நின்றிருந்த காரிகையைத் தவிரக் கூடத்தின் ஒரு பக்கத்தில் வேங்கடாத்திரியும் நின்று கொண்டிருந்தான். இடையிலுள்ள உடைவாளிலே ஒரு கையூன்றி நின்ற அவன், அண்ணனைக் கண்டதும் உடலைச் சற்றே வளைத்துச் சிரம் தாழ்த்தி வணங்கி வரவேற்ருன்—மிடுக்காக!

பகைவரைத் தம் பார்வையாலேயே கலங்க வைக்கும் ராம ராயரையே அந்தப் பாவை தன் பார்வையால் திகைக்க வைத்தாள். அவளது பேசும் விழிகளை, இல்லை, அனல் வீசும் விழிகளைக் கண்ட ராயர் தாம் பேசாமல் தளபதியை நோக்கினர்.

மகாமண்டலேசுவரரின் குறிப்பறிந்த வேங்கடாத்திரி முன்னல் வந்து, நிலைமையை விளக்கினன். "இன்று மாலை தங்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிய விருந்தாளி அலி ஆதில்ஷாவின் பரிவாரங்களோடு நம் அந்தப்புரத்திலிருந்து இவள் பதுங்கிப் பதுங்கித் தப்பிச் சென்றிருக்கிருள். விஷய

கௌசிகன்

மறிந்த நம் வேவுகாரர்கள் இவளை வளைத்துப் பிடித்துக் கொண்டு வந்துவிட்டார்கள்."

"இது ஆதில்ஷாவுக்குத் தெரியுமோ?" என்று கேட்டார் ராமராயர்.

"அவ்வளவுக்கு நம் காவல் படைவீரர்கள் அரசியல் பண்பறியாதவர்களா என்ன? இவள் தப்பி ஆதில்ஷாவின் பரிவாரங்களோடு சென்றதோ, இவளைத் திரும்பவும் இங்கே கொண்டு வந்ததோ எதுவுமே தெரியாது ஆதில்ஷாவுக்கு" என்ருன் வேங்கடாத்திரி.

"பெண்ணே, யார் நீ...?" என்று திரும்பினர் ராயர்.

கோபத்தில் குமுறிய சுந்தரியின் கந்தரக் குரலும் கோபத்தில் குமுறியபடி வெளியாயிற்று: "உங்கள் கைதி! மறுபடியும் கைதியாகவே இங்கே வாழவேண்டிய துர்ப்பாக்கியத்தை அடைந்தவள்" என்ருள் அவள் எங்கோ பார்த்துக் கொண்டு.

பேசியவள் பெண்—அதுவும் பருவப் பெண். வேற்று நாட்டினள் என்ற காரணமோ என்னவோ; கோபத்தினல் சிவந்திருக்கவேண்டிய ராயரின் முகத்தில் இளஞ்சிரிப்பு மலர்ந்தது. "என் கேள்விக்கு உன் விளக்கம் பொருத்தமாக இல்லையே பெண்ணே" என்றவர், "நம் அந்தப்புரத்தில் யாருடைய பணிப்பெண்ணுக இருந்தவள் இவள்?" பார்

அவளை அவள் மீது பதித்திருந்தாலும் கேள்வியை வேங்கடாத்திரிக்கே விடுத்தார் ராயர். தளபதி தகவல் தருமுன் அந்தக் காவல் கைதி கலகலவென்று சிரித்தாள்.

"ஹ... ஹ... ஹா! உண்மையிலேயே நீங்கள் என்னை மறந்துவிட்டீர்களா? உங்களால் மறக்க முடிந்ததா? மறந்துபோகக் கூடிய காரியத்தையா நீங்கள் செய்தீர்கள்?" வெறிச் சிரிப்பை நிறுத்தின அவள் கண்களில் புனல் பொங்கி நிரம்பியது. "ஆனால் நான் எதையும் மறந்து விடவில்லை; மறக்கவும் மாட்டேன். உங்களையும் மறக்க விடமாட்டேன்!" என்று குரல் கம்மக் கூறிய அவள் அடுத்த விநாடியே கோபத்தீயில் கண்ணீர் உலரக் கம்பீரமாகக் காட்சியளித்தாள்.

எதையும் சுலபத்தில் மறக்காத குணம் படைத்த ராமராயர் அந்த மங்கை போட்ட புதிரைக் கேட்டு மயங்கித்தான் போனார். மகாமண்டலேசுவரரின் புருவங்கள் நெரிந்தன. அண்ணாவின் குழப்பம் வேங்கடாத்திரிக்கே வியப்பாக இருந்தது. 'உண்மையாகவே ஆயிஷாவை அண்ணா மறந்துதான் விட்டாரா?' அவனால் நம்பவே முடியவில்லை.

"காலஞ்சென்ற இப்ராஹிம் ஆதில்ஷாவின் சகோதரன் அப்துல்லாவைக் கருவியாகக் கொண்டு போர்ச்சுகீசியரின் பக்க பலத்துடன் பீஜப்பூரின் ஆட்சியைக் கைப்பற்றப் புரட்சிக்காரர்கள் புறப்பட்டபோது இப்ராஹிம் நம் உதவியை நாடி ஓடி வந்தாரே...."

"ஆ!... ஆம்! நினைவுக்கு வந்துவிட்டது" என்று வேங்கடாத்திரிக்குக் கையமர்த்தி விட்டுப் பேசலானார் ராமராயர். "பாண்டாக் கோட்டையைக் காத்து நின்ற மூஸ்தபா கானின் மகளல்லவா நீ... உன் பெயர்கூட ஆயிஷாதானே?" என்றார். அவளைத் தெரிந்து கொண்ட மகிழ்ச்சியினால் மலர வேண்டிய அவரது மதிமுகம் ஏனோ மங்கியது.

"ஆம், அதே ஆயிஷாதான்! கடமைக்காகப் போரிட்ட குற்றத்துக்காகப் படுகொலை செய்யப்பட்ட தந்தையையும் கணவனுக்காக ஆவி பிரிந்த அன்னையையும் எண்ணி எண்ணி ஏங்கியபடியே அந்நிய நாட்டில் அடிமையாக வாழும் அதே ஆயிஷாதான்." அவள் குரலில் அழுகை கலந்தது.

ஆயிஷாவின் அருகில் நின்றுகொண்டிருந்த இரண்டு காவல் கன்னிகளையும் நோக்கிச் சைகை செய்தார் ராமராயர். உடனே அவள் கைக் கட்டுகள் அவிழ்க்கப்பட்டன. தோளிலே துவண்டு கிடந்த துணியை எடுத்துத் தலை மீது போர்த்திக் கொண்ட ஆயிஷாவிடம் பெண்மைக்கே உரிய நாணம் வந்து புகுந்து கொள்ளைப் பொலிவோடு விளங்கினாள்.

"மன்னர் சதாசிவராயரின் அந்தப்புரத்திலே அவரது சௌகரியங்களைக் கவனித்துக் கொள்ளும் பணிப் பெண்களிலே ஒருத்தியாக ஆயிஷாவை அனுப்பினோம் என்று நினைக்கிறேன்" என்று தம்பி வேங்கடாத்திரியின் பக்கம் பார்த்துக் கேட்டார் ராமராயர்.

வேங்கடாத்திரி பதில் கூற வாய் திறக்கு முன் ஆயிஷாவே பேசினாள். "மன்னரின் அந்தப்புரத்திலே ஆனந்த வாழ்க்கை வாழுவேன் என்று நினைத்தீர்களாக்கும். தங்கக் கூண்டமைத்து, வெள்ளிக் கிண்ணத்திலே, பாலும் பழமும் வைத்து வளர்த்தாலும் தன்னிச்சையாகத் திரியும் காட்டுக் கிளிக்குக் கிடைக்கும் சந்தோஷமும் மன நிறைவும் கூண்டுக் கிளிக்குக் கிடைக்குமா?"

"பறந்து திரியும் கிளியின் ஆனந்தத்தை ரசிக்கத் தெரியாமலா அதற்குக் கூண்டமைக்கிறான் மனிதன்? இல்லை, பருந்துகளுக்கு விருந்தாகும் அபாயத்திலிருந்து அதைக் காக்கவேதான் கிளியைக் கூண்டுக்குள் வைத்துப் பாதுகாக்கிறான் மனிதன்" என்றார் ராயர்.

ஆயிஷா சிரித்தாள். அதில் வேதனை கலந்திருந்தது. "பருந்திடம் கிளி பயப்பட வேண்டியதில்லை. பறக்கும் தன் இனமான அதனிடமிருந்து தப்பி வாழ அதனால் முடியும். ஆனால் பூனையை வளர்ப்பவர்கள் கிளியையும் வளர்க்க ஆசைப்படக் கூடாதல்லவா?" என்றாள் ஆரணங்கு.

ராமராயருக்கு அவள் பேச்சு எதையோ புரிய வைத்தது. ஏதுமே புரியாதது போலவும் இருந்தது. வேறு மதத்தவரான மன்னர் சதாசிவ ராயரைப் பூனைக்கு ஒப்பிடும் அந்தப் பெண்ணின் தைரியம் அவருக்குப் புதுமையாகவே இருந்தது.

இத்தனை நேரம் அவள் அங்கங்களின் அழகாராய்ச்சியில் ஈடுபட்டிருந்த வேங்கடாத்திரி, அண்ணாவையே சிந்திக்க வைக்கும்படி அவள் பேசிய போது, "ஆயிஷா! என்ன சொல்லுகிறாய் நீ?" என்று சீறினான்.

"அடிமை, நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? சொன்னால்தான் கேட்டு ரசிக்கக் கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்? மன்னர் சதாசிவ ராயர் என்னைத் தன் அருகிலேயே இருக்க வேண்டும் என்றார். முடியாது என்று சொல்லிவிட முடியுமா நான்? கூண்டுக் கிளியாயிற்றே! 'ஆடலில் வல்லவளாமே நீ, எங்கே ஆடு பார்க்கலாம்' என்று பணித்தார். ஆத்திரப்பட முடியுமா நான்? அடிமையாயிற்றே! ஆடினேன். உள்ளம் கொதிக்க, மேனி துடிக்க நான் ஆடினாலும் 'ஆஹா! அபாரம், அற்புதம்' என்று அலமந்து போய்ப் பஞ்சணையிலே மல்லாந்து கிடந்தவர்; மானே தேனே என்று பிதற்றியபடி தாவிப் பிடிக்க வந்தால் ஓடி ஒதுங்க முடியுமா? உதாசீனப் படுத்தலாமா?"

"என்ன? அப்படியா?" என்று இடைமறித்துக் கேட்டார் ராயர்.

"பின் எப்படி இருக்குமென்று எதிர்பார்த்தீர்கள்? ஆனால் இந்தத் தடவை நான் அடிமை என்பதை மறந்து தப்பி ஓடத்தான் முற்பட்டேன். அதன் பலன்? இன்று நான்கு வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் உங்கள் முன் இந்தக் கோலத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கிறேன்."

ராமராயருக்கு ஆயிஷாவின் நிலை ஒருவாறு புரிந்தபோது அவரிடமிருந்து பெருமூச்சொன்று வெளிப்பட்டது. இருந்த போதிலும் அந்தச் சூழ்நிலையில் தமது அநுதாபம் உள்பட எந்த உணர்வையும் வெளிப்படுத்துவது ராஜ நீதியாகாது எனக் கருதினார்.

"நல்லது பெண்ணே. இன்றையிலிருந்து.." ஒரு விநாடி யோசித்தார். தமது ஒன்பது மனைவிகளுள் யாரிடம் அவளை அனுப்பலாம் என்று சிந்தித்தாரோ என்னவோ! "தேவி திருமலாம்பாளின் தோழி நீ...தோழி என்பது கூடப் பொருத்தமில்லை. அந்த மூதாட்டி




புத்தம் புது தேயிலை
சுவையுள்ள தேயிலை
சிறந்த தேயிலை

டாடா-ஃபின்லே
தேயிலை

ஈடில்லாத தேயிலை!

பின்வரும் ஐந்து ரகங்களில்
கிடைக்கிறது:
ப்ரெஸ்டிஜ் டார்ஜிலிங்க்
லலித் இலைத் தேயிலை;
மிலாப் இலைத் தேயிலை;
பஹாதுர் தூள் தேயிலை;
ஷான் தூள் தேயிலை;




டாடா-ஃபின்லே தேயிலை பருகுவீர்;
உன்னதத் தேயிலை இன்பம் எய்துவீர்!

உன்னைத் தன் மகளாகவே பாவித்து அன்பு செலுத்துவார்கள். ஆகவே இனி நீ தாப மடையாதே.... தப்பி ஓட வேண்டும் என்றும் நினைக்காதே. 'நாம் அடிமை' என்ற தாழ்வு மனப்பான்மையிலும் கிடந்து தவிக்காதே. போ !'' என்று கூறினார்.

பொற்சிலை அங்கிருந்து பொன்னடி பெயர்த்து நகர்ந்தது.

தளபதி வேங்கடாத்திரியிடம் ஆயிஷாவைக் குறித்து ஏதோ சில ஏற்பாடுகளைச் செய்துவிட்டு ராமராயர் வெளியேறியபோது விஜயநகரத்தை வெண்ணிலவு தனது தண்ணொளியால் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது.



பூனை வளரும் வீட்டிலே கிளியைக் கூண்டிலடைத்தார்கள். ஒரு நாள் பூனை தன் கரத்தைக் கூண்டினுள் நுழைத்த போது, பதறிக் கதறிய கிளி சிறகடித்துப் பறந்து சென்றது கூட்டை விட்டு வெளியே. சத்தம் கேட்டு வந்த வீட்டுக்காரரோ கிளியைப் பிடித்துக் கூண்டில் அடைத்து விட்டுப் பூனையை எடுத்து அன்போடு தடவிக் கொடுத்தபடி செல்லமாகக் கடிந்து கொண்டார். இதனால் கிளியின் பீதி குறைந்தா விடப் போகிறது? இல்லை, பூனைதான் தன் பொல்லாத்தனத்தை விட்டு விடப் போகிறதா?

வேறொருத்தியாக இருந்தாலோ அல்லது வேறொரு சமயமானாலோ ராமராயர் நடந்து கொண்டிருக்கக் கூடிய விதமே வேறாக இருந்திருக்கும். தப்பிச் சென்று தன் இனத்தவர்களோடு சேர விரும்பியவளைத் தட்டிக் கொடுத்து ஆசி வழங்கி அனுப்பி இருப்பார். அத்தகைய பரந்த மனப்பான்மை கொண்டவர்தான் ராமராயர். அல்லது அந்தச் செயலை அரசியல் நோக்கோடு பார்த்து கடுமையாகத் தண்டித்திருப்பார். அவ்வளவுக்குக் கண்டிப்புக்காரர்தான் அவர். ஆனால் ஆயிஷாவின் விஷயத்தில் அண்ணல் கையாண்ட முறை வேங்கடாத்திரியையே வியப்பிலாழ்த்தியிருந்தது! 'அவள்தான் எத்தனை அழகு! நினைவைச் சொக்க வைக்கும் சுந்தர வடிவம். மிடுக்கான மேனி. வெடுக்கென்ற பேச்சு. வாலிப வயதினரான மன்னர் இவளழகில் வசமிழந்து போனதில் தவறில்லைதான்' என்று தன் இதயத்தில் பதிந்து விட்ட அந்த எழிலுருவை எண்ணங்களால் வருடியபடியே நடக்கலானான் வேங்கடாத்திரி.

அங்கே, சப்ரகூட மஞ்சத்தில் சயனித்திருந்த ராமராயரும் அரணங்கு ஆயிஷாவின் நினைவாகவேதான் புரண்டு கொண்டிருந்தார். அந்த நினைவு இன்றையச் சந்திப்பைப் பற்றியதல்ல. முதன் முதலில் அவளைச் சந்தித்த அந்த நாளைப் பற்றியது.

அறையின் பிரகாசமான விளக்குகளை அணைத்து விட்டு, மங்கிய நிலவைப் போல ஒளி சிந்தும் ஓரிரு விளக்குகளை மட்டும் தனித்து வைத்திருந்தார்கள். நவத்தினிருக்கும் பொற்கொடியென அவ்விளக்குகளின் சுடர் ஆடாமல் அசையாமல் ஒளிர்ந்துகொண்டிருந்தது. அறையின் மறு கோடியிலிருந்த கணப்பிலிருந்து அகில், சந்தனம் போன்றவற்றின் மணம் கமழும் மெல்லிய புகைப் படலம் எழுந்து அந்தக் கூடமெங்கும் சூழ்ந்து கொண்டிருந்தது. சயன அறைக்கு வெளியே பிரத்தியேகமாகப் பயிர் செய்யப்பட்டிருந்த, இரவிலே மலர்ந்து மணம் பரப்பும் விதம் விதமான மலர்ச் செடிகளின் சுகந்தத்தைச் சுமந்தபடி இளந் தென்றல் சாளரங்களின் இடையே வழி வகுத்துக் கொண்டிருந்தது. இத்தனை சுகத்திலும் ராயருக்குத் தூக்கம் வரவில்லை. நோயாளியைப் போலப் புரண்டு கொண்டிருந்தார். மூடிய கண்களினுள்ளும் முஸ்தபாகான் வந்து நின்றான். ரத்தம் சொட்டும் தன்

தலையைத் தானே கையில் ஏந்தியபடி...... பட்டுப் போனதாக எண்ணிய அந்தச் சம்பவத்தை அவன்தான் எப்படிப் பகைமையாக்கி விட்டான்? எத்தனை துணிச்சலான, ஆனால் சாதுரியமான பேச்சு?

ஆலயத்திலே ஆண்டவனின் கருவறையிலே ஒரு கண்ணாடித் தாமரைத் தட்டிலே ஒற்றை விளக்கு நூறு பிம்பங்களைக் காட்டி நிற்குமே அது போல ராயரின் மனக் கண்ணாடியிலே பலப் பல ஆயிஷாக்கள் தோன்றி அவரைச் சூழ்ந்து நின்றார்கள். ஒருத்தி சிரித்தாள். ஒருத்தி விம்மி அழுதாள். இன்னொருத்தியோ தன் சுடர் விழிகளால் சுட்டெரிப்பது போல உற்றுப் பார்த்து உக்கிரமாகச் சீறினாள். மற்றொருத்தி கெஞ்சினாள். பளீரென்று ஓர் ஒளி. கண்ணைக் குருடாக்கும் அந்த ஒளியின் நடுவே தழலாக ஒரு புள்ளி. வர வர அந்தப் புள்ளி சுழன்று சுழன்று பெரிதாகிறது. பன்னிரண்டு வயதும் பால் வடியும் மதிவதனமுமுடைய ஒரு முகமதியப் பாலகியாகிறது அது. அவள் முகத்திலே தாங்க முடியாத சோகம் கப்பிக் கிடக்கிறது. கண்ணீர் வழியக் கதறுகிறாள் அந்தச் சின்னஞ் சிறிய பெண். 'ஹோ' என்றெழுந்ததொரு பேய்க் காற்றிலே அந்தப் பெண்ணின் ஓலம் கலந்து விடுகிறது. காதைச் செவிடாக்கும் அந்தக் காற்றின் உறுமல் வலுத்துக் கொண்டே இருக்கிறது. உறக்கமும் விழிப்பு மற்ற ஒரு நிலையில் உடலை முறித்துக் கொண்டு தவித்தார் ராமராயர்.

ஃ ஃ ஃ

பீஜப்பூரின் பேரரசர் இப்ராஹிம் ஆதில்ஷா இறுமாப்பும் ஆதிக்கச் செருக்கும் கொண்டலைந்த காலம் அது. தன் அண்டை நாடான அமது நகர் பர்ஹான் நிஜாம்ஷாவையும், கோல்கொண்டாவின் குதப்ஷா ஜம்ஷிட்டையும் மதிக்காது உதாசீனம் செய்தார் இப்ராஹிம். இதனால் ஆதில்ஷாவிடம் வெறுப்புக் கொண்ட அவர்கள் விஜயநகரப் பேரரசின் உதவியுடன் பீஜப்பூரானுக்குப் பாடம் கற்பிக்க முடிவு செய்தார்கள். மூன்று வல்லரசுகள் ஒரே சமயத்தில் தாக்குதல் நடத்திய தருணத்தில் இப்ராஹிமின் இறுமாப்பு இருந்த இடம் தெரியாமல் போயிற்று. அந்த இக்கட்டான நிலையைச் சமாளிக்க ஆற்றல் மிகுந்த தன் தளபதி அஸாத்கானின் உதவியை நாடினார் இப்ராஹிம். அஸாத்கானின் திறமையால் வல்லரசுகளின் கூட்டு முறிந்தது. அகமது நகருக்கு ஷோலாப்பூரைச் சொந்தமாக்கிச் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டது பீஜப்பூர். கோல்கொண்டாவின் மீது படையெடுத்துப் பழி தீர்த்துக் கொண்டது. உதவிக்காக வந்த விஜயநகரத்தை ஒதுங்கிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டது. இப்படியாக நிலைமை மாறி விடவே முன்னைவிட அகம்பாவம் கொண்டார் இப்ராஹிம். எதிர்பாராது கிடைத்த வெற்றி வெறியின் போதை தலைக்கேறி மமதை கொள்ளலானார் மன்னர்.

இந்த நிலையில் இப்ராஹிமின் சகோதரன் அப்துல்லாவை அரியணையில் ஏற்ற ஒரு சூழ்ச்சி உருவாயிற்று. இதற்குச் சுல்தான் பர்ஹான் துணையாயிருந்தார். வியாபாரத்துக்காக வந்து



மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் வலுப் பெற்று வந்த போர்ச்சுகீசியரும் கூட பீஜப்பூரின் உள்நாட்டு விவகாரங்களில் அக்கறை காட்டி அப்துல்லாவை ஆதரிக்கலானார்கள். இந்தச் சதித் திட்டம் இப்ராஹிமுக்குத் தெரிந்த போது, தன் உயிருக்கு அபாயம் நேரிடும் என்று பயந்த இளவரசன் அப்துல்லா தன்னைக் காத்துக் கொள்ளக் கோவாவுக்கு ஓடிப் போர்ச்சுகீசியர்களிடம் சரணடைந்தான். அப்துல்லா வெளியேறியது சதிகாரர்களுக்குச் சௌகரியமாகப் போயிற்று. அவனையே பீஜப்பூரின் சுல்தான் என்று அறிவித்து ஆர்ப்பாட்டம் செய்யலானார்கள்.

இப்போது இப்ராஹிமின் நிலை சங்கடமாகி விட்டது. தனக்குத் தன் தம்பியாலேயே எதிர்ப்பு என்பதை அவரால் தாங்க முடியவில்லை. ஆகவே இம்முறை விஜயநகரின் உதவியை இப்ராஹிம் நாடலானார். பலமற்றவர்களுக்கு உதவித் தம் பலத்தைப் பெருக்கிக் கொள்ளுவதில் கருத்தாக இருக்கும் ராமராயர் தமது பெரும் படையுடன் பீஜப்பூர் இப்ராஹிமுக்கு உதவ முன்வந்தார். பல போர்களில் பீஜப்பூர், விஜயநகரப் படைகளின் உதவியுடன் வெற்றிவாகை சூடியது. பதவியைக் கைப்பற்றப் புரட்சி செய்த அப்துல்லா பிடிபட்டான். புரட்சிக்கு உதவியவர்கள் ஓட்டமெடுத்தனர்.

அப்போது...

அப்துல்லாவின் ஆணைப்படி பாண்டாக் கோட்டையைக் காத்து நின்றவர்களுள் முஸ்தபாகான் என்ற துருக்கிய தளபதியும் ஒருவன். அரசியல் பூசல்களிலே அவதிக்குள்ளாவோர் இந்தத் தளபதிகள்தானே? இன்று மன்னனாக இருப்பான் ஒருவன். நாளைக்கு வேறொருவன் ஆட்சியைக் கைப்பற்றி அரசனாவான். ஆனால் அவ்வப்போது ஆட்சியில் இருப்பவர்களின் ஆணைப்படி நடக்க வேண்டியது இந்தத் தளபதிகளின் கடமையாயிற்றே. அதன்படி அப்துல்லாவுக்காகப் பாண்டாக் கோட்டையைப் பாதுகாத்து நின்றான் முஸ்தபாகான். முற்றுகைக்குப் பிறகு பாண்டாக் கோட்டை விழுந்தது. இப்ராஹிமின் வீரர்கள் வெள்ளமென உள்ளே புகுந்தார்கள். வஞ்சம் தீர்த்துக் கொள்ளப் புரட்சிக்காரர்களைப் படுகொலை செய்யும்படி கட்டளையிட்டான் இப்ராஹிம். முற்றுகையிலே உதவி செய்த விஜயநகரத்து வீரர்களும் இந்தப் பாதகத்தில் பங்கு கொள்ளும்படியாயிற்று.

அரண்மனையிலே கைதியாகி நின்ற முஸ்தபாகான், நாட்டில் இப்படிக் காரணமின்றி உயிர்க் கொலை புரிவது அநீதி என்று வாதாடினான். தான் பிழைக்க வேண்டும் என்பதற்காக அல்ல; நீதி பிழைக்கட்டுமென்று. ''நேற்று சுல்தான் இப்ராஹிமுக்காக உழைத்தேன். இன்று அப்துல்லாவின் ஆணைப்படி நடந்தேன். நாளைக்கு அதே இப்ராஹிம் இட்ட கட்டளையை நிறைவேற்றுவேன். ஆட்சிக்காக அரச குமாரர்கள் அவ்வப்போது சண்டையிட்டுக் கொண்டாலும் அடிமைகளாகிய எங்களுடைய விசுவாசத்தில் என்றுமே விரிசல் காண முடியாது'' என்றான் முஸ்தபாகான். அவனது வாதம் நியாயமாகவே பட்டது ராமராயருக்கு. தோல்வியை ஒப்புக் கொண்ட எதிரியைக் கண்ணியமாக நடத்த வேண்டும் என்ற கொள்கையுடையவர் அவர். ஆனால் அவர் அவனுக்காகப் பரிந்து பேச முன் பட்டாக் கத்தியொன்று அவன் உயிரைப் பறித்துக் கொண்டது. போர் வெறிச் செயல்களில் இது புதுமை இல்லை என்றாலும் ராமராயரின் உள்ளம் புண்பட்டுப் போயிற்று. புலியென உறுமி அந்த இழி செயலுக்குக் காரணமான உலுத்தர் கூட்டத்தை ஓட்டினார். சுத்த வீரனொருவன் ரத்த வெள்ளத்திலே துடிப்பதைக் காணச் சகியாமல் முஸ்தபாகானின் உடலில் பாய்ந்து நின்ற வாளை உருவி அவன் ஆவி அமைதியாகப் பிரிய உதவினார்.

கணவன் கொல்லப்பட்டான் என்ற செய்தி அறிந்த முஸ்தபாகானின் பேகம் சாஹிபா இந்த வேளையில்தானா அங்கு வர வேண்டும்? குருதி வெள்ளத்திலே கணவன், கையில் கறை படிந்த கத்தியோடு அந்நியன்! அதுவும் ஒரு ஹிந்து! 'அன்பரே!' என்று அலறியபடி கணவனின், மார்பிலே போய் விழுந்து விம்மினாள் பேகம் ஸாஹிபா. என்ன செய்வது, எப்படித் தேற்றுவது என்று புரியாமல் ராமராயர் தவித்துக் கொண்டிருந்த போது, கணவனின் மார்பில் முகம் புதைத்துக் கதறிக் கொண்டிருந்தவள் தலை நிமிர்ந்தாள். 'அடப் பாவி' என்ற வார்த்தைகள் அவளிடமிருந்து வெளிப்பட்டன. அடுத்த விநாடி முஸ்தபாகானின் ஜீவனற்ற சடலத்தின் மீது மற்றோர் உயிரற்ற உடல் சரிந்தது. ஜனானாவை விட்டு வெளி வராதவள் ஓடி வந்தாள் கணவனைக் காண. மறுபடியும் அவள் அங்கு திரும்பவில்லை.

அப்போதுதான் அது நிகழ்ந்தது. தந்தையும் தாயும் பிணமாகிக் கிடப்பதைக் கண்டு செய்வதறியாது நடந்து விட்ட கோரத்தின் தன்மையைச் சரியாகப் புரிந்து கொள்ளக் கூடத் தெரியாத நிலையில், உடல் நடுங்க உள்ளம் புலம்பித் துடிக்கத் தேம்பியபடி நின்று கொண்டிருந்தாள் பதினைந்தே வயதான சிறுமி ஒருத்தி. இறந்தவர்களின் செல்வ மகள் அவள் என்பதைப் புரிந்து கொள்ள ராமராயருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. கையில் இருந்த வாளைக் கீழே வீசினார். அந்தக் குழந்தைக்கு நேர்ந்த துர்ப்பாக்கியத்தை எண்ணிய போது கலங்காத அவர் கண்களும் கலங்கின. அந்தப் பால் வடியும் முகத்திலே பயம் மூடிக் கொண்டிருப்பதைக் கண்டு வாய் மூடி மௌனியாக அவள் கரம் பற்றி ஆதரவோடு தம் பக்கலில் அழைத்தார். வெறுப்பை உமிழ்ந்தன அந்தச் சிறுமியின் கண்கள். கையை உதறிக் கொண்டு ஓட முயன்றாள். அந்த நிலையிலும் ராமராயர் அச்சிறுமியிடம் நடந்ததை விளக்கவோ, அவளுக்கு ஆறுதல் கூறவோ இல்லை. எந்தவிதமான ஆறுதலும் அந்த இளம் உள்ளத்து வேதனையைத் தணிக்க முடியாது என்பதை அறிவார் ராமராயர். தம்மால் இதைத் தடுக்க முடியாமல் போயிற்றே என்ற தாபத்தினால் அவர் நெஞ்சம் ரணமாக வலித்தது. தம் பிடியிலிருந்து திமிறிக் கொண்டிருந்த சிறுமியை அனுதாபத்தோடு ஒரு விநாடி பார்த்தார். அந்தப் பார்வையை அவர்



பாரெக்ஸ் புகட்டும் பருவம்

உங்கள் குழந்தைக்கு ஏறக்குறைய நான்கு மாதம் என்றால் அதுவே பாரெக்ஸ் புகட்டும் பருவம். பக்குவம் செய்து தயாரான நன்செய் தானிய உணவே பாரெக்ஸ்; வைட்டமின் Dயும் தாதுப் பொருள்களும் செறிந்தது. பற்களையும் எலும்புகளையும் வலுவாக்குவதற்கான எல்லாச் சத்துக்களும் உள்ளடங்கி, திடமான வளர்ச்சிக்கு உதவுவது பாரெக்ஸ். இதன் தயாரிப்பாளர்கள் : 'குழந்தை உணவுப் புகழ்' கிளாக்ஸோ.

பாரெக்ஸ்—ஓர் கிளாக்ஸோ தயாரிப்பு





இலவசம்! 'தி பாரெக்ஸ் கைடு'(ஆங்கிலம்) குழந்தைகளை ஊட்டி வளர்ப்பதுபற்றிய இந்நூலை வேண்டுவோர், தபால் செலவுக்காக 15 ந. பைசா தபால் வில்லைகளை அனுப்பி, எழுதுக: பாரெக்ஸ், தபால் பெட்டி 202, பம்பாய்—1.

PA. 3-78 TM

முகத்தில் காண விரும்பாத அவள் அடங்கிப் போனுள். அவளைத் தம் கூடாரத்துக்கு அழைத்து வந்தார்.

ராமராயரைக் கண்டு, கணவனைக் கொன்ற காதகன் என்ற நினைவோடு கண் மூடினுள் ஒருத்தி. பெற்றோரைக் கொன்ற பாவி என்ற எண்ணத்தோடு அழுதபடி அவர் கூடாரத்தி லேயே அமர்ந்திருந்தாள் மற்ெருருத்தி. போர்க் களத்திலே கைப்பற்றிய எதையுமே தமக்கென ஒதுக்கிக் கொள்ளாத உயரிய பண்புடையவரான ராமராயர் அந்தச் சிறுமி யைத் தம்முடன் விஜயநகரத்துக்கே அழைத்து வந்தார். முஸ்லிம் இனத்தவ ளான அப்பெண்ணை ஆதில்ஷாவின் அதிக் கத்திலேயே விட்டு வந்திருக்கலாம். ஆனுல் அவளிடம் ஏற்பட்ட ஏதோ ஓர் இனந்தெரி யாத பரிவு, அந்தக் கபடமற்ற முகத்திலே கண்ட ஏதோ ஒரு கவர்ச்சி அவளைத் தம் முடனேயே அழைத்து வரும்படி செய்து விட்டது அவரை.

அரண்மனைவாசியான ஆயிஷா அரசர் சதாசிவராயரின் அந்தப்புரத்துக்கு அனுப்பப் பட்டாள். பிறகு....?

ஃ ஃ ஃ

நித்திரை வசப்படாத மகாமண்டலேசுவரர் மஞ்சத்திலே புரண்டார். 'அன்று வாய்விட்டு அழக் கூடத் தெரியாத சிறுமி இன்று என் முன்னே எத்தனை அழகாக வாதாடினுள் ?' என்ற தம் நினைவின் இறுக்கத்தை நெடு மூச்சாக்கித் தணித்துக் கொண்டார் ராம ராயர்.

இரண்டாவது ஜாமத்தை அறிவிக்கும் நகரா ஒலி எங்கோ தொலைவில் கேட்டது.

(தொடரும்)

திரைத் துணுக்குகள்


''ஆனந்த்'' என்ற பெயரில் இம்மாதம் 23ம் தேதி முதல் சென்னை சினிமா ரசிகர்களுக்கு ஒரு புதுத் தியேட்டர் ஆனந்தம் அளித்து வருகிறது. அதைத் திரு காமராஜ் அவர்கள் திறந்து வைத்தார்கள். முழுதும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட இத் தியேட்டரில் ஒரு காட்சியில் 981 பேர் நிம்மதியாக உட்கார்ந்து ஆனந்தமாக சினிமாப் பார்க்கலாம். 70 எம். எம். பிலிம்களைப் போட்டுக் காட்டக் கூடிய பிரம்மாண்டமான வெள்ளித்திரையை யும் நவீன யந்திர சாதனங்களையும் கொண்டிருக்கிறது.



சமீபத்தில் பத்தி ரிகை நிருபர்க ளுக்கு ''எல்ஸிட்'' படத்தை 70 எம். எம். திரையில் போட்டுக் காட்டி ஞர்கள். பிரும் மாண்டமான உரு வங்களைத் திரையில் பார்க்கும் போது மாயத் தோற்றம் என்ற உணர்ச்சியே இல்லாமல் நேரில் உடலும் சதையுமா கப் பார்ப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. ஒலி அமைப்பில் புதுமை யைக் காண்கிறேம். இடிச் சத்தம், மேகங்களின் உறுமல் இவையெல்லாம் நமக்குப் பின்னுலிருந்தும் பக்கத்திலிருந்தும் வருவதுபோல் அமைத்திருக்கிறர்கள். அதனுல் படத்தில் மழை கொட்டும் இடங்களிலும், சண்டை நடக்கும் இடங்களிலும் நாமே எழுந்தருளியிருப்பது போன்ற பிரமை ஏற்படுகிறது. இத்தகைய புது தியேட்டரை நிர்மாணித்து வெள்ளித்திரை உலகில் புதுமையை உண்டாக்கிய திரு ஜி. உமா பதியைச் சினிமா ரசிகர்கள் மனமார வாழ்த்துவார்கள்.

ஃ ஃ ஃ

ஒலிம்பிக் சினிமா : டோக்கியோவில் அக்டோபர் மாதம் நடைபெறவிருக் கும் 18வது ஒலிம்பிக் விளையாட்டுக்களைக் கோடாக் கலர் பிலிம் கொண்டு படம் பிடிக்கப் போகிறர்கள். இதற்காக ஜப்பானிய செய்திப் படத் தயாரிப்புக் கம் பெனிகள் ஏழு ஒன்று சேர்ந்து கூட்டு முயற்சியில் ஈடுபடவிருக்கின்றன. 80,000 பேர் அமர்ந்து காணப் போகிற எல்லா விதமான விளையாட்டுக்களையும் படம் பிடித்து, உலகம் முழுவதும் மக்கள் பார்த்து ரசிக்க மூன்று மணி நேர டாக்கு மெண்டரியாகத் திரையிடப் போகிறர்கள்.



கண்ணியத்தோற்றம் — கம்பீரத்தின் சின்னம்

ஆம், அசல் பட்டுதான் அத்தகைய தோற்றம் அளிக்கவல்லது. அதற்கு ஈடு வேறு எதுவுமில்லை. சிறந்த உடை உடுத்துபவர்கள் நாடுவது பின்னியின் தூய ஸில்க். அதுதான் பண்புக்கு ஏற்றது. பல்வேறு பிரத்தியேக வகைகளில் எல்லா பின்னி விற்பனையாளரிடமும் கிடைக்கிறது.

பின்னியின் தூய ஸில்க் ஷர்ட்டிங்

பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
அக்ரஹாரம் ரோடு, பெங்களூர் 23
பின்னி & கம்பெனி லிமிடெட், மதராஸ், ஸ்தாபனத்தின் ஒரு கிளை


இது வீரசிம்மன் குதிரையல்லவா? இருட்டில் அவன் தவறுதலாக என் குதிரையில் ஏறிப் போயிருக்கிறான்.
ஐயா! நீங்கள் அதற்காக ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்..?
ஆளப்பிறந்தவன்
கதை: ராஜி
சித்திரம்: வினு
12
என் குதிரை மிக்க அறிவுடையது. அன்னியனைத் தன்மீது ஏற விடாது. கொஞ்ச தூரம் தான் வீரசிம்மனால் சவாரி செய்திருக்க முடியும். அதன் பிறகு...
இதென்ன வேதனை, இந்தக் குதிரை ஏன் இப்படி அடம் பிடிக்கிறது?.. ஆஹா! இது என்னுடைய குதிரையல்ல. அட, கடவுளே!
வீரசிம்மனைக் கீழே தள்ளி விட்டு அரண்மனையை நோக்கி ஓடுகிறது, ஜயசிம்மன் குதிரை.
அரசே! தாங்கள் இப்படி அறிவிக்காமல் போகலாமா?
உங்கள் குதிரை மட்டும் வந்த போது நாங்கள் என்னென்னவெல்லாம் எண்ணிவிட்டோம்.
உங்களைத் தேடி வருவதற்கிருந்தேன். நீங்களே வந்து விட்டீர்கள்.
நடந்தவைகளை அவர்களுக்கு விளக்குகிறான் ஜயசிம்மன்
வீரசிம்மனை என் குதிரை எங்கோ உருட்டித் தள்ளி விட்டு வந்திருக்கிறது....!



குதிரையிலிருந்து கீழே விழுந்து படுகாயமடைந்த வீரசிம்மனின் உடல் தேறச் சிலகாலமாகின்றன. இவ்வேளையில்....
மரகதத் தீவின் மன்னர் மன்மதவர்மர் ஜயசிம்மனைக் காணவருவதாகச் செய்தி அனுப்புகிறார். ஜயசிம்மனின் தந்தையினுடைய உயிர்த் தோழர் மன்மதர். ஆகவே அவரை எதிர்கொண்டழைத்துவரக் கிளம்புகிறான் ஜயசிம்மன்.
அரசே! உங்களைக் காண வந்தவர்களால் மக்கள் கூடி நிற்பார்கள். அதில் வீரசிம்மனின் ஆட்களுமிருக்கக் கூடும் ஆகவே எதற்கும் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும்.
விஜய மந்திர வீர சிம்மன் ஒருநாள் இரவு திடீரென்று மன்மதரின் கூடாரத்தினுள் புகுந்து..
மன்மதரே! வீணாகக் கூச்சலிட்டு உயிரை இழக்காதீர்கள்.
இரவு வேளையில் இப்படி வஞ்சகமாகப் புகுந்து கத்தியை நீட்டுவது பேடியின் செயல்
மன்மதரே! நாளைப் பகல்வரை நான் உமது உருவில் இருந்து ஜயசிம்மனை வரவேற்று இங்கு அழைத்துவரப்போகிறேன். அதுவரையில் பாவம் நீங்கள் இந்த நிலையில்தானிருக்க வேண்டும்.
எல்லாம் தயாராகி விட்டதல்லவா?
மன்மதவர்மரின் வீரர்கள் கட்டுண்டு கிடக்கின்றனர். அவர்களது உடையில் நாங்கள் கூடாரத்தைச் சூழ்ந்து நிற்கிறோம்.
ஜயசிம்மனை நான் அழைத்துக் கொண்டு கூடாரத்தின் வாசலுக்கு வந்ததும் ஒரு சங்கு ஊத வேண்டும். அது வில்லேந்திய நமது வீரர்களுக்கு ஓர் எச்சரிக்கை. உடனே விஷம் தோய்ந்த அம்புகள் பாய்ந்து வந்து அந்தப் பயல் ஜயசிம்மனின் உயிரைக் குடிக்க வேண்டும். யாருக்கும் எவ்வித சந்தேகமும் தோன்றாதபடி நடந்து கொள்ள வேண்டும். என்ன புரிந்ததா?


துறைமுகத்தில் ஏதோ நடக்கவிருப்பதாகச் சூசகமான செய்தி வந்திருந்தது பிரபாகரனுக்கு. ஆகவே ஜயசிம்மனைக் காப்பாற்ற முனைகிறான்.
அரசே! தாங்கள் தயவு செய்து இனி இந்தப் பல்லக்கில்தான் வர வேண்டும். மறுக்காதீர்கள் காரணமுள்ளது.
மன்னர் குதிரையில் வரவில்லையா...?
உக்கிரமான வெயிலால் உடல் நலக் குறைவு. அதனால் தான்....
அரசே! நான் சந்தேகப்பட்டது சரிதான். மன்மதவர்மன் தலைமறைவுள்ளது. வில்லாளர்களின் வரிசையும் சந்தேகத்தைக் கொடுக்கிறது. நான் ஒரு யுக்தி செய்கிறேன்....!
எங்கள் மன்னர் தங்களுடன் தனிமையில் உரையாட வேண்டுமென பல்லக்கினுள் அழைக்கிறார்.
பல்லக்கினுள்ளா? எதற்கு? கூடாரத்தினுள் போயே பேசிக் கொள்ளலாமே.
இல்லை, மிக அவசியமான விஷயமாம். அதனால் தான்.
வாருங்கள், மன்மதவர்மரே! வணக்கம். எனக்குக் காலில் ஒரு கட்டி. அதனால்தான் பல்லக்கினுள்....
பரவாயில்லை. அதோ கூடாரம் நெருங்கிவிட்டதே. உள்ளே சென்று வசதியாக அமர்ந்து உரையாடலாமே என்று பார்த்தேன்....


ஜயசிம்மனோடு வீரசிம்மனையும் தாங்கி வந்த பல்லக்கு பிரதான கூடார வாயிலை அடைந்ததும் பல்லக்கினைத் தாழ்த்தி விடுகிறான் பிரபாகரன். சங்கு முழங்குகிறது. அப்போது.....
நிறுத்துங்கள்... நிறுத்துங்கள்! அம்பு விடாதீர்கள் விடாதீர்கள்.
பிரபாகரன் துரிதமாக இயங்கி உண்மையைக் கண்டு பிடித்து விடுகிறான். மறுகணமே தன் வீரர்களுடன் வீரசிம்மனின் ஆட்களை வளைத்துக் கொள்ளுகிறான்.
வீரசிம்மா! வேஷம் போட்டுவிட்டால் வெற்றி கிட்டுமென்று பார்த்தாயா?
இதோ நம் நண்பர் உண்மை மன்னர் இவரைச் சிறை வைத்து இந்தச் சின்னத் தனம் செய்திருக்கிறான் இவன்.
இவனைக் கப்பலில் கொண்டு போய்த் தள்ளுங்கள். மாந்தத் தீவின் பாதாளச் சிறையிலே இவன் தன் மிகுந்த நாட்களைக் கழிக்கட்டும்!
என் நாட்டின் வீர சிம்மனால் உங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்காக வருந்துகிறேன்.
என்னைக் காப்பாற்றிக் கொண்டு உங்கள் உயிருக்கு எங்கே அபாயம் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சிப் போனேன். நல்ல வேளை எல்லாமே இன்பமாக முடிந்தது. வாருங்கள் உள்ளே போவோம்.
மக்களின் மகிழ்ச்சி வெள்ளத்திற்கிடையே முடிசூட்டிக் கொண்ட ஜயசிம்மன் செங்கோலைச் சோழ வைச் செழுமையாக்கிக் கொண்டு நீதி தவறாது நீண்ட காலம் ஆண்டு வந்தான்.
முற்றும்


உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



பொடுகு

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இக்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட. இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-I சில்விக்ரீன் அட்வைஸரி சர்விஸ் தபால் பை 10022, பம்பாய்-1



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.



சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.

Silvikrin


சில்விக்ரீன் — கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/6/64

ஒளியூட்டும் நகரம்

பி.எஸ்.மணி





தஞ்சாவூர் சப்-கலெக்டர் நெல்ஸன் முன்னிலையில் இன்று தோண்டிய பணியாளர்கள் வந்து நின்றார்கள்.


''எசமான்! இணத்துக்குப் பதினேழு அடி தோண்டினோமுங்க. அப்போ இந்தக் கரிக் கட்டி கிடைச்சதுங்க!'' என்று அவர் முன்னால் கொண்டு வந்து வைத்தார்கள். அவர்கள் கரிக்கட்டி என்று குறிப்பிட்டது பழுப்பு நிலக்கரியைத்தான். முதன் முதலில் நம் தென்னிந்தியாவில் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது என்ற உண்மை சப்-கலெக்டர் நெல்ஸன் வாயிலாகத் தெரிய வந்தது. இதற்கு நூறாண்டுகளுக்குப் பிறகு பின்னி கம்பெனியார் தென்னார்க்காட்டில் குழாய்களுக்குத் தோண்டுகையில் அவர்களும் பழுப்பு நிலக்கரி இருப்பதைக் கண்டுகொண்டார்கள். ஆனால் நீர் ஊற்றுக்கள் இருப்பதனால் இந்த முயற்சியில் அவர்கள் ஈடுபடவில்லை.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது நிலக்கரி கிடைப்பது அரிதாயிருந்தது. வடநாட்டிலிருந்து தென்னிந்தியாவுக்கு நிலக்கரி வருவதிலும் சிரமம் இருந்தது. இதனால் சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரின் நில ஆராய்ச்சி இலாகாவினரைப் பழுப்பு நிலக்கரி இருக்கும் இடத்தை ஆராயுமாறு பணித்தனர். 1943ம் வருஷத்திலிருந்து 1947ம் வருஷம் வரையில் கடலூர் — விருத்தாசலம் பாதையில் அவர்கள் ஆராய்ச்சிகள் நடத்தினர். இதன் பயனாக 1947ம் வருஷம் வங்காளத்தைச் சேர்ந்த கோஷ் என்னும் சுரங்க


▲ பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் எக்ஸ்கவேட்டர் நிலக்கரியை வெட்டித் தள்ளுகிறது. நீரூற்றுக்களிலிருந்து பம்புகள் மூலம் நீர் இறைக்கப்படுகிறது.


▼ அனல் மின் நிலையத்தில் ராஷ்டிரபதி.


ஆராய்ச்சி நிபுணர் வந்தார். இவரிடம் நவீன கருவிகள் ஒன்றும் கிடையாது. மண்வெட்டி, கடப்பாறை ஆகிய ஆயுதங்களுடன் பணியாளர்கள் பின்தொடரப் புறப்பட்டு விட்டார். பணியாட்கள் பெரும் பள்ளம் தோண்டி மாதிரிக்குப் பழுப்பு நிலக்கரி எடுக்கும் தருணத்தில் ஆபத்து இவரை வந்து











சூழ்ந்து கொண்டது. பூமிக்கடியில் உள்ள நீரூற்றுக்கள் பீறிட்டுக் கொண்டு பாய்ந்து அந்தப் பள்ளத்தில் நிரம்பி விட்டது; அவர் ஆசை நிராசையாகி விட்டது. இருந்தாலும் அவர் தம் முயற்சியைக் கைவிடவில்லை. அடுத்த தடவை அவருக்கு வேண்டிய 'மாதிரி' பழுப்பு நிலக்கரி கிடைத்து விட்டது.

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி கிடைப்பது கோஷின் முயற்சியால் ஊர்ஜிதமாகி விட்டது. அவர் அன்று தம் முயற்சியைக் கைவிட்டுச் சென்றிருந்தாரானால் நெய்வேலி என்றும் குக்கிராமமாக இருந்த இடம் தெரியாமலே இருந்திருக்கும்.

நெய்வேலி, விருத்தாசலம் ஜங்ஷனிலிருந்து கிழக்கே பதினொரு மைலில் உள்ளது. கடலூர் - விருத்தாசலம் ரயில் பாதையில் இதற்கு ரயில்வே ஸ்டேஷனும் உண்டு.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிகொண்டு இயங்கும் 250 மெகாவாட் அனல் மின் நிலயம் இயங்கத் தொடங்கும் நன்னாளை ஆகஸ்டு ஐந்தாம் தேதி அதிவிமரிசையாகக் கொண்டாடினர். இந்தக் கொண்டாட்ட வைபவத்தில் கலந்து கொள்வதற்காக ரஷ்யாவிலிருந்து மந்திரி நெடிரோம்னி வந்து விட்டார். 1957ம் வருஷம் இந்தியா—சோவியத் உடன்படிக்கைப்படி ஐந்நூறு மிலியன் ரூபிள் கடனாகப் பெற்று, அவர்கள் ஒத்தாசையினால் நிர்மாணிக்கப்பட்ட தொழிற்சாலையாயிற்றே! இந்த அனல் மின் நிலயத்திலுள்ள கருவிகள், தொழில் சம்பந்தமான உதவிகள் சோவியத் நாட்டைச் சேர்ந்தவை. நம் இந்திய இன்ஜினியர்கள் அவர்களது கூட்டுறவோடு நிர்மாணித்த பிரும்மாண்டமான இந்த அனல் மின்சார நிலயத்தினால் சென்னை ராஜ்யத்துக்கு அதிக மின்சார சக்தி கிடைத்துள்ளது. அநேகமாக ஒவ்வொரு வருஷமும் நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்தமையால் மின்சார வெட்டு நேர்கிறதல்லவா? நெய்வேலி அனல் மின்சார நிலயம் இல்லாமலிருந்திருந்தால் இந்த வருஷம் மின்சார வெட்டு இன்னும் வெகு நாட்களுக்கு முன்னதாகவே அமுலுக்கு வந்திருக்கும். பெருகும் தொழில் வளத்துக்கு ஏற்ப அதிகப்படி மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கோடையில் மின்சார வெட்டு அதிகமாக அமுலுக்கு வராத வகையிலும் நெய்வேலி மின் நிலயங்கள் எதிர்காலத்தில் இயங்கும்.


❀அனல் மின் நிலைய 'மாதிரி'யைச் சஞ்சீவி ரெட்டி ரஷ்ய மந்திரிக்குப் பரிசளிக்கிறார்.
❀நெய்வேலியில் உருவாகும் உரத் தொழிற்சாலை.
❀எரி பொருள் உற்பத்தித் தொழிற்சாலை தயாராகிறது.
❀முதன் முதலில் தோண்டிய 'மாதிரி' பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்.
❀அனல் மின் நிலயத்தின் தோற்றம்.

இந்த அனல் மின்சார நிலயத்தின் கொண்டாட்ட வைபவத்தில் கலந்து கொள்வதற்காகப் பத்திரிகைப் பிரதிநிதி



தலைவலியிலிருந்து

நல்ல, நிச்சயமான நிவாரணம்



அனஸின் இவ்வளவு சக்திவாய்ந்ததாக இருப்பதற்குக் காரணம் அது ஒரு டாக்டரின் குறிப்பைப்போன்று மருந்துகளின் சேர்க்கையாகும்—துரிதமாகவும் நிவாரணமளிக்கிறது.

1. வலியிலிருந்து துரித நிவாரணம் அளிப் பதற்கென அனஸினில் ஒரு பிரத்தியேகமான முறையில் பொருள்கள் சேர்க்கப் பட்டுள்ளன.
2. அனஸின் சாதாரணமாகத் தலைவலிக்குக் காரணமான நரம்புகளின் படபடப்பைப் போக்குகிறது.
3. அனஸின் ஜுரத்தைத்தணிக்க உதவுகிறது.
4. அனஸின் உபயோகிப்பதால் வலி மற்றும் ஜுரத்தினால் ஏற்படும் சோர்வு நீங்குகிறது.

Registered Users: GEOFFREY MANNERS & CO: LTD.

அனஸின்

சிறந்தது எனெனில் அது 4 வழிகளில் வேலை செய்கிறது

2 வில்லைகளுக்கு 13 ந. பைசேதான்

TAH KR

களை அழைத்துச் சென்றிருந்தார்கள். இந்தப் பத்திரிகைப் பிரதிநிதிகளைத் தொழிற்சாலைகளுக்கும், பழுப்பு நிலக்கரி கிடைக்கும் சுரங்கத்துக்கும் அழைத்துச் செல்லும் பொறுப்பை 'லிக்னைட்' கார்ப்பரேஷன் தகவல் அதிகாரி ஸ்ரீ வேங்கடராமனும் அவரது உதவியாளர் திரு கிருஷ்ணனும் ஏற்றுக் கொண்டனர்.

சென்னை சர்க்கார் பஸ், பத்திரிகைப் பிரதிநிதிகளுடன் முதலில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்துக்குச் சென்றது. போகும் வழியில், பழுப்பு நிலக்கரி தானாக இயங்கும் ரப்பர்ப் பட்டைகளின் மூலமாக அனல் மின் நிலையத்துக்கு வரும் காட்சியைக் கண்டோம். இந்தப் பெல்ட் ஒரு மணியில் 1350 டன் பழுப்பு நிலக்கரியைச் சுமந்து செல்லுமாம். இந்தப் பெல்டின் நீளம் சுமார் ஒன்றேகால் மைலாகும்.

பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கியவுடனேயே திரு கிருஷ்ணன் படபட வென்று பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தைப் பற்றி விஸ்தரிக்கத் தொடங்கி விட்டார்.

''ஸார்! இதுதான் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்குமிடம். நூற்று எண்பது அடிவரை மண், களிமண் படிவங்களை வாரிக் கொட்டினால் பிறகு அதன் கீழ் இந்தப் பழுப்பு நிலக்கரி அறுபது அறுபத்தைந்து அடிகளுக்குப் படிந்துள்ளது. இவற்றை வெட்டி எடுக்க ராட்சத பக்கெட்வீல் எக்ஸ்கவேட்டர்களும் (பழுப்பு நிலக்கரியை வெட்டி அள்ளி எடுக்கும் பக்கெட்கள் விளிம்பில் பொருத்தப் பட்டிருக்கும் மாபெரும் சுழலும் சக்கரம்.) எடுத்த மண்ணைப் பரப்பும் பிரம்மாண்டமான ஸ்பிரெட்டர் கருவிகளும் பயன்படுகின்றன! மணிக்குச் சுமார் இரண்டாயிரம் டன் பழுப்பு நிலக்கரி எடுக்கப்படுகிறது.!''

''ஆமாம்! இப்படி மணிக்கு இரண்டாயிரம் டன் பழுப்பு நிலக்கரியை எடுத்து விட்டால் இது எத்தனை நாட்களுக்கு வருமோ?'' என்று சந்தேகத்தைக் கிளப்பினார் பத்திரிகை நிருபர் ஒருவர்.

''இப்பொழுது முதல் முயற்சியாக ஐந்தரை சதுர மைல் அளவுக்குப் பழுப்பு நிலக்கரி வெட்ட உத்தேசித்திருக்கிறார்கள். வருஷத்துக்கு முப்பத்தைந்து லட்சம் டன் பழுப்பு நிலக்கரி எடுத்தால்கூட ஐம்பது வருஷங்களுக்கு அது வரும். பழுப்பு நிலக்கரி நூறு சதுர மைலுக்கு இருப்பதாகத் திட்டமிட்டிருக்கிறார்கள். அப்படியானால் எத்தனை வருஷங்களுக்கு வரும் என்று நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்!'' என்று புதிரை அவரிடமே போட்டு விட்டார் ஸ்ரீகிருஷ்ணன்.

''மிஸ்டர், கிருஷ்ணன்! அதை நீங்களே சொல்லி விடுங்கள். இவர் கணக்குப் போடத் தொடங்கினால் இவருக்குத் தலைவலியும் உடனே வந்து விடும்!'' என்று எச்சரித்தார் மற்றொரு பத்திரிகைப் பிரதிநிதி.

''பன்னெடுங் காலத்துக்கு வரும். இருக்கட்டும். அப்புறம் வாதிக்கலாம். அடுத்த அயிட்டத்துக்கு வாருங்கள்!'' என்று இழுத்தார் சமாதானப் பிரியரான பத்திரிகை நிருபர். அவருக்கு வாதப் பிரதிவாதத்தில் பொழுது கழிந்து விடுமே என்று பயம்!

''பழுப்பு நிலக்கரியை இந்தப் பிரும்மாண்டமான கருவிகள் தோண்டியெடுக்கும் சமயத்தில் பழுப்பு நிலக்கரிக்கடியில் உள்ள சக்தி வாய்ந்த நீரூற்றுக்கள் மேல் நோக்கிப் பாய்ந்து வந்து கொண்டிருக்கின்றன. இவற்றைக் குழாய்களின் மூலம் இறைத்துக் கொட்ட வேண்டியிருக்கிறது!''

''இல்லா விட்டால் என்ன ஆகும்?'' என்றார் சந்தேகப் பேர்வழியான நிருபர்.

''என்ன ஆகுமா? பழுப்பு நிலக்கரி சமுத்திரம் போன்ற நீரில் மூழ்கிப் போய் விடும். எல்லாம் கோவிந்தா!'' என்றார் ஸ்ரீ கிருஷ்ணன்.

''அதோ வெள்ளையாக மண் குவிந்திருக்கிறதே, அதனால் பயனேதும் உண்டா?'' என்று கேட்டார் பத்திரிகை நிருபர் ஒருவர்.

''அதுவா? அந்த மண் பீங்கான் பாத்திரங்கள் செய்யப் பயன்படுகிறது!''

''ஸார்! அது வெள்ளை வெளேரென்று நாமக்கட்டிக்குப் பயன்படலாம்!'' என்று குதித்தார் எங்களில் ஒருவர்.

''சுவாமி! அதை நாமக்கட்டிக்குப் பயன் படுத்துங்கள். ஆனால் எங்கள் கார்ப்பொரேஷனுக்குச் சேர வேண்டிய 'ராயல்டி' தொகைக்கு மட்டும் அதைப் (நாமத்தை!) போட்டு விடாதீர்கள்!'' என்று ஹாஸ்யத்தை அள்ளிப் போட்டார் தகவல் அதிகாரி ஸ்ரீ வேங்கடராமன்.

''ஸார்! ஒரு சந்தேகம். தொடர்ந்து நீரூற்றிலிருந்து வரும் நீரை இறைக்கா விட்டால் ஆபத்து என்கிறீர்கள். மின்சார விநியோகம் தடைப்பட்டு விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது என்ன ஆகும்?'' என்று கேள்வியைப் போட்டு வைத்தார் இளைப் பத்திரிகை நிருபர்.

''பழுப்பு நிலக்கரித் தொழிற்சாலையை நிர்மாணித்தவர்களுக்கு அத்தகைய முன் யோசனை இல்லாமல் இருக்குமா? ஆகவே மின்சாரத் தடை ஏற்பட்டால் அதை நிவர்த்தி செய்ய இரண்டு டீஸல் ஜெனரேட்டர்கள் எப்பொழுதும் ஆபத்துச் சமயத்தில் இயங்கக் காத்திருக்கின்றன. தடை ஏற்பட்ட சில கணத்துக்குள் இவை தாமாகவே இயங்கும் படியாகப் பொருத்தி வைத்திருக்கிறார்கள்!'' என்றார் திரு கிருஷ்ணன்.

''அடுத்தபடியாக எங்கே போவது?''

''வயிற்றுப்பாட்டைக் கவனித்துக் கொள்ளத்தானே?'' என்று ஒருவர் முந்திக் கொண்டார்.

''செவிக்கு உணவில்லாத போதுதான் வயிற்றுக்கு ஈயப்படும். நெய்வேலி கலாசார சங்கத்தினரின் கதம்ப நிகழ்ச்சிக்குப் போகப் போகிறோம்'' என்றார் ஸ்ரீ வேங்கடராமன்.

''கூட்டோடு கூடாக அனல் மின்சார நிலையத்தைப் பார்க்க வேண்டாமா?''

''ஆட்ட கால சட்டத்தை அநுசரிப்பதே முறை!'' என்றார் தகவல் அதிகாரி.

நெய்வேலி மாதர் சங்கத்தினர் நிகழ்த்திய கதம்ப நிகழ்ச்சிகளைக் கண்டு களித்த

பின்னர் அன்றிரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு அனல் மின்சார நிலையத்தைப் பார்வையிடப் புறப்பட்டோம்.

''ஸார்! பஸ்ஸில் நெடுந்தூரம் வந்த அலுப்பு. நேரமாகி விட்டதே! காலையில் இந்த அயிட்டத்தை வைத்துக் கொள்ளக் கூடாதா?'' என்று கொட்டாவி விட்டுக் கொண்டே கேட்டார் தினப்பத்திரிகை நிருபர்.

''இரவில் அனல் மின்சார நிலையத்தின் மேல் உச்சியில் நின்று பார்த்தால் நெய்வேலி நகரம் முழுதும் ஒளிவிளக்காய்ச் சுடர் விட்டு மின்னுவதைப் பார்க்கலாம். பகலில் இந்த அனுபவம் கிட்டுமா?'' என்று தூண்டில் போட்டார் தகவல் அதிகாரி.

அப்புறம் அந்தத் தூண்டிலில் விழாத பத்திரிகைக்காரர்கள் இருக்க முடியுமா? இரவு பத்து மணிக்கு மேல் அனல் மின்சார நிலையத்துக்குள் நுழைந்தோம்.

அனல் மின்சார நிலையத்தினுள் நுழைந்ததுமே பிரும்மாண்டமான கொதி கலன் (Steam Boiler) நம்மைப் பிரமிக்க வைக்கிறது. பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து வரும் ஈரத்துடன் கூடிய பழுப்பு நிலக்கரி கொதி கலனுக்கென உள்ள தனி அறைகளில் பெறப்படுகிறது. அங்குள்ள சம்மட்டி இயந்திரங்களில் அவை தூளாக்கப்பட்டு உலைக்குள் தள்ளப்படுவதைப்பார்த்தோம். கனிச்சுரங்கங்களில் இறைக்கப்படும் நீரை வீணாக்குவதில்லை. அவற்றைக் குழாய்களின் மூலம் இந்தக் கொதிகலனுக்கு எடுத்து வருகிறார்கள். கொதி கலனில் தயாரான நீராவி 540 டிகிரி சென்டிகிரேட் உஷ்ணம் படைத்தது. ஒரு மணி நேரத்தில் 220 டன் நீராவி தயாராகிச் சுழற்பொறிக்குள் (Turbine) செலுத்தப்படுகிறது. இந்தியாவில் பழுப்பு நிலக்கரியை எரித்து மின் சக்தி உண்டாக்கும் அனல் மின் நிலையம் இதுவே முதலாவதாகும். நிமிஷத்துக்கு மூவாயிரம் சுற்றுகள் சுற்றக் கூடிய சுழல் இயக்கி ஓர் உற்பத்திப் பொறியுடன் இணைக்கப்பட்டிருக்கும். ஒவ்வோர் உற்பத்திப்பொறியும் (Generator) 50,000 கிலோவாட் மின்சார சக்தியை உற்பத்தி செய்யும்.

அனல் மின்சார நிலையத்திலுள்ள பிரும்மாண்டமான இயந்திரங்கள் பத்திரிகைக்காரர்களைப் பிரமிக்க வைத்தன. அதுவும் கிட்டில் நூற்றி இருபத்தைந்து அடி உயரத்திலுள்ள இடத்துக்குச் சென்றபோது, எல்லாரும் கொஞ்சம் அயர்ந்து போய் விட்டனர். சிலர் மனத்துக்குள் கடவுளைப் பிரார்த்தனை செய்து கொண்டனர். அந்த இடத்திலிருந்து ஒளியூட்டும் நகரம் நெய்வேலியைக் காணக் கண்கோடி வேண்டும்தான்! நெய்வேலி நகரம் மின் விளக்குகளால் ஜகஜ்ஜோதியாய்க் காட்சியளித்தது. தகவல் அதிகாரி ஸ்ரீ வெங்கடராமனிடம் இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததற்குப் பலர் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டனர். இரவு பதினொரு மணிக்கு மேலாகியும் அந்தக் காட்சியை விட்டுப் பிரியப் பலருக்கு மனமில்லை.

நெய்வேலியில் அனல் மின் நிலையத்தைத் தவிர உர உற்பத்திச் சாலையும் வேறு பல தொழில்களும் வளர்கின்றன. இவற்றுக்கெல்லாம் மேற்கு ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் பாரதத்துக்கு உதவி புரிந்து ஒத்துழைக்கின்றன.

''ஸார்! நேற்று சில நிமிஷங்கள் நெய்வேலி பழுப்பு நிலக்கரியினால் இயங்கப்போகும் உரத் தொழிற்சாலைக்குள் நுழைந்து அதன் 'மாதிரி'யைப் பார்த்து விட்டு வந்து விட்டோம். முழுத் தொழிற்சாலையையும் பார்த்தாலல்லவோ நல்லது! நாளைக் காலையில் பார்த்து விடலாமா?'' என்று கேட்டார் பத்திரிகைப் பிரதிநிதி ஒருவர்.

''இன்னும் உரத் தொழிற்சாலை இயங்க ஆரம்பிக்கவில்லை. அடுத்த வருஷம்தான் உற்பத்தி தொடங்கும். அப்பொழுது வந்து பார்த்தால் போகிறது. எப்படித் தயாரிக்கிறார்கள் என்பதை இன்ஜினீயர் நாகராஜராவ் விவரித்திருப்பாரே!'' என்றார் ஸ்ரீ வெங்கடராமன்.

''ஓ! பழுப்பு நிலக்கரி பொடியாக்கப்பட்டு, உலர்த்தப்பட்டு, பிராண வாயுவோடு கலக்கப்பட்டு, நீராவி செலுத்தப்பட்டு உண்டாகும் வாயு குளிர்ச்சியடையச் செய்யப்படுகிறது......''

''பட்டு பட்டென்று எல்லாவற்றையும் விளக்கி விடுகிறாரே இந்தக் கிருஷ்ணன்' இவர் நமக்குச் சரியான 'கைடு'தான்!'' என்றார் பத்திரிகை நிருபர் அவர் முதுகில் பலமாகத் தட்டியபடியே.

ஸ்ரீ கிருஷ்ணன் விடாமல் தொடர்ந்தார். ''நீராவியின் உதவியால் கரியமிலவாயு கிடைக்கிறது. அதில் வரும் ஹைட்ரஜன் நைட்ரஜனோடு இணைந்து அமோனியா கிட்டுகிறது. கரியமில வாயுவும் அமோனியாவும் இணைந்து யூரியா உரமாகிறது. இந்த யூரியா



உரம் நம் நாட்டின் உணவு உற்பத்திக்குப் பெரிதும் பயன்படும்!''

''கரிக்குப் பதிலாக எரிய விடக் கூடிய நிலக்கரி ஒன்று தயாரிக்கப் போகிறீர்களாமே. அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லி விடுங்கள். வீட்டுக்குப் போனதும் என் மனைவி அதைக் கேட்டுத் தொளைத்தெடுத்து விடுவாள்!'' என்றார் பத்திரிகை நிருபர் ஒருவர்.

''பழுப்பு நிலக்கரியை 650 முதல் 700 டிகிரி சென்டிகிரேட் வரை உஷ்ணப்படுத்தி 'கார்பனைசேஷன்' (Carbonisation) செய்தால் அந்த எரிபொருள் கிடைக்கும். இந்தக் கரியை வீட்டில் பயன்படுத்தும்போது துர்வாசனையோ, புகையோ இராது. 1964 டிசம்பரில்தான் அதன் உற்பத்தி தொடங்கும்!''

''நேரமாகி விட்டது. காலையில் அனல் மின்சார நிலையத்தின் விழா இருக்கிறது. எல்லாரும் தூங்கப் போகலாம்!'' என்று அனைவரையும் அழைத்துச் சென்றார் தகவல் அதிகாரி ஸ்ரீ வேங்கடராமன்.

ஃ ஃ ஃ

மறுநாள் காலையில் பிரும்மாண்டமான பந்தலில் நிகழ்ந்த 250 மெகாவாட் அனல் மின்சார நிலையத்தின் பூர்த்தி விழாவில் எங்கு, சுரங்க மந்திரி திரு சஞ்சீவ ரெட்டி காருவும், இந்த விசேஷ வைபவத்தில் கலந்து கொள்வதற்கு வந்திருந்த சோவியத் மந்திரி நெபரோழ்னியும் உரையாற்றினர். இந்த நிலக்கரித் தொழிற்சாலைகளின் தலைவர் ஸ்ரீ சுப்பராமன் அனைவரையும் முதலில் வரவேற்றுப் பேசினார்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் தொழிற்சாலைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது அதில் பணி புரியும் ஒருவர் குறிப்பிட்டார்: ''எங்கள் தலைவர் ஸ்ரீ சுப்பராமன் சாதாரணத் தொழிலாளியிலிருந்து அதிகாரிகள் வரை அனைவரது குறைகளையும் நேரில் அறிந்து கொண்டு நீக்குவதில் கவனம் செலுத்துகிறார். சாதாரணத் தொழிலாளி வீட்டில் சிறிது ஒழுகுகிறது என்றால் உடனே அதை நீக்க ஏற்பாடு செய்து விட்டுத்தான் அவர் மறு காரியத்தில் ஈடுபடுகிறார். ஆகவே தங்கள் குறைகளையெல்லாம் தீர்த்து வைக்கக் கூடிய தந்தை இவரே என்று அனைவரும் போற்றுகிறார்கள்!''

மாபெரும் நெய்வேலித் திட்டத்தைப் பார்த்துவிட்டு வந்ததும் ஏற்படும் பிரமிப்பில் அதைக் குறித்து வாயார மனதாரப் புகழத் தோன்றும். இது இயற்கை. ஆனால் சிந்தனையாளர்களுக்கு ஒரு விஷயம் மிகுந்த மனக் கவலையை அளித்து வருகிறது என்பதையும் குறிப்பிடத்தான் வேண்டும். எந்த ஒரு திட்டத்தை மேற்கொண்டாலும் அதன் லாப நஷ்டங்களைப் பற்றி யோசிக்க வேண்டுமல்லவா? தனியார் துறையில் நஷ்டம் ஏற்பட்டால் குறிப்பிட்ட சில நபர்களை மட்டுமே அது பாதிக்கும். அரசாங்கம் மேற்கொள்ளும் ஒரு திட்டத்தில் நஷ்டம் ஏற்பட்டால் நமக்கென்ன வந்தது என்று நாம் வாளா விருப்பதற்கில்லை. சர்க்காருக்கு ஏற்படும் நஷ்டம் தேசிய நஷ்டமாகும்; நாட்டின் ஒவ்வொரு பிரஜையையும் பாதிப்பதாகும். அவ்வாறு பார்க்கையில் நெய்வேலித் திட்டங்களின் பொருளாதார நிலைமை திருப்திகரமாகஇல்லை என்று நிபுணர்கள் கூறுவதைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. செலவை லட்சியம் செய்யாமல் பிரும்மாண்டமான திட்டங்களைப் போட்டுப் பிரமிப்பை உண்டாக்குவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்கு ஒப்பாகும். சிறிய அளவினதாய் இருப்பினும் லாபகரமாக அவை இயங்க வழி வகுப்பதே முக்கியம்.


எனினும், மற்ற அனல் மின் நிலையங்களைக் காட்டிலும் அதிகச் செலவில் உற்பத்தியாகும் நெய்வேலி மின்சாரத்தினால் பெருகப் போகிற தொழில் வளம் இந்த அதிகப்படிச் செலவை ஈடுகட்டி விடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நம்பிக்கை வீண் போகாமல் தமிழ் நாடு தொழில் வளத்தில் சிறந்தோங்கிச் செழிக்க இறைவன் அருள் புரிய வேண்டும்.

வளர்ந்து வரும் தொழில் நகரமான நெய்வேலி நகரை விட்டு அன்று மத்தியானம் பஸ்ஸில் சென்னை நகரை நோக்கிப் புறப்பட்டோம். இந்தப் பழுப்பு நிலக்கரித் தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதில் முன்னாள் தலைவர் ஸ்ரீ டி. எம். எஸ். மணி எடுத்துக் கொண்ட சிரத்தையைப் பற்றியும் அவர் கனவு இன்று நனவாகிக் காட்சியளிப்பதைப் பற்றியும் கதை கதையாகப் பத்திரிகைப் பிரதிநிதிகள் பேசி வந்தனர். இன்று ஸ்ரீ டி. எம். எஸ். மணி மறைந்து விட்டார். அவர் நினைவை நெய்வேலி பழுப்பு நிலக்கரித் தொழிற்சாலைகள் போற்றுகின்றன. இதைவிட வேறு ஞாபகார்த்தம் அவருக்கு என்ன வேண்டும்? ஒளியூட்டும் நகரம் நெய்வேலி என்றும் எங்கள் கண்களை விட்டு அகலாதபடி அதன் காட்சிகள் பதிந்து விட்டன.




உற்சாகமளிக்கும் குளுமையான புத்துணர்ச்சியை அனுபவிக்க

தினமும் கால்கேட் மென்தாலேடெட் ஷேவிங் க்ரீமினல் க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்!



அந்த அதிகாரி போன்ற, எடுப்பான தோற்றம்... அதற்கு உறுதுணையாயிருப்பது கால்கேட் மென்தாலேடெட் ஷேவிங் க்ரீம். ஏனெனில், கால்கேட் மென்தால் சேர்க்கப்பட்டுள்ளதால், அதனுடைய குளுமையான க்ரீம் போன்ற லேதர் சுத்தமான சுகமுள்ள க்ஷவரத்தைப் பெற சருமத்தை பதமாயும் தாடியை மிருதுவாயும் ஆக்குகிறது. நீங்கள் எப்பொழுதும் கண்டிராத, உற்சாகமளிக்கும், குளுமையான புத்துணர்ச்சியுடன் கூடிய க்ஷவரத்தை அளிப்பது கால்கேட் ஒன்றுதான்!



மிக சிக்கனமானது— கால்கேட் ஷேவ் ஸ்டிக் க்ஷவரத்தில் சிக்கனத்திற்கு பிரபலமானது.

பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும்

ஆயுர்வேதாஸ்ரமம்
லிமிடெட்,
மதராஸ்-17

சிரிக்கவும் சிந்திக்கவும்

ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழியில் விஷயத்தைப் பெயர்த்துச் சொல்வதென்பது சள்ளை பிடித்த வேலை. பெரும்பாலான பிரசங்கங்களில் இது மிகவும் தமாஷான அம்சமாக அமைந்திருக்கும்.

காந்திஜி, ஹிந்தியில் காங்கிரஸ் பிரசாரம் செய்யத் தொடங்கியபோது அவர் பிரசங்கங்களை மொழிபெயர்ப்பதற்கென்று சிலர் ஏற்பட்டார்கள். காந்திஜி இரண்டு வாக்கியங்களை ஹிந்தியில் பேசியதும், மொழிபெயர்ப்பவர் பத்துப் பன்னிரண்டு வாக்கியங்களைத் தமிழில் சரமாரியாகச் சொல்வார். ஹிந்தியில் பெரிய பெரிய விஷயங்களையும் குறளில் சொல்வது போல் சின்னஞ் சிறு வாக்கியங்களில் சொல்லிவிட முடியும் போலும் என்று ஹிந்தி தெரியாதவர்கள் நினைத்துக் கொண்டிருந்தோம். காந்திஜியோ 'தமிழ் மிக நீளமான பாஷை' போலும் என்றெண்ணி ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்!

நேருஜியின் தமிழ் நாட்டு விஜயங்களுள் ஒன்றின் போது, அவரது ஆங்கிலப் பிரசங்கங்களை, இப்போது மந்திரியாயிருக்கும் ஒருவர் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லி வந்தார். நேருஜி சொல்லாத பல விஷயங்களையும் அவர் கற்பனை செய்து கூறிக் கொண்டே போனதைக்கேட்ட கூட்டத்தினர் (ஆங்கிலம் அறிந்தவர்கள்) புன்னகை புரிந்தனர். நேருஜியும் அப்படி ஏதோ சந்தேகப்பட்டவர் போல, தமது இடது கையைத் தவடையில் வைத்துக் கொண்டு புன்னகை புரிந்தவண்ணம் மொழிபெயர்த்தவரைக் கவனிக்கலானார்.

அகில இந்திய மேடைகளில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும் கௌரவம் சமீபகாலமாக தமிழ்ப் பேச்சுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், காங்கிரஸ் தலைவரின் பேச்சை மொழிபெயர்த்துச் சொல்வதற்கு ஒரு சிறு கைப்பன்கூட சிரமப்பட வேண்டியதில்லையே!

இரண்டு வாரங்களுக்கு முன்னர் நெய்வேலியில் அனல் மின்சார உற்பத்தி சம்பந்தமாக நடைபெற்ற கொண்டாட்டத்தில் மந்திரி சஞ்சீவரெட்டி கலந்து கொண்டார். அவர் நெய்வேலி ஸ்தாபனத்தினரின் கலை நிகழ்ச்சிக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசினார். முதலில் சுமார் பத்து நிமிஷ நேரம் அவர் தாம் சென்னைக்குப் பக்கத்திலுள்ள ஆந்திர ராஜ்யத்தில் வசிப்பவராயிருந்தும் தமிழில் பேசாமல் ஆங்கிலத்தில் பேசுவதற்கான காரணங்களைக் கூறி வந்து, கூட்டத்தினரைச் சித்திரவதை செய்தார். பிறகு, ஒருமைப்பாடு, பற்றாக்குறை, தரகர்கள்; கள்ள மார்க்கெட்டுகள் முதலியவற்றைப் பற்றிப் பேசினார். அமெரிக்கா சந்திரனுக்கு ராக்கெட் வாணம்



அனுப்பியதை மட்டும் சொல்ல மறந்து போய் விட்டார்!

இந்த அழகான பேச்சை மொழிபெயர்க்கும் வேலையில் ஸ்ரீ தியாகராஜன் அவர்கள் தெரியாத்தனமாக மாட்டிக் கொண்டு விட்டார். மந்திரி மூச்சு விடாமல், பாரா, பாராவாக, ஆம், பாராபாராவாகத்தான் பேசியதை மொழிபெயர்த்துக் கொண்டே வந்த அவர் நடுவில் திணறிப் போய் விட்டார். தொண்டைத் தண்ணீர் வற்றிப் போய்விட ஒரு கூஜா தண்ணீர் கொண்டு வரச் சொல்லி அத்தனையும் சாப்பிட்டு விட்டுப் பிறகு தைரியமாகப் பேசினார். கூட்டத்தினர் எதிர்பாராத இந்தக் கலை நிகழ்ச்சியைப் பெரிதும் அனுபவித்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு மறுநாள் ரஷ்யாவிலிருந்து வந்திருந்த மந்திரி நெபரோழ்னி பேசிய விதமும், மொழி பெயர்ப்பாளர் மொழிபெயர்த்துக் கூறிய விதமும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

நெபரோழ்னி வந்திருந்தவர்களைத் தோழர்களே, தோழிகளே என்று கூப்பிட்டுத் தாம் வைபவத்தில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைந்திருப்பதைத் தெரிவித்துக் கொண்டார். இதை மொழி பெயர்ப்பாளர் மொழிபெயர்த்துக் கூறினார். பிறகு அனல் மின்சார உற்பத்தி, ரஷ்ய—இந்திய ஐக்கிய பாவம் இவற்றைப் பற்றிப் பிரசங்கம் செய்தார். செய்தார் என்றால் மந்திரி நெபரோழ்னி இப்போது ரஷ்ய பாஷையில் பேச வில்லை. மொழிபெயர்ப்பாளர் பிரசங்கத்தை ஆங்கிலத்தில் படித்தார். பிறகு நெபரோழ்னி ரஷ்ய மொழியில் வந்தனோபசாரம் கூறினார். அதுவும் மொழி பெயர்த்துக் கூறப்பட்டது.

இப்படியாக முக்கியமான விஷயம் பிசகின்றி எடுத்துச் சொல்லப்பட்டது.

பிரசங்க மொழிபெயர்ப்பில், சந்தேகத்துக்கிடமில்லாமல் விஷயத்தை எடுத்துச் சொல்லும் உத்தி ஒன்று இருக்கிறது. இது தான் பதவுரை உத்தி. இது பெரும்பாலும் முச்சந்திகளில் நடைபெறும் மத சம்பந்தமான பிரசங்கங்களில் கையாளப்படுகிறது. ஓர் ஆங்கிலேயர் பேசிக் கொண்டிருப்பார். அதை ஒருவர் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லி வருவார். சில சமயம் சிறிய வாக்கியங்களைமட்டும் முழுதும் மொழிபெயர்ப்பார்:

''We are all sinners'' என்பார் பிரசங்கி.

''நாமெல்லோரும் பாபிகளாக இருக்கிறோம்'' என்பார் மொழிபெயர்ப்பாளர்.

தொடர்ந்து பின்வருமாறு பேச்சும் மொழிபெயர்ப்பும் நடைபெறும்.

''I also''
''நான்கூட.''
''Was a sinner''
''ஒரு பாபியாயிருந்தேன்.''
''But...''
''ஆனால்....''
''Now''
''இப்பொழுது''

"By the grace of lord Jesus"

''கர்த்தரின் அருளால்.....''

இரண்டுங் கெட்டானாக மொழிபெயர்ப்பதைவிட இப்படிச் செய்வது எவ்வளவோ நல்லது. ஆங்கில ஆசான்கள் வைத்துக் கொண்டு ஆங்கிலம் கற்றுக் கொண்டு வருவோர்களுக்கு இத்தகைய மொழிபெயர்ப்புப் பிரசங்கங்கள் பாடங்களாக அமையும்.

ஃ ஃ ஃ

''ஓர் எழுத்தாளன் நகைச்சுவை உணர்ச்சியற்றவனு யிருந்தால், நகைச்சுவை இலக்கியத்தை ரசிக்கச் செய்து விடும் என்று அவன் புலம்புவான்.'' —ஸாமர்ஸெட் மாம்

ஃ ஃ ஃ

தமிழ் நாட்டில் சிறுகதைகளின் வளர்ச்சி எப்படி இருக்கிறது? நல்ல கதைகள் வெளி வந்து கொண்டிருக்கின்றனவா?

அந்தோ! திரு கு. ப. ராஜகோபாலன் காலத்துக்குப் பிறகு சிறுகதை உலகமே அஸ்தமித்துப் போய்விட்டது. நல்ல கதைகளை ஒருவர்தான் அபூர்வமாக எழுதியிருக்கிறார். அந்தோ!

இப்படி நான் சொல்ல வில்லை. ஒரு புத்தக மதிப்புரைக்காரர் சொல்கிறார். ஒரு சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகள் ஒவ்வொன்றையும் பற்றிப் புகழ்ந்து கூறி விட்டு முடிவில் ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் காலத்துக்குப் பிறகு இத்தகைய திருப்திகரமான கதைத் தொகுதியை இப்போதுதான் அவர் கண்டுபிடித்து விட்டதாகக் கூறுகிறார். இந்த மதிப்புரை ஒரு பிரபல சென்னை ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

மதிப்புரை எழுதியவர் ஒரு குறிப்பிட்ட புத்தகத்தைப் பற்றிப் புகழ்ந்து எழுதுவதைப் பற்றி யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. ''இந்த ஆசிரியர் எழுதுவதற்கென்றே சிறுகதை பிறந்திருக்கிறது'', ''கதைத் தொகுதி பொன் தட்டில் நவரத்தினங்கள் பதிப்பித்தது போன்றிருக்கிறது'', ''இந்த ஆசிரியர் சிறுகதை எழுதியதனால் அதன் அந்தஸ்தே உயர்ந்து விட்டது. அது எத்தனையோ பாக்கியம் செய்திருக்க வேண்டும்'' என்பன போன்ற மதிப்புரை வாக்கியங்களைப் படித்துப் பழக்கமான நாம் எத்தகைய விமரிசனத்தையும் தாங்கிக் கொள்ள முடியும்.

இந்தக் குறிப்பிட்ட மதிப்புரையைப் பற்றி நான் எழுத நேர்ந்ததற்குக் காரணம் இதுதான். அதை எழுதியவர் சில மாதங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டில் இலக்கியத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதிலும் அவர் சென்ற கால்நூற்றாண்டில் வெளியான எந்தப் புத்தகத்துக்கும் அதிக மதிப்புக் கொடுக்கவில்லை.

இந்த மதிப்புரை பாணி இவரோடு நிற்கவில்லை. ஆங்கிலப் பத்திரிகைகளில் தமிழ் நாட்டு இலக்கியத்தைப் பற்றி எழுத வசதியுள்ள சிலர் இப்படி எழுதி வருவது ஒரு வியாதியாய்ப் போய்விட்டது. வெளியான எதையும் அவர்கள் இலக்கியமாகக் கருதுவதில்லை. அதுவும், ஒருசிலரைப்பற்றியே திரும்பத்திரும்பப் பல்லவி பாடிக் கொண்டிருப்பார்கள். எனது பெருமதிப்புக்குரிய பேராசிரியர் நண்பர் ஒருவர், சில வருடங்கள் முன்னர் டைம்ஸ் ஆப் இந்தியா வாரப் பத்திரிகையில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் இந்த முறையில் தான் எழுதியிருந்தார்.

முப்பது வருஷ காலம் பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டிருந்ததில் தினசரி வரும் கதைகளும், போட்டிக்கு வரும் கதைகளுமாக ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட சிறுகதைகளின் கையெழுத்துப் பிரதிகளை நான் படித்திருக்கிறேன். சுமார் பதினாயிரம் கதைகள் வரை பொறுக்கி எடுத்துப் பிரசுரித்திருக்கிறேன்.

நல்ல கதைகள், நாவல்கள் எப்பொழுதும் வந்து கொண்டேதான் இருக்கின்றன என்பது எனக்கு ஓரளவு தெரியும் என்பதற்காகவே இதைச் சொல்கிறேன்.

எத்தனையோ இளைஞர்கள், மாணவர்கள், மாணவிகள் விதம் விதமாக, மணி மணியான கதைகள் எழுதியிருக்கிறார்கள்; இன்றும் எழுதி வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், 'மறு மலர்ச்சி', 'அஸ்திவாரம்', 'கட்டுக் கோப்பு', 'குணச் சித்திரம்', 'நடைமீறி போடுதல்' என்ற வார்த்தைகளை உபயோகித்துக் கொண்டிருப்பதில்லை. தற்கால வாழ்க்கையை அநுசரித்து உயிர் ததும்பி நிற்கும் கதைகளை எழுதுகிறார்கள். சரளமான நடையில் புரியும்படி எழுதுகிறார்கள்; படித்து அநுபவிக்கும்படி எழுதுகிறார்கள்.

ஸ்ரீ கு. ப. ரா. சகாப்தம், மறுமலர்ச்சி சகாப்தம் இவற்றிலெல்லாம் நல்ல கதைகள் வரத்தான் செய்தன. யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதற்குப் பிறகு தமிழில் நல்ல சிறுகதை எழுதக்கூடிய மூளைகளைச் சிருஷ்டி செய்வதை ஆண்டவன் நிறுத்தி விட்டார் என்று தீர்மானமான முடிவுக்குச் சிலர் வருவதை ஆட்சேபித்தே தீர வேண்டியிருக்கிறது.

— என். ஆர்.

ஸ்ரீஹரியின் வெளியூர் பயணம்

29-8-64ந் தேதி டாக்டர் ஸ்ரீஹரி அவர்கள் கிராண்ட் டிரங்கில் சென்னையிலிருந்து புறப்பட்டுக் காசிக்குச் செல்கிறார். 31-8-64, 1-9-64 ஆகிய இருதினங்களில் காசி சர்வகலாசாலையில் தங்கி மத்திய அரசாங்க நாட்டுவைத்திய ஆராய்ச்சிக் கழகத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டு 2-9-64ல் அவ்விடமிருந்து புறப்பட்டு 4-9-64ந் தேதி சென்னை வந்து சேருகிறார்.

மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து
நிவாரணம் அடையுங்கள்
— ரண சிகிச்சையையும்
தடுங்கள்

பொறுக்க முடியாத வலியா? தாங்க முடியாத அரிப்பா? எரிச்சலெடுக்கும் உணர்ச்சியா? ரத்தக் கசிவா? உடனடியாக சிகிச்சை செய்யத் தாமதி யாதீர்கள்! அலட்சியம் செய்தால், நோய் முற்றி ரணசிகிச்சை செய்ய வேண்டிவரும். 108 தேசங் களிலுள்ள டாக்டர்களால் சிபாரிசு செய்யப்பட்ட, நம்பிக்கையான ஜெர்மன் மூலநோய் களிம்பு ஹெடன்ஸா உபயோகித்து இப்பொழுதே நிவா ரணம் பெறுங்கள்! ஹெடன்ஸா வலியையும் அரிப்பையும் சீக்கிரம் நிறுத்தி, மலப் பிரவிருத்தி யைச் சுலபமாக கஷ்டமில்லாமல் செய்கிறது. முக்கியமாக, ஹெடன்ஸாவிலுள்ள சக்திவாய்ந்த மருந்துப் பொருள்கள் கிழிந்த நிவர்ரணமளிப்ப தோடு, வெடிப்புகளைச் சுருங்கச் செய்து, ஆரோக் கியமான தசைகளை வளர்க்கிறது. மூலநோய்க்குக் காலாகாலத்தில் ஹெடன்ஸா உபயோகித்தால் பிற்காலத்தில் ரணசிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்படாது என்பது ஞாபகமிருக்கட்டும்.

ஹெடன்ஸாவில் உணர்வழிக்கும் மருந்துகள் ஒன்றும் கிடையாது.

ஒரிஜினல் ஜெர்மன் முறைப்படி
இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

தி டாலர் கம்பெனி

337, தம்பு செட்டி தெரு
சென்னை-1

பிரபல மருந்து வியாபாரிகளிடம்
கிடைக்கும்.

83-DOL-2 A TM



வாணி தமிழ்
இங்கிலீஷ் போதினி

90 நாட்களில் தமிழ் மூலம் ஆங்கிலம் தானே இலக்கணமாகப் படிக்க, பேச, எழுத, சுலபமாகக் கற்க பெரிய புத்தகம்.
விலை தபால் செலவோடு ரூ. 6-25.

ஐசுவரியம் (குடிசைத் தொழில்)
சோப், இங்கி, பத்தி, [illegible]ல்ஹே போன்ற 206 புதுத் தொழில்கள் அடங்கியது.
விலை ரூ. 4-00. வி. பி. 0-85.

தமிழ் ஹிந்தி சுபோதினி
தமிழ் மூலம் சுலபமாக ஹிந்தி படிக்க பேச, எழுத, கற்க முடியும்.
விலை ரூ. 2-50. வி. பி. 0-85.

குடும்ப இலகு வைத்தியம்
பச்சிலை மூலிகைகள் கொண்டு ஆரோக் கியம், பலம்பெற வழிகாட்டும்.
விலை ரூ. 2-50. வி. பி. ரூ. 1-00.

மாட்டு வாகடம் (பசு வைத்தியம்)
கால்நடைகளின் நோய்களைப் போக்கும்.
விலை ரூ. 2-00 வி. பி. 85.

வாணி புக் டிபோ (K)

3. மலைய பெருமாள் தெரு. ரூம் நெ. 5
சென்னை — 1

பருக்கள் மறைந்து விடுகின்றன

நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித் தால் முகப்பருக்கள் எல்லாம் மறைந்து விடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும் வழவழப்பாகவும் மாக மாறுகின்றதையும் அவதைக் காண் பீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) சரு மத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள் கட் டிகள் செந்நிறத் தழும்புகள் மேலாகப் பரவும் படை, படர்தாமரை வெடிப் புகள் முதலிய உபாதைகளுக்குக் காரண மான கிருமிகளையும், பூச்சிகளையும் அழிக்க விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங் களில் இருக்கும் பூச்சிகளையும், கிருமி களையும் அழித்தாலன்றி உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப்பருக்களை மறையச் செய்து சருமத்தை மிருதுவாகவும் வழ வழப்பாகவும் இருக்கச் செய்யும் என்ற பூரண நம்பிக்கையுடன் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள்.

விதி விட்டதா?

கலாபாரதி

தேவதத்தன் என்ற ஓர் ஏழை மனிதன் வறுமை தாங்க மாட்டாது பல ஆண்டுகளாக உயிர் வாழ்வதற்கே திண்டாடிக்கொண்டிருந்தான். ஒரு காட்டு வழியே ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரைக்கும் போவது அவனது தினசரி வழக்கம். அங்கே கிடைக்கும் காய்கனி வகைகள்தான் அவனுக்கு அன்றாட உணவு.

இவனது நடவடிக்கைகளைத் தினமும் கைலாயத்திலிருந்து கவனித்து வந்தனர் உலகத்தின் உயிர்களுக் கெல்லாம் பெற்றோரான பராசக்தியும் பரமசிவனும். அந்த ஏழை திண்டாடுவதைக் காணப் பார்வதி தேவிக்கு வருத்தம் தாங்க முடியவில்லை. சிவனை நோக்கிக் கேட்கிறாள்:

''பாவம்... இந்த மனிதன் இப்படித் துன்பப்படுகிறான். உங்களுக்கு அவன் மீது கொஞ்சம்கூட இரக்கம், பச்சாத்தாபம் ஒன்றுமே இல்லையா? நீங்கள் ஏன் அப்படிப் பேசாமல் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் அறியலாமா?''

''தேவி! அவன் அதுமாதிரி அல்லல்பட வேண்டியது அவன் விதி... அவன் செய்த தீவினைகளுக்கேற்ப அவன் தலையெழுத்துப்படி துன்பங்களை அனுபவிக்கிறான்.''

''அவனது விதியைத்தான் சற்று மாற்றக் கூடாதா?''

''ஒருவனுக்கு எழுதிய விதியை, எழுதின பிரும்மாவால்கூட மாற்ற முடியாது. அப்படியென்றால், நானோ விஷ்ணுவோ இந்திராதி தேவர்களோ எப்படி மாற்ற முடியும்?''

''அப்படியானால் மார்க்கண்டேயனுக்கும், துருவனுக்கும், பிரகலாதனுக்கும், சாவித்திரிக்கும் விதியை மாற்றவில்லையா?''

''அவர்கள் தங்கள் அளவுக்கு மீறிய பக்தியால் வெற்றி பெற்றார்கள்... அதுவும் விதியின் வரம்புக்குள்தான் கட்டுப்பட்டு அமைத்துக்கொள்ள முடியும். பெரும் துயரங்கள், துன்பங்கள் ஓரளவு குறையும். உதாரணமாக மார்க்கண்டேயனுக்குப் பதினாறு வயதானால் இறந்து விடுவானென்று இருந்தது விதி. அவன் ஆண்டவன் அருள் பெற்று வரம் பெறும்போது 'என்றும் பதினாறாகவே இருக்கட்டும்' என்றுதான் சொல்ல முடிந்தது. அதனால் அவன் அந்த வயதினனாகவே சிரஞ்சீவியாகவே இருக்கிறான். சூரியோதயமானால் உன் கணவன் இறந்து விடுவான் என்று நளாயினிக்குச் சொன்ன போது தனது கற்பின் மகிமையால் சூரியோதயமே ஆகாமல் செய்து தனது லட்சியத்தில் வெற்றி பெற்றாள்.''

''நீங்கள் எனக்காக இந்த ஏழையைக் காப்பாற்றக் கூடாதா இப்போதாவது?''

''இவ்வளவு துன்பப்படுபவன் எப்போதாவது தவறிப் போயாவது 'ஆண்டவா...அப்பனே...' என்று ஒருதரமாவது நினைத்தானா இதுவரை.. இருக்கட்டும். இருந்தாலும் உனக்காக உதவுகிறேன் பார்!'' என்று புன்முறுவலோடு அவன் நடந்துபோகும் திசையில் அருள் பாலிக்கும் வகையில் கையை அமர்த்தினார்.

அவன் போகும் வழியில் சாக்குப் பைகள் நிறைய தங்கக் கட்டிகள், பொற்காசுகள், வெள்ளி நாணயங்கள், பட்டாடை, ரத்தினங்கள், வைரங்கள் இழைத்த அணிகள் வீட்டுக்குத் தேவையான பாத்திரங்கள், உணவுப் பண்டங்கள், காய்கனி வகைகள் எல்லாம் வைக்கப்பட்டுக் கிடந்தன.

காட்டு வழியே நேராக வெகு நேரமாக வந்து கொண்டிருந்த தேவதத்தனுக்குச் சாக்குப் பையை நெருங்கி அருகில் வரும் சமயம் அன்றைக்கென்று திடீரென்று ஒரு விபரீத எண்ணம் உதயமாயிற்று.

''இத்தனை வருஷ காலமாய் இந்தப் பாதை வழியே நான் நடந்து போய் வந்து, பாதையே தேய்ந்து போய்விட்டதே... இன்று ஒரு நாள் கண்ணை மூடிக்கொண்டே பாதையின் கொஞ்ச தூரத்தைக் கடந்தால் என்ன?''

அதே விதமாக மூடிய கண்களுடன் நடந்தான்...மூட்டை இருந்த இடத்தை விட்டுத் தடம் மாறிப் பாதையின் கொஞ்ச தூரத்தைக் கடந்தான். அவனுக்கு வரவிருந்த பேரதிருஷ்டம் அந்தப் பாபாத்மாவுக்கு ஒட்டவில்லை. இட்டவில்லை...அதுதான் அவனுக்கு விதி.

சற்று நேரத்துக்குப் பின் குருடன் ஒருவன் அந்த வழியே தட்டுத் தடுமாறிக் கொண்டே தனது கையிலிருந்த கோலை ஊன்றியபடி அங்கு வரும்போது, இடறி அந்த மூட்டைகளின்மீது விழுந்தான். பிறகு மூட்டைகளைத் தொட்டுத் தடவிப் பார்த்து அதன் உள்ளே இருந்தவைகளை உணர்ந்தான். பழம் ஒன்றை எடுத்துக் கடித்துச் சுவைத்தான். அவனுக்குப் பேரானந்தம் தாங்கவில்லை....கண் தெரிந்தால்கூட அவன் அவ்வளவு ஆனந்தப்பட்டிருக்க மாட்டான். கடவுளுக்கு வணக்கமும் நன்றியும் செலுத்திவிட்டு, கடவுளின் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே மகிழ்ச்சியுடன் அந்த மூட்டைகளைச் சுமந்து கொண்டு தன் இருப்பிடத்துக்குச் சென்றான்.

இந்த நிகழ்ச்சியைப் பார்த்த பின்னர், லோக மாதாவான உமாதேவி வியப்போடு சிவனைப் பார்த்து மந்தகாசம் புரிந்தாள்.



''ஒவ்வொரு மனிதனும் கஷ்டப்படுவதோ, சுகப்படுவதோ, அவனவன் செய்த தீவினை, நல்வினைகளைப் பொறுத்திருக்கிறது.... கஷ்டத்திலும் சுகத்திலும் இறைவனை வழிபடுபவன் தான் விமோசனம் அடைகிறான். இது உலக நியதி மட்டுமல்ல. சங்கரி, தெய்வ நியதியும்கூட!'' என்று முடித்தார் சிவன்.



அவளால் காத்திருக்க முடியவில்லை...

விருந்தாளிகள் வரும் வரை காத்திருக்க முடியவில்லை! உணவுப் பொருள்கள் கவர்ச்சிகரமாகவும், உண்ணும் ஆவலைத் தூண்டுவதாகவும் இருந்தன. அவைகள் சூரியன் மார்க் கோதுமைப் பொருள்களில் தயாரிக்கப்பட்டவை.

சூரியன் மார்க் மைதா, சூஜி, ஆட்டாவில் உணவுப் பண்டங்களைத் தயாரிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடியுங்கள்.

சூரியன் மார்க் மைதா, சூஜி, ஆட்டா கிழக்கு நாடுகளிலேயே முதன்முதலாக நிறுவப்பட்ட நியுமாடிக் மாவு மில்லில் கைபடாமல் சுகாதார முறையில் தயாரிக்கப்படுகின்றன.

சூரியன் மார்க் கோதுமைப் பொருள்களில் கோதுமையின் உணவுச் சத்துக்கள் செறிந்துள்ளன.


சூரியன் மார்க்
மைதா, சூஜி, ஆட்டா

EP-CFM-8

தயாரிப்பாளர்கள்:
செஞ்சுரி ப்ளவர் மில்ஸ் லிமிடெட்.,
330, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1
போன்: 21043-44-45 Grams: "MATHOORAN"

பாரம்பரியம்

ஏ.எஸ்.ராகவன்



எட்டுத் திக்கும் விட்டெறிந்த பராக்கிரமமும், வருவோர் போவோருக்கெல்லாம் வாரி வாரிக் கொடுத்த வள்ளன்மையும், சீட்டுக் கவிகளும் உலாக்களும் தூதுக்களுமாகச் செழித்த பெருமையும் தேய்ந்து இப்போது அந்தக் கவிகளின் மறு பதிப்புக்கூட வருவதற்கு வகையற்ற நிலையில் க்ஷீணிக்கத் தொடங்கிவிட்ட தமது ஜமீந்தார் பட்டத்தை எண்ணி வருந்தியவராய்ப் படுக்கையில் சாய்ந்திருந்தார் செல்வகேசவ காளிங்கராய பூபதி. எதிரே சுவர் மூலையில் அவரளவு உயரத்துக்கு வரையப்பட்ட சித்திரம் உருவிய கத்தியும், உருமாலையும், முறுக்கிய மீசையுமாக அவர் பட்டத்துக்கு வந்தபோது எத்தனை கம்பீரமாக இருந்தார் என்பதை, ஒரு வேளை எதிர்காலத்தினர் நம்பா விட்டால் என்ன செய்வது என்பதற்காகவே, சாட்சி கூறுவதுபோல நின்றது.

அது ஒரு காலம். இது ஒரு காலம்.

அவர் பட்டத்துக்கு வந்த போது இந்த ஊரே பிதுங்கி வழிந்தாற் போலக் கூடிய கூட்டமென்ன, கோயில்களிலெல்லாம் லட்சார்ச்சனையும் விழாக்களுமாகப் பெருகிய தெய்வ சாந்நித்தியமென்ன, வெள்ளைக்கார கவர்னரே வந்திருந்து மேன்மை தங்கிய சக்கரவர்த்தியின் சார்பில் அவருக்குச் சால்வை போர்த்திய வைபவமென்ன! போயிற்று. அதெல்லாம் அவர் காலத்தோடு போயிற்று.

காளிங்கராய பூபதி விரக்தியோடு வெளியே பார்த்தார். இன்னும் பனிப் படலம் ஒதுங்கவில்லை. பொழுது வெளுக்கவில்லை. மழை, வெயில், காற்று இவற்றை எப்படியாவது சமாளித்து விடலாம் போல் இருக்கிறது. இந்தப் பனி வந்து விட்டால், அவரால் தாங்க முடிவதே யில்லை. அடி வயிற்றிலிருந்து குமுறிக் கொண்டு உடலை ஓர் உலுக்கு உலுக்கிக் கொண்டு இருமல் பீறிடுகிறது. அப்பப்பா! தன் எதிரிக்குக்கூட இந்தக் காசநோய் வர வேண்டாம் என்று எண்ணினார் அவர். மார்பைத் தடவி விட்டுக் கொண்டார். மார்பா அது? இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் வருடினால் எலும்புகளைக் கச்சிதமாக எண்ணி விடலாம். அவ்வளவு மெலிந்து விட்டது உடல்.

ஆயிற்று. இன்றைக்குத் தேதி நான்கா? நாளைக்குக் கஜானாவுக்குப் போக வேண்டும்—'பென்ஷன்' பணம் வாங்க. ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் தேதியன்று பட்டுவாடா. கலெக்டர்களெல்லாம் அவரைத் தேடி வந்தது போக, இப்போது அவர் 'க்யூ'வில் நிற்க வேண்டியிருக்கிறது!

அவருக்கு வாழ்க்கையில் சலிப்பும், ஒட்டாத மன நிலையும் ஏற்பட்டு விட்டன. எத்தனையோ சீரும் சிறப்புமாக வளர்ந்து விட்டு இப்போது தம் காலின் கீழேயே புல் முளைப்பதைக் காணவும், கண்டு ஏதும் செய்ய இயலாது இருக்கவும் நேர்ந்தால் என்ன செய்வார்!

வெளியே தோட்டத்து ஆலமரம் விழுதுத் தாடிகளையே கைத்தடிகளாக ஊன்றிக்

கொண்டு எஜமானன் விசுவாசப் பிரகடனமாக, கிழக்கே உதித்த சூரியன் தன்னுடைய அனுமதியின்றி அந்த அரண்மனைக்குள் பிரவேசிக்கக் கூடாதென்று தடுத்தவாறு நின்றது. அதன் வயது எவ்வளவோ, அவருக்குத் தெரியாது.

''எசமான்!'' வீரண்ணன் வந்து நின்றான்.

''யாரது?'' என்று கேட்டவாறே இரும்பினார் பூபதி. மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காது. குரல் கணீரென்று கேட்டது.

''வீரண்ணனுங்க....''

''என்ன விஷயம்?''

''வந்துங்க.... சின்ன எசமானரு... மேல் மாடியிலே படுத்திருந்தாருங்க..... விடிஞ்சு பார்த்தா.....''

பூபதி தலையை ஆட்டினார். தகவலைத் தெளிவாக, இன்னும் தெளிவாகக் கூறும்படி சமிக்ஞை காட்டினார்.

''விடிஞ்சு பார்த்தாக் காணோமுங்க.... வீடு பூராத் தேடிட்டோம்...... ஊர் பூராவும் தேடிட்டோம்..... பத்து வயசுப் பிள்ளை எங்கே போயிருக்கும்னு புரியல்லீங்க.''

''ஐயய்யோ! என் செங்கல்வராயனையா காணோம்?''

''ஆமாமுங்க.''

''என்னடா இது, வேடிக்கையாயிருக்குதே! நீங்கனெல்லாம் காவல்தான் காக்கிறீங்களா, இல்லே என்ன செய்துகிட்டு இருக்கீங்க? மாடியிலே படுத்திருந்தவன் எங்கே போயிருப்பான்?..... இல்லே எங்கே போயிருப்பான்னு கேக்கறேன்..... போங்கடா, போய் வலை போட்டுத் தேடுங்க....''

வீரண்ணன் திரும்பினான்.

பூபதி ஒரு முறை இருமி ஓய்ந்தார். இருமல் சுவாச கோசத்திலிருந்து மட்டும் வருவதாகத் தெரியவில்லை. அதென்னவோ உடம்பே ஓர் ஆட்டம் ஆடி விடுகிறது. ஆகாயத்திலே சில சமயம் இடி புறப்படுமே, கடபுட, குடபுட வென்று ஒரு மூலையிலிருந்து புறப்பட்டு உருண்டு கொண்டே வந்து, பிறகு படீரென்று வெடிக்குமே, அந்த மாதிரி. இருமினால் கண்ணில் நீர் வந்து விடுகிறது. இருமினால் வருவது இருக்கட்டும். கொட்டாவி விட்டாலே வருகிறது.

''என்னுங்க....'' அன்னம்மாள் வந்தாள்.

அவளை நிமிர்ந்து பார்த்தார் பூபதி. மகனைக் காணோம் என்கிற துக்கம் அவள் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது.

''பயப்படாதே, அன்னம்..... அவன் திரும்பி வந்து சேருவான். அவனை யாருன்னு நினைச்சே? .... அவனுடைய தாத்தா பெயரைச் சும்மா பெயரளவுக்கு அவனுக்கு வைக்கல்லே...... செங்கல்வராய பூபதின்னா அந்தக் காலத்திலே அழுத பிள்ளைகூட வாய் மூடும்'' என்றார் அவர்.

இந்த வார்த்தைகள் தாயுள்ளத்துக்குச் சற்று ஆறுதலாக இருந்தன. என்றாலும் அவளால் புலம்பாமல் இருக்க முடியவில்லை. ''சின்னப் பையனுச்சுங்களே, எங்கே எப்படித் தனிக்கிறானோ தெரியல்லியே!... விடியக் காலம் அஞ்சாவது மணிக்கு எழுந்திரிச்சி, படிக்க ஆரம்பிக்கிற பிள்ளை இன்னிக்குப் போன மூலை தெரியல்லியே!'' என்றாள்.

''அவன் எங்கேயும் போயிருக்க மாட்டான். இதெல்லாம் வீண் காபுரா... எங்கேயாவது விளையாடிக்கிட்டிருப்பான்.... நல்லாத் தேடச் சொல்லு.''

''தேடியாச்சு. விடியற் காலையிலிருந்து தேடுறாங்களே.''

பூபதி தலையை ஆட்டினார். அன்னம்மாளுக்கு ஆறுதலாக ஏதோ சொன்னாரே தவிர, இப்போது அவருக்கும் உள்ளூற பயமும் கவலையும் மிகுந்து விட்டன. விடியற்காலையிலிருந்தே தேடியும் மகன் அகப்படவில்லையென்றால்.....

''எழுந்ததுமே எங்கிட்ட வந்து நிப்பானே செங்கல்வராயன்..... நேத்திக்குச் சொல்றான் பாருங்க, சீமைக்குப் போகப் போகிறானாம் படிக்க..... 'நல்லாப் போயிட்டு வாடா, ராசா. ஆனால் அங்கிருந்து எந்த வெள்ளைக்காரக் குட்டியையும் இழுத்துக்கிட்டு வந்துடாதே'ன்னேன்.......'' அந்த நிலையிலும் அவள் முகத்தில் நாணம் படர்ந்தது.

பூபதியின் இதழ்க்கடையில் முறுவல் கிளர்ந்தது. அவரைப் பொறுத்தவரையில் செங்கல்வராயன் மேல் நாடு செல்வதோ அங்கிருந்து ஒரு வெள்ளைக்காரக் குட்டியை அழைத்துக் கொண்டு திரும்புவதோ அப்படி ஏதும் நிறைவேற முடியாதவைகளாகத் தெரியவில்லை. அநேகமாகப் போன பையன்களெல்லாம் படிப்பைச் சம்பாதித்துக் கொண்டு திரும்புகிறார்களோ இல்லையோ, பெண்ணைச் சம்பாதித்துக் கொண்டு வருகிறார்கள். காதல் என்ற தத்துவம் அவ்வளவு பலவீனமாகி விட்டது.

அவர் எழுந்தார். ஆளோடிப் பக்கம் வந்தார். சாய்வு நாற்காலியை அங்கு கொண்டு வரச் சொல்லி அதிலே அமர்ந்து கொண்டார். வாசலிலிருந்து புறக்கடை வரையில் அவருடைய மேற்பார்வையில் இப்போது மகனைத் தேடும் படலம் மீண்டும் தொடங்கியது. ஊர் முழுதும் ஆட்கள் அனுப்பப்பட்டார்கள்.

''வீரண்ணா, என்னடா இது?'' என்று கேட்டார் அவர்.

''மாயமா இருக்குதுங்க.....'' என்றான்.

மாயம்தான். மகன் தானாக எங்கும் போயிருக்க நியாயமேயில்லை. யாரோ அவனைக் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள் என்பது நேரம் ஆக ஆக அவருக்கு விளங்கி விட்டது.

அது உண்மைதான் என்பது பிற்பகலில் தெரிந்து விட்டது. யாரோ ஓர் ஆள் வந்து தன்னிடம் ஒரு கடிதத்தைத் தந்ததாகவும், அதை ஜமீன்தாரிடம் சேர்ப்பித்து அதற்குரிய பதிலைத் தயாராக வைத்திருந்தால் மறு நாள் அதே நேரத்தில் வந்து பெற்றுக் கொள்வதாகவும் சொல்லிப் போனதாக வீரண்ணன் கூறுவதற்கு முன்பே, அந்தக் கடிதத்துக்குள் அடங்கியுள்ள செய்தி என்னவென்பதை அவர் புரிந்து கொண்டு விட்டார். கடிதத்தைப் பிரித்தார்.


''காளிங்கராய பூபதி அவர்களுக்கு.

உங்கள் மகன் இங்கே எங்களிடம்தான் இருக்கிறான். அவனைத் திரும்பப் பெற

வேண்டுமென்றால், இருபதாயிரம் ரூபாய் செலுத்தப்பட வேண்டும். நாளை எங்கள் ஆள் மீண்டும் வருவான். பணம் வரவில்லை என்றால் உங்கள் மகனைக் காண முடியாது என்பதைக் கண்டிப்பாக அறியவும்.''

விலாசமில்லை, பெயரில்லை, ஊரில்லை. இத்தகைய கடிதங்களின் தன்மை எதுவோ, அது பரிபூரணமாக இருந்தது.

பூபதி கடிதத்தை மடித்துத் தலையணையின் கீழ் வைத்தவாறே, ''வீரண்ணா! நாளைக்கு அந்த ஆள் இதே நேரத்துக்கு வருவான்......... அவனை என்னிடம் அனுப்பு'' என்றார்.



''மாப்பிள்ளே! பஸ் வருவதற்கு நேரமாகும் போலிருக்கிறது. டாக்ஸியிலே போவோமா?''
''உங்கள் மணிபர்ஸை எடுங்கள், பார்த்துச் சொல்கிறேன்!''

பூபதி தலையை ஆட்டினார். வந்தவன் கையை உதறிக் கொண்டு போய் விட்டான்.

அன்னம்மாள் அலறிக் கொண்டு வந்தாள். ''என்னங்க, இப்படிச் சொல்லிப்புட்டீங்க. என் மகனைக் கொன்னு போட்டு விடுவானுங்களே, பாவிங்க!'' என்று பலமாக அழுதாள்.

''அழாதே, அன்னம். நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்'' என்றார் அவர் வேதனையோடு. அவள் வாயால் புலம்புகிறாள். அவரோ உள்ளுக்குள் ஆற்றாமையும் சீற்றமும் பொங்கப் பொங்கப் புலம்புகிறார். ஆனால் அவருக்கு ஒரு தைரியம், நம்பிக்கை. மகன் செங்கல்வராயனுக்குத் நீர்க்காயுசு என்று நொண்டி ஜோசியர் முதற் பார்வையிலேயே சொல்லி யிருந்தார். நொண்டி ஜோசியர் பிரம்மாவின் மறு பிறவி. அவர் சொன்னால் சொன்னதுதான்.

எப்படியோ மகன் உயிரோடு இருக்கிறான் என்பதைக் கேட்ட அன்னம்மாளுக்குக் கொஞ்சம் நிம்மதி பிறந்தது. பூபதிக்கோ நிம்மதி இல்லாது போயிற்று. இப்படி ஒரு சோதனை வருமென்று அவர் எதிர்பார்க்கவில்லை.

மறு நாள் அந்த ஆள் வந்தான்.

''வாப்பா.... உனக்குப் பதிலை ஒரே வார்த்தையில் சொல்லி விடுகிறேன். என்னிடம் பணம் இல்லை, தருவதற்கு'' என்றார் பூபதி எடுத்த எடுப்பிலேயே.

இதை அவன் எதிர்பார்க்கவில்லை.

''என் மகன் திரும்பி வரவேண்டும் என்றுதான் கவலைப்படுகிறேன்..... ஆனால் இருபதாயிரம் ரூபாய் என்பது இப்போது மகனைவிட அருமையான பொருள் எனக்கு.''

வந்தவன் சற்று யோசித்தான். ''வேண்டுமென்றால் தொகையைக் குறைத்துக் கொள்ளலாம். நான் சொல்லிப் பார்க்கிறேன்'' என்றான்.

''ஹஹ்ஹா..... அது பயன்படாது. என்னிடம் பணத்தை எதிர்பார்க்கக் கூடாது. தவிரவும் இந்த மாதிரி மிரட்டலுக்கெல்லாம் பணிகிற வம்சமில்லை இது....''

''அப்படியென்றால்.....?''

''இரு. இரு. நீ சொல்லப் போவதை நானே சொல்கிறேன். பணம் தராவிட்டால் என் மகனைக் காண முடியாது என்பாய். இதோ பார், அவன் உடலில் ஓடுகிற ரத்தம் சாமானிய ரத்தமில்லை. எங்கள் முன்னோர்களின் பெருமையும் பராக்கிரமமும் அவனிடம் இருக்கத்தான் வேண்டும். பத்தாவது வயதிலேயே என் மகனை நான் வெளியே அனுப்பியிருந்தால் அவன் எங்காவது எப்படியாவது பிழைத்துக் கொள்வான் இல்லையா? அப்படி எண்ணிக்கொள்கிறேன். நீ போய்வரலாம்.'

''உங்கள் முடிவு இதுதானா?''

நாட்கள் மாதங்களாவதும் மாதங்கள் வருடங்கள் ஆவதும் காலத்துக்கு ஒரு குருட்டுக் கணக்காக இருக்கலாம். மனிதர்களுக்கோ அது எத்தனையோ உணர்ச்சிகளையும் சம்பவங்களையும் பிடித்துச் சமைத்த ஒரு தத்ரூபமான பிரமாணம். அன்னம்மாள் எத்தனை வேதனைப்பட்டாள் என்பதை நம்மால் சொல்ல இயலாது. க்ஷயரோகத்துக்கும் இருமலுக்கும் சவால் விட்டுக் கொண்டு மிடுக்காகச் சாய்ந்திருந்த பூபதி எப்படித் தவித்தார் என்பதையும் சொல்ல இயலாது.

எட்டு ஆண்டுகள் ஓடி விட்டன.

நொண்டி ஜோசியர் சொன்னது போல் செங்கல்வராயனுக்குத் தீர்க்காயுசுதான். பிறந்த வீட்டுச் சூழ்நிலையிலிருந்து பிரிக்கப்பட்டு மலைகளும் காடுகளும் நிறைந்த பகுதிக்கு வந்ததும் அவன் அழ ஆரம்பித்து விட்டான். அந்தக் கொள்ளைக் கூட்டத்தினரின் தலைவன் நல்லவன் அல்ல. ஆனால் நல்லவர்கள்தான் பிறருக்கு உதவுவார்கள் என்பதில்லையே? பாறையிலும் நீர் கசிவதுண்டு. எப்படியோ செங்கல்வராயனிடம் அவனுக்கு ஒரு பற்றுதல் ஏற்பட்டு விட்டது.

ஒரு நாள் காலையில் தூக்கம் பிடிக்காமல் வியாதியோடு போராடிக் கொண்டிருந்த பூபதியாரின்முன் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு வந்தானே அதே ஆள் வந்து நின்றான்.

''வாப்பா..... என்ன விஷயம்?'' என்று கேட்டார் அவர்.

''உங்கள் மகனைத் திருப்பி அனுப்புவதாக எங்கள் தலைவர் சொல்லச் சொன்னார்.''

''அனுப்புங்களேன்.''

''ஆனால் இத்தனை காலமும் அவன் அங்கேயே இருந்து விட்டதால் அங்கிருந்து அவன் நகர மாட்டேனென்கிறான்.''

பூபதி அவனை உற்றுப் பார்த்தார். அவன் சொல்லிய சேதி வியப்பாக இருந்தது அவருக்கு. செங்கல்வராயன் வர மறுக்கிறானா? ஏன்?

''நீங்க ஒரு கடுதாசி கொடுத்தீங்கன்னு அதைச் செங்கல்னுகிட்டே காண்பித்து. உங்கப்பா வரச் சொல்றாரு. புறப்படுன்னு சொல்லலாம்...... பழைய ஞாபகமே அத்துப் போச்சு செங்கல்னுக்கு'' என்றான் அவன் தொடர்ந்து.

பூபதியின் இதழ்க்கடையில் இலேசாக முறுவல் அரும்பிற்று. ''நீ சொல்வது சரியான யோசனைதான்... ஆனால் அவன்தான் என் மகன் என்பது எனக்கு எப்படித் தீர்மானமாகத் தெரியும்? தவிரவும் அவனே வர மறுப்பதில் ஏதோ ஒரு காரணம் இருக்கிறது என்று தோன்றுகிறது'' என்றார்.

வந்தவன் திடுக்கிட்டுப் போனான். பணப் பிரச்னை இல்லாமல் மகனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளக் கிழவர் துள்ளி எழுவார் என்றுதான் அவன் எதிர்பார்த்தான். ஆனால் இந்தப் பாரம்பரியமே வேறு என்பதை அவன் என்ன கண்டான்!

வெறும் கையோடுதான் அவன் திரும்பும் படியாயிற்று.

அன்னம்மாள் மூக்கைச் சிந்தினாள். வயதாகி விட்டதால் பெரியவருக்கு ஏதோ மூளைக் கலக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று மூத்த மகன்கள் இரண்டு பேரும் உறுமினார்கள். செங்கல்வராயனுக்குப் பின் பிறந்த தங்கை ஒருத்திக்கு இதெல்லாம் புரியவேயில்லை.

ஆனால் கிழவரின் கணக்கு பொய்க்கவில்லை. மூன்றாம் நாள் செங்கல்வராயன் வந்து சேர்ந்தான். அவன் மட்டும் வரவில்லை; அவனுடன் ஓர் அழகான பெண்ணும் வந்தாள். பெட்டி பெட்டியாகச் சாமான்கள் வேறே வந்தன.

''யாரடா அது?'' என்று கேட்டார் பூபதி.

''இவள்தான் நீலா'' என்றான் அவன்.

''நீலாவா, நிலாவா?'' என்றார் அவர் சிரித்தவாறே. வாஸ்தவத்தில் முழு நிலவைப் போலத்தான் இருந்தாள் அவள். காட்டில் பிறந்திருந்தாலும் நாட்டு நாகரிகத்துக்குச் சவால் விடும் இயற்கை அழகு.

அவளைப் பார்த்ததுமே முழுக் கதையும் அவருக்கு விளங்கி விட்டது. செங்கல்வராயனிடம் அவர் எதையுமே விசாரித்துத் தெரிந்து கொள்ளவில்லை. அதற்கு அவசியமும் இல்லை. இதோ எதிரில் நாணம் குழைய, அழகு பொலிய நிற்கிறாளே, இந்தப் பெண் செங்கல்வராயனிடம் மனத்தைப் பறி கொடுத்து அவனுடன் தன் எதிர் காலத்தை நிர்ணயித்துக் கொள்ள வந்திருக்கிறாள். அவள் யாராக இருக்கக் கூடும் என்பதும் அவருக்குப் புரிந்தது. கொள்ளைக் கூட்டத்தினரின் தலைவனின் மகள் அவள். செங்கல்லு — அதுதான் செங்கல்வராயன் — தன் பாரம்பரியப் பெருமைக்கு ஏற்பக் காட்டையே ஜெயித்துத் திரும்பியிருக்கிறான். இந்த அருமையான பரிசோடு. இருபதாயிரம் ரூபாய் கேட்டவனையே இருபது லட்சம் தரும்படி செய்துவிட்ட பெருமையோடு.



''இவர்தான் மிஸ்டர் ராமன்! ரொம்ப தெய்வ பக்தி உள்ளவர்! நியமம் நிஷ்டையெல்லாம் உண்டு!''

''ஓஹோ! இப்போ அவர் நிஷ்டையில் இருக்காப்பலே இருக்கு!''

பூபதிக்குப் பெருமை பிடிபடவில்லை. இப்போது அவர் இருமியதுகூட அந்தரங்கத்திலிருந்து வெளிப்பட்ட பாரம்பரிய கம்பீரமாக ஒலித்ததே தவிர, அதனால் அவருக்கு வலியோ, வேதனையோ இல்லை.

''பார்த்தாயா அன்னம், உன் மகன் ஒரு வெள்ளைக்காரக் குட்டியை இழுத்துக் கொண்டு வந்துவிடுவானோ என்று பயப்பட்டாயே, அவன் யாரை இழுத்துக்கொண்டு வந்திருக்கிறான், பார்'' என்றார்.

அன்னம் சிரித்தாள். எவ்வளவோ நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் அவள் சிரிக்கிறாள். ''போங்க... இது யாருன்னு நெனைச்சீங்க?... என் ராசாத்தி தெய்வலோகத்து ஐராவதம்'' என்றாள்.

நீலா பெரியோர்களை நமஸ்காரம் செய்தாள். மூக்கும் காதும் கழுத்தும் மின்னின.

''என் பரம்பரை சீர் கெட்டுவிடவில்லை... இந்த ரத்தத்தின் பெருமை குறைந்துவிடவில்லை. அன்றைக்கு வந்தவன் என்னிடம் கைச்சாத்து கேட்டானே, கொடுத்திருந்தால் என்ன ஆகியிருக்கும் தெரியுமா? மகனை மட்டும் திருப்பி அனுப்பியிருப்பார்கள். உங்க அப்பா வரச்சொல்லி யிருக்காரு. நீ அவசியம் போயிட்டு வான்னு சொல்லி வெறும் கையோடு அனுப்பியிருப்பார்கள். நானு தருவேன்?... இப்பப் பாரு.... பணத்துக்குப் பணம், பொண்ணுக்குப் பொண்ணு, பெருமைக்குப் பெருமை... அவனை யாருன்னு நெனைச்சே?... செங்கல்வராய பூபதின்னு பேர் வைச்சாலே, திக்கெல்லாம் வெற்றிக் கொடி நாட்டிட்டு வர்றவன்னு அர்த்தம்... சரி... எனக்கு நேரமாவுது.. வீரண்ணா! வண்டியைக் கட்டு...டவுனுக்குப் போகணும், பென்ஷன் வாங்க.''

கிழக்கே உதித்த சூரியன் தயங்கித் தயங்கித் தோட்டத்து ஆலமர நிழலிலேயே நின்றான். இந்த அரண்மனைக்குள் அவனால் அவ்வளவு சீக்கிரம் கால் வைக்க முடியுமா?

டிரில் மற்றும் லாங்கிளாத்
வாங்கும் பொழுது

டுவின் டஸ்கர்

சின்னம்
இருக்கிறதா என்று
கவனித்து வாங்கவும்

நீங்கள் நம்பும் தரத்திற்கு
அது ஒரு அத்தாட்சி



ஹார்வி
டுவின் டஸ்கர்

டிரில் மற்றும் லாங்கிளாத்

மதுரை மில்ஸ் தயாரிப்பு
உயர்ந்த ரக நூல்களுக்கு பிரக்யாதி பெற்றது.

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்., மதுரை.

மானேஜிங் ஏஜெண்டுகள் :
ஏ & எப் ஹார்வி லிமிடெட்.

மதுரையைச் சேர்ந்த ஹார்வீஸ்

B3.HMC-14 A TAM

அத்தியாயம் ஐம்பத்துநான்கு

ஆத்மாவின் ஜன்னல்

இரவு மணி பத்து ஆயிற்று! அப்போதும் மேஜர் ராமதுரை தம் சிம்மாசனத்தை விட்டு அகலாமலே உட்கார்ந்திருந்தார். தம் பேரன் வெளியேறிய வாசற் கதவு மீதே பதித்திருந்த தம் விழிகளையும் அவர் எடுக்கவேயில்லை.

அவருடைய உள்ளம் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு விதமாகக் குமைந்து கொண்டே இருந்தது. அந்த அசட்டுப் பயல் இன்னும் ஏன் திரும்பி வந்து என்னிடம் மன்னிப்புக் கேட்கவில்லை? எவ்வளவு நேரம்தான் என்னை இப்படிக் காத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும்படி செய்யப் போகிறான்? ஆனால் அவன் எப்படி வந்து என்னிடம் மன்னிப்புக் கேட்பான்? வீர பரம்பரையின் ரத்தத்துக்குரிய ரோஷம் அவனுக்கும் இருக்குமல்லவா? அவன் பெரிதாக மதிக்கும் அந்த வாத்தியாரம்மாவையும் அவனுடைய தாயாரையும் நேரடியாகவே அப்படித் தாக்கிப் பேசி அவன் மனத்தைப் புண்படுத்தியிருக்கக் கூடாது! வேறு விதமாகச் சுற்றி வளைத்துத்தான் அவனை மடக்கியிருக்க வேண்டும்! ம், அவன் வரட்டும்....

கடிகாரத்தின் 'டிக் டிக்' என்ற ஒவ்வோர் ஒலியையும் கிழவர் தம் மனத்துக்குள் எண்ணிக் கொண்டேயிருந்தார். திடீரென்று வாசற் கதவு திறந்தது. கிழவர் ஆவலோடு பார்த்தார். அவருடைய பேரன் பிச்சுமணி வரவில்லை. பட்லர் இருதயசாமிதான் கையை விரித்து அபிநயம் காட்டிக் கொண்டே வந்தான்.

''எஜமான்! சின்ன எஜமானை எங்கும் காணோம்!'' என்று அவன் உத்தியோக தோரணையில் தன் குரலையே முரசாக்கி அறிவித்தான். வளர்த்த பாசத்தின் 'தம்பி' என்ற அடைமொழி இப்போது 'சின்ன எஜமான்' என்ற அடைமொழிக்குள் ஈட்டி முனைபோல் மறைந்து நின்று கிழவரின் நெஞ்சைக் குத்தியது.

''எல்லா இடங்களிலும் நன்றாகத் தேடிப் பார்த்தாயா?'' என்று மேஜர் அலறினார்.

''ஆறு குளங்களைத் தவிர பாக்கி எல்லா இடங்களிலும் நன்றாகத் தேடிப் பார்த்துவிட்டேன்!''

''சரி, சரி. தானாகவே அவன் திரும்பி வருவான்!''

''அது எப்படி வரும்? அதுவும் மனுஷன்தானே?'' என்று பட்லர் முனகினான் — மேஜரின் காதில் உரைக்கும்படியாகவே!

வேறொரு சமயமாக இருந்தால், மேஜர் அந்தப் பட்லரின் பல்லை உடைத்திருப்பார். ஆனால் இப்போதோ தம் பேரனைத் திருப்பி அடைவதற்கும், மனத்தைச் சமாதானப் படுத்துவதற்கும் இருதயசாமி அத்தியாவசியமானவனாகத் தோன்றினான்.

''சரி, நீ போய்ச் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்!'' என்று மேஜர் அவனுடைய கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாய் அவனைப் பின்கட்டுக்கு விரட்டினார்.

அன்றிரவு அவர் சாப்பிடவில்லை.

இரவு மணி பதினொன்று அடித்தது.

மேஜர் மெல்லத் தம் சிம்மாசனத்தை விட்டு எழுந்து ஜன்னலை நோக்கி விறைப்பாகவே நடந்து சென்று ஜன்னல் கதவுகளைப் படபடப்போடு திறந்து வெளியே தோட்டத்தை ஊடுருவிப் பார்த்தார்.

இரவின் சூன்ய உணர்ச்சியில் அவரைச் சுற்றியுள்ள எல்லாமே அசைவற்று நிற்பனபோல் தோன்றின.

வெகு தொலைவில் இளங்காற்று மட்டும் மரக் கிளைகளில் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது. தலைக்கு மேலே இராப் பனியின் மூடு திரைக்குப் பின்னால் நட்சத்திரங்கள் மங்கலாக மினுமினுத்தன. கிழவரின் கண்ணெதிரே தோட்டம் முழுதும் அயர்ந்து தூங்குவதுபோல் தோன்றியதென்றாலும்,



அதிலிருந்து விசித்திரமான நறுமணம் மிதந்து வந்தது. அது மல்லிகைப் பூக்களின் மணம்தான்!

அந்த மணம் கிழவரின் மூக்கை எட்டியதும் அவர் வலிப்புநோய் கண்டவர்போல் தம் முகத்தைச் சுளித்துக் கொண்டார். அதைத் தொடர்ந்து அவர் கண் முன்னால் ஒரு பழைய காட்சி மங்கலாக விழுந்தது.

ஐம்பது வருஷங்களுக்கு முன்னல் அந்தத் தோட்டத்தில் ஒரு மல்லிகைப் பந்தல் போட வேண்டுமென்று ஒரு கட்டழகி சொன்னுள். அங்கு தன் கைகளாலேயே செடிகளை நட்டு அவற்றில் பூக்கப் போகும் பூக்களையெல்லாம் தன் கைகளாலேயே பறித்துத் தன் தலை நிறையச் சூடிக் கொள்ள வேண்டும் என்று அந்தக் கட்டழகி ஆசையோடு சொல்லிக் கைகொட்டிச் சிரித்தாள். ஆனல் அவள் அங்கே பூக்கள் பறிக்கவுமில்லை. மல்லிகைப் பந்தல் போடவுமில்லை. அப்போது மேஜரின் வாழ்க்கையில் வசந்த காலம்! காதல் போன்ற பைத்தியக்கார எண்ணங்களெல்லாம் அந்தக் காலத்தில் மேஜருக்கும் ஓரளவு இருந்தது. ஆனல் அவருடைய காதலுக்குரிய கட்டழகி அவருடைய குலத்துக்கோ, அந்தஸ்துக்கோ ஏற்றவளல்ல என்று அவருடைய தகப்பனர் உணர்ந்ததும், பரம்பரைப் பெருமைக்கே அவர் முதலிடம் கொடுத்தார். அதன் பிறகு அவருடைய காதலி ஓர் ஏளனச் சிரிப்புடன் அவருடைய வாழ்க்கையை விட்டே மறைந்து போய் விட்டாள். அவள் வெளியே நடந்து செல்லும் காட்சியை இதே ஜன்னல் வழியாகத்தான் அவர் கண்ணிமை கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றர். அப்போது அவர் இருதயத்தில் முதன் முதலாக ஒரு சூன்ய உணர்ச்சி ஏற்பட்டது. ஆனல் அதன் பிறகு அவர் தம் அந்தஸ்துக்கு ஏற்ற தம் குலப் பெண்மணி ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டு ஒரு குமாரனையும் பெற்றுக் குடும்ப வாழ்க்கையில் மூழ்கியதும், அந்தச் சூனிய உணர்ச்சி அறவே மறைந்து போய்விட்டது.

இப்போது தம் வாழ்க்கையின் ஒரே பிடிப்பான தம் பேரனும் தம்மை விட்டுப் போய்விட்டானே என்று நினைக்கும்போது மறுபடியும் அந்தச் சூனிய உணர்ச்சி அவரைப் பற்றிக்கொண்டு விட்டது.

அவர் தம் பேரனைப் பற்றிய எண்ணங்களிலேயே தம் மனத்தைத் திருப்பினர். பிச்சுமணி சிறுவனக இருந்த போது எத்தனையோ தடவைகள் தன் தாத்தானிடம் கோபித்துக் கொண்டு, வெளியே ஓடியிருக்கிறன். ஆனல் அதிக தூரம் போய்விட மாட்டான். தோட்டத்தில்தான் எங்காவது இருட்டில் ஒளிந்து கொண்டிருப்பான். சிறிது நேரங் கழித்துப் பேரனைக் காணவேண்டுமென்ற தவிப்போடு மேஜர் தம் பட்டாளத்துத் தோரணையில் சீட்டியடிப்பார். அந்தச் சீட்டிச் சத்தம் கேட்டதும் பேரன் தன் கோபத்தை யெல்லாம் மறந்து குதித்தோடி வந்து தன் தாத்தாவைக் கட்டிக்கொள்வான். அவன் அவ்வாறு ஓடிவரும் காட்சிகளை யெல்லாம் இதே ஜன்னல் வழியாகத்தான் மேஜர் பார்த்துக்கொண்டு நிற்பார்!

இரவு பன்னிரண்டு மணி அடித்தது. மேஜர் தம்மை மறந்த நிலையில், யந்திர கதியில் மெல்லச் சீட்டியடித்தார்! ஆனல் பிச்சுமணி வரவில்லை. மீண்டும் மீண்டும் சீட்டியடித்தார். பிச்சுமணி வரவேயில்லை !

கிழவரின் கண்கள் கலங்கின. முகத்தைப் புதைத்துக் கொண்டு 'ஓ'வென விம்மி விம்மி அழ வேண்டும் போல் இருந்தது. ஆனல் கிழவர் யாருடைய மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழ முடியும்?...

அவர் ஒரு நாற்காலியைத் தூக்கி வந்து ஜன்னலருகில் போட்டுக்கொண்டு அதில் உட்கார்ந்தார்.

ஒவ்வொரு நிமிஷமும் தனிமை உணர்ச்சியை அவரால் தாங்கவே முடியவில்லை. இந்த உலகம் முழுவதும் சூனியமாகி விட்டது போலவும், அந்தச் சூனியத்தின் நடுவே தாம் ஒருவரே தன்னந்தனியாக நின்று கொண்டிருப்பதுபோலவும் உணர்ச்சிகள் குவிந்து அவரைத் தின்று கொண்டிருந்தன.

கடிகாரத்தின் 'டிக் டிக்' என்ற ஒலிகளோடு நிமிஷங்களும் மணிகளும் ஒவ்வொன்றுகக் கழிந்து கொண்டேயிருந்தன. கடைசியில் இரவு அணு அணுவாகத் தேய்ந்து பொழுதும் விடியத் தொடங்கியது.

தூரத்தில் காகங்கள் கரைந்தன. நாய்களின் ஊளைகள் கிளம்பின.

அப்போதும் கிழவர் தம் நாற்காலியை விட்டு அசையவில்லை.

அவருடைய தோட்டத்துக்கு வழக்கமாக வரும் குருவிகள், ஆடுமாடுகள் எல்லாம் வந்தன.

ஆனல் அவருடைய பேரன் பிச்சுமணி இன்னும் வரவில்லை !

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு (பிரைவேட்) லிட்.,

(பிறுவியது)

"ஸீனு விஹார்", 17-A, ஸயான் - மாதுங்கா எஸ்டேட்

(கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்)

Post Reg No. 6759. பம்பாய் - 22 தந்தி: "GROWRICH"

போன்: 471455

25 மாதங்கள்	குறுகிய கால ஏலச் சிட்டுகள் 1964 செப்டம்பர் மாத ஸீரிஸ்	25 அங்கத்தினர்கள்

சேரக் கடைசி தேதி 12-9-1964 ... முதல் ஏலத் தேதி 13-9-1964

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரு. 200/-	ரு. 5,000/-	F	ரு. 25/-	ரு. 625/-
B	ரு. 100/-	ரு. 2,500/-	G	ரு. 20/-	ரு. 500/-
C	ரு 50/-	ரு. 1,250/-	J	ரு. 10/-	ரு. 250/-

நீண்டகால ஏலச் சீட்டுகள்

சேரக் கடைசி தேதி 10-9-1964 ... முதல் ஏலத் தேதி 12-9-1964

60 மாதங்கள் 60 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	குறித்த தள்ளுபடி
C	ரு 200/-	ரு. 10,000/-	ரு. 1,000/-
A	ரு 100/-	ரு. 5,000/-	ரு. 500/-
B	ரு. 50/-	ரு. 2,500/-	ரு. 250/-
D	ரு. 20/-	ரு. 1,000/-	ரு. 100/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

வெள்ளிக்கிழமை (வார விடுமுறை நாள்)

வேலை நேரம்: காலை 8 முதல் 11 மணி வரை; மாலை 4 முதல் இரவு 8 மணி வரை

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

தலைமை ஆபீஸ்: மதராஸ்-5

இதர கிளைகள்: 1 70, முதல் மாடி, 5வது மெயின் ரோடு, ஸ்ரீனிவாச பில்டிங், காந்தி நகர், பெங்களூர்-9
2 "கான்லன் ஹவுஸ்", 1/24, ஆஸப் அலி ரோடு, புது டில்லி-1
3 4/73, இருங்குறு மார்க்கெட், W. E. A., கரோல்பாக், புது டில்லி 5
4 198, முதல் மாடி, ஜோர்பாக் நர்ஸரி, புது டெல்லி-3
5 48, லேக் பிளேஸ், கல்கத்தா-29

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

காங்கேயநல்லூரில்

திருமுருக கிருபானந்தவாரியார் கழக உயர்நிலைப்பள்ளி

ஆரம்ப விழா

31-8-64 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்

திரு எஸ். ஜி. ரத்தினம் ஐயர் அவர்கள் தலைமை வகிப்பார்கள்

திருமதி பட்டம்மாள் வாசன் அவர்கள் தொடங்கி வைப்பார்கள்

வாரியார் மன்றத்தினர், காங்கேயநல்லூர் (வ. ஆ.)

அத்தியாயம் ஐம்பத்தைந்து

பாலைவனத்தில் சொர்க்கம்

டாக்டர் ஜகந்நாதன் தம் நர்ஸிங் ஹோமில் சுற்றுலா கிளம்புவதற்கு இன்னும் அரை மணி நேரம் இருந்ததால் உமர்கயாமின் கவிதைகளை மிகவும் ரசித்துப் படித்துக் கொண்டிருந்தார். அக்கவிதைகள் நம் தமிழ் நாட்டுச் சித்தர்களின் பாடல்களைப் போல் ஆத்மாவின் புலம்பல் இசையாக ஒலித்தன என்றாலும் வாழ்க்கை வாழ்வதற்கே என்கிற தத்துவத்தை வெகு ஆழமாக வலியுறுத்தின. அவற்றில் ஒரு கவிதையை ஜகந்நாதன் மீண்டும் மீண்டும் படித்தார்.

அந்தக் கவிதையின் சாரம்: 'மரக் கிளையின் அடியில், மலர்க் கொடியின் நிழலிலே மதுரக் கவிதை நூலொன்றும் மாசறு மது ஜாடி ஒன்றும், உண்பதற்கு ஒரு ரொட்டித் துண்டும், பாழ் வெளியில் பாட்டிசைக்கப் பாவை நீ ஒருத்தியும் என் பக்கத்தில் இருக்கும்போது பாலைவனமும் பரம சொர்க்கமன்றோ ?'

டாக்டர் ஜகந்நாதனின் புன்முறுவல் விழிகள் மற்றொரு கவிதையின் மீது படர்ந்து விரிந்தன.

* **மண்ணோடு மண்ணாகி**
மண்ணடியில் மக்கிப் போம்,
பண்இசையும், பாடகனும்
பனி மதுவும், எல்லாமும்
முடிந்து விடும்: நாமும்
முடியுமுன்னே உள்ளதெல்லாம்
கடிதிலே செலவு செய்து
களித்திடுவோம் வாராய் நீ !

"ஆஹா! வாழ்க்கை மாயக் கனவு போல் முடிந்து விடுவதற்குள் அதன் இன்பங்களை யெல்லாம் அனுபவித்து, ஆத்மாவை ஆனந்த மயமாக்கிக் கொண்டு விட வேண்டும் என்று எவ்வளவு அழகாகவும் ஆழமாகவும் இந்த மகாகவி உமர் சித்திரித்துக் காட்டுகிறான்!" என்று வியந்த ஜகந்நாதனின் சிந்தனைகள் பலவாறாகவும் விரிந்தன.

ஜகந்நாதனின் சிந்தனையில் பட்டினத்தாரின் பாடலொன்று திடீரெனப் பிரசன்னமாகிச் சிரித்தது. அந்தப் பாடல் :

நாப்பிளக்கப் பொய் உரைத்து
நவநிதியம் தேடி
நலன் ஒன்றும் அறியாத
நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற
புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர்
கைவிடவும் மாட்டீர்
கவர் பிளந்த மரத் துளையில்
கால் நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட
குரங்கதனைப் போல
அகப்பட்டீர்; கிடந்துழல
அகப்பட்டீரே !

வாழ்க்கையில் குழந்தைகள், ஆண் பெண் பிணைப்பு, காதல் முதலானவை யெல்லாம் இன்பங்கள்தான்! ஆனால் அவற்றை வெறும் கடமைகளாகவோ, தொல்லைகளாகவோ, கவலைகளாகவோ கொள்ளும்போது வாழ்க்கையே பாரமானதாக ஆகி விடுகிறது. அதன் பிறகு ஆப்பையில் அகப்பட்ட குரங்காகவே மனிதன் மாறி விடுகிறான்.

எதையும் எளிதாகப் பாவிக்கும் போதுதான் வாழ்க்கை இலகுவாகவும் ரசமாகவும் இருக்கும்! உரிமைகளையும், பாச பந்தங்களையும் அதிகமாகக் கொண்டாடும் போது பொறுப்புகள் தான் பெரிதாகி உண்மையான ரசனை அமிழ்ந்து விடும்! பந்தமற்ற இடத்தில் தான் உண்மையான ஆனந்தமோ, உண்மையான அன்போ பிறக்கும். பற்றற்ற உள்ளத்தில்தான் உண்மையான அமைதியும் நிலைத்திருக்கும்.

அழுகணிச் சித்தரின் பாடலொன்று ஜகந்நாதனின் அகமேடையில் ஞானப் புலம்பலாக வந்து நர்த்தனமாடியது.

பற்றற்ற நீரதிலே
பாசி படர்ந்தது போல்
உற்றுற்றுப் பார்த்தாலும்
உன்மயக்கம் தீரவில்லை !
உற்றுற்றுப் பார்த்தாலும்
உன்மயக்கந் தீர்ந்தக்கால்
பற்றற்ற நீராகும் என் கண்ணம்மா!
பாசியது வேறாமோ!

டாக்டர் ஜகந்நாதன் தம் சிந்தனைகளை யெல்லாம் ஒருமுகப்படுத்தித் தமக்கே உரிய சித்தாந்தத்தை வலியுறுத்திக் கொண்டார். அதை யொட்டி ஒரு தீர்மானத்தையும் நிலைநிறுத்திக் கொண்டார். 'நான் எந்தக் காலத்திலும் எந்தவிதத் தளையிலும் ஆட்பட மாட்டேன். எப்போதும் சுதந்திர ஆத்மாவாகவும், ஆனந்த புருஷனாகவுமே இருப்பேன். வாழ்க்கைக்குக் காதல் என்பது அத்தியாவசியம் என்றாலும் கல்யாணபந்தங்களைச் சுமந்து கொண்டு திரிய மாட்டேன். பந்தமற்ற அந்த நிலையில்தான் காதலின் வலிமையை உணரவும், அதன் உண்மையான

---

* மண்ணோடு மண்ணாகி என்கிற கவிதை ச. து. சு. யோகியாரின் தமிழாக்கம்.

கனவைய அனுபவிக்கவும் முடியும்.' இதுதான் அவருடைய தீர்மானம். ஆனால் இதை உடைப்பது போல் அப்போது அவருடைய அறைக்கு வெளியிலிருந்து ஒரு குரல் தாவி வந்தது.

''டாக்டர்! ஆபத்து! ஆபத்து!'' என்று கத்திக் கொண்டே வசந்திதான் ரப்பர்ப் பொம்மைபோல் துள்ளிக் குதித்த வண்ணம் ஓடி வந்தாள்.

''ஆபத்து உனக்கா? அல்லது எனக்கா?'' என்று டாக்டர் ஜகந்நாதன் சிரித்தார்.

''நம் இருவருக்கும்தான், டாக்டர்!'' என்று வசந்தியும் சிரித்தாள். ஆனால் அதற்கு முன்னால் அவள் அழுதிருக்கிறாள் என்று கோள் சொல்வது போல் அவளுடைய குறும்பு விழிகள் இரண்டும் சிவந்து போயிருந்தன. ஏதோ ஒரு பெரும் புயலடித்து அதையெல்லாம் அவள் சமாளித்துக்கொண்டு ஒரு தீர்மானத்துடன்தான் வந்திருக்கிறாள் என்றும் தெரிந்தது. ஆனால் அவள் தன்னை அதி அழகாக அலங்கரித்துக் கொண்டு வரவும் தவறவில்லை. தலையில் குண்டு மல்லிகைகள் சதிராட, அவற்றின் சரங்களைச் சடையில் தொங்க விட்டுக்கொண்டு வரவும் தவறவில்லை! தளிர்ப் பச்சை நிறப் பாவாடையும், அதே நிறத்தில் ரவிக்கையும் தாவணியும் அணிந்து அவற்றினிடையே சிவப்பு ரோஜா மொட்டுப் போலவே உடல் குலுங்க நின்றாள். ஆனால் அந்தத் தோற்றத்தின் வசீகரத்தைவிட, அவளுடைய உடலுக்குள் மலர்ந்து அவளுடைய கரு விழிகள் வழியாக மினுமினுக்கும் அவளுடைய ஆத்மாவின் பொலிவுதான் காந்தம் போல் ஜகந்நாதனை அதிகமாகக் கவர்ந்திழுத்தது.

''நமக்கு என்ன ஆபத்து?'' என்றார் டாக்டர் ஜகந்நாதன் புன்முறுவலுடன்.

வசந்தி பரபரப்புடன் சொல்ல ஆரம்பித்தாள். ''சார்! சார்! என் சிநேகிதி லலிதா இருக்கிறாளே.....''

''ஆமாம். அவள் மகாபலிபுரத்தில் நம் பக்கத்து அறையில் அல்லவா இருந்தாள்?''

''அவள் இப்போது திடீரென்று வந்து விட்டாள் சார்!''

''எங்கே வந்து விட்டாள்?''

''எங்கள் வீட்டுக்கே வந்து விட்டாள், சார்!'' என்றாள் வசந்தி மிகவும் பரிதாபமாக.

''உன் சரியான விலாசத்தைத்தான் நீ கொடுக்க வில்லையே?''

''இருந்தாலும் நான் வீட்டுக்குள் நுழைவதை அவள் தற்செயலாகத் தெருவில் போகும் போது பார்த்திருக்கிறாள்! உடனே திமுதிமுவென வீட்டுக்குள்ளேயே வந்து விட்டாள்!''

''உடனே அவள் உன் அப்பா அம்மாவிடம் நேரே போய் 'உங்கள் இளைய மாப்பிள்ளை எங்கே?' என்று விசாரித்தாளா?''

''ஆமாம், சார்! அதேதான்! அதேதான்!'' என்று உற்சாகமாகக் கத்திய வசந்தி, ''நாம் மகாபலிபுரத்துக்குப் போய் ஹோட்டல் அறையில் தங்கிக் கணவன் மனைவியாக நாடகமாடியதெல்லாம் அம்பலமாகி விட்டது சார்!'' என்று படபடத்தாள்.

''ஓ!'' என்றார் ஜகந்நாதன் வெகு சாதாரணமாக.

''என்ன சார், ஓ என்கிறீர்கள்?'' என்று கோபமாகச் சிணுங்கிய வசந்தி, ''என் அப்பாவும் அம்மாவும் சேர்ந்து என்னோடு பெரிதாகச் சண்டை போட்டார்கள்!'' என்று குமுறி விம்மினாள்.

''அதை நீ எப்படியாவது சமாளித்திருப்பாயே?''

''ஆமாம், சார்! நாம் இருவரும் ஒரு கதை எழுதுவதற்காகத்தான் மகாபலிபுரத்துக்குப் போனதாகச் சொன்னேன்..... கடைசியில்..... கடைசியில்..... நான் உங்களையே கலியாணம் செய்து கொள்ளப் போவதாக ஒரே முடிவாகச் சொல்லி விட்டேன்!'' என்றாள் வசந்தி. (தொடரும்)



Guide to health

இந்த ஆங்கில நூலின் ஆசிரியர் டாக்டர் டி.எஸ். ராஜு அவர்கள் பாரத வகையில் அனுபவம் பெற்றவர்; மிகுந்த நாட்டுப் பற்று உள்ளவர். பாரத நாட்டினருக்குக் கண்மணியாக விளங்கிய சுபாஸ் சந்திரபோஸுடைய இந்திய தேசிய ராணுவத்துக்கு வைத்தியத் துறையில் தலைமைப் பதவி வகித்தவர். பிறகு சொந்தத்தில் பொதுமக்களுக்கு வைத்தியத் தொண்டு செய்து அனுபவம் பெற்றார். இப்பொழுது மத்திய அரசாங்கத்தில் சுகாதார இலாகாவில் உதவி மந்திரிப் பதவி வகித்து வருகிறார். ஆசிரியர் இயற்றியுள்ள இந்த நூலில் அவ்வனுபவங்கள் பிரதிபலிக்கின்றன.

நாம் இயற்றிய நூலில் ஆசிரியருடைய தன்மயம் விளங்குவது இயல்பே. இந்த நூலில் அது அதிக அளவு தோன்றக் காரணமிருக்கிறது. இது தேசாபிமானத்தைப் பெருக்கும் இயல்புடையதாக இருக்கிறது. முன்னேறிய பிற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது பாரத நாட்டினரின் சுகாதாரநிலை வெகு மோசமாக இருப்பதைப் பார்த்து அவருடைய உள்ளம் இரங்குகிறது. சீர்திருத்தங்களைத் துரிதப்படுத்த ஆத்திரப்படுகிறார். அதே சமயத்தில் இதுவரை நடைபெற்று வந்துள்ள மகத்தான சாதனைகளைப் பற்றியும் உணர்கிறார். உலக மக்களுடைய பொது சுகாதார அபிவிருத்திக்கு உலக சுகாதார ஸ்தாபனம் செய்து வரும் தொண்டைப் பாராட்டுகிறார்.

இந்த ஸ்தாபனத்தின் உதவிக்கு நாம் எவ்வளவோ நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம்.

நமது மத்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கங்களும் கூட நாட்டின் பொதுச் சுகாதார அபிவிருத்திக்கு ஆவன செய்து வருகின்றன. இதையும் நாம் உணரவேண்டும். இதை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

இந்த நூலின் மூலமாக மக்களுக்கு ஆரோக்கிய வாழ்க்கைக்கு இன்றியமையாத உபாயங்களைக் கூற வேண்டுமென்ற அவாவுடன் நோயணுகாமலிருக்கத் தடுப்பு முறைகளையும் நோய் தோன்றினால் குணப்படுத்தும் முறைகளையும் வகுத்துக் கூறுகிறார் ஆசிரியர். இவ்விஷயங்களை அறிந்துகொள்ள உடலியலைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? இதுவும் ஆசிரியருடைய நூலில் இடம் பெற்றிருக்கிறது.

ஆனால் சில இடங்களில் சொற்களும், விளக்கங்களும் பொதுமக்களுக்கு எட்டும்படி இல்லை என்பது ஒரு குறையாகும்.

இந்த நூலின் தலைப்பு 'ஆரோக்கிய வழி காட்டி' என்றிருப்பதைக் காட்டிலும் மேலும் பொருத்தமானதாக அமைந்திருக்கலாம்.

நூலைப் பிரசுரிப்பதில் கருத்து மிக்க முயற்சி செலுத்தப் பட்டிருக்கிறது. சிறந்த முறையிலே ஆங்கில வாசகர்களுக்கு விஷயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நூலைப் படித்து அவர்கள் நற்பயனடைவார்களென்று நம்பலாம்.

நூலின் ஆசிரியர்: டி. எஸ். ராஜு, எம். பி: பி.எஸ்., எம்.ஆர்.ஸி.பி. (லண்டன்) மத்திய சுகாதார உதவி மந்திரி; பிரசுரம்: Current Technical Literature Co. (Private) Ltd., Bombay-1. விலை: ரூ. 6—50.

—கேப்டன் என். சேஷாத்திரிநாதன்.

பார்த்துப் படியுங்கள்!

பள்ளிக்கூடத்துக்கு அனுப்புமுன் நம் குழந்தைகளுக்கு வீட்டில் அரிச்சுவடி போதிக்கும் அவஸ்தை இனி பெற்றோர்களுக்கு இல்லை. படிக்க விருப்பமில்லாமல் அடம் பிடிக்கும் குழந்தைகளும் விரும்பிப் படம் பார்த்துப் படிக்க ஓடி வரும் வகையில், சிறுவர் சித்திரப் பாட புத்தகமொன்றை மிக நூதனமான முறையில் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள், ஹிக்கின்பாதம்ஸ் கம்பெனியார். கிழியாத கெட்டி அட்டையில் பல வண்ணப் படங்களோடு ஒவ்வொரு பக்கத்தையும் அமுக்கினால் வெவ்வேறு விதமான ஒலி எழுப்பும் வண்ணம் இதை உருவாக்கியுள்ளார்கள். கண்களைப் பறிக்கும் வண்ணப் படங்கள்; கவனத்தைக் கவரும் வாத்திய ஒலி; படிக்கும் குழந்தைகளின் ஆவலைத் தூண்ட இதைவிட வேறு என்ன வேண்டும்? நம் நாட்டில் தயாரித்தால் இதற்கு அதிக விலை வைக்க வேண்டி இருக்குமென்று இந்தச் சித்திர பாட புத்தகத்தை ஜப்பானில் தயாரித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். விலை மிகவும் மலிவு: ரூ. 1—50தான். ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகளுக்கு இதை வாங்கிக் கொடுத்தால் போதும். 'அப்பா! பாடம் சொல்லிக் கொடு' என்று அவர்களே ஓடி வருவார்கள்.

சிறுவர் சித்திர பாட புத்தகம். தயாரித்து வெளியிட்டிருப்பவர்: ஹிக்கின் பாதம்ஸ் கம்பெனியார், சென்னை—2.



சொர்: உங்களுக்கு எல்லாமே அலட்சியம்தான். உலகத்திலே உள்ள 'டயாபெடிஸ்' நோயாளிகளிலே தொண்ணூற்றைந்து சதவீதம் பேருக்கு உடலுழைப்பு இல்லாததால்தான் அந்த வியாதி வந்திருக்கிறதாம். பேப்பரிலே ஒரு நிபுணரின் அபிப்பிராயத்தைப் போட்டிருக்காளே, பார்த்தேளா? அது எங்கே பார்த்திருக்கப் போறேள்? வெளிச்சத்தை ஒதுக்கி இருட்டை வரவழைக்கத்தானே உங்களுக்குத் தினசரி செய்தித்தாள் பயன்படறது!

பஞ்சா: நீ என்ன சொல்றே? எனக்கு டயாபெடிஸ் வியாதி 'வரணும்னு' சபிக்கிறியா?

சொர்: நான் ஏன் உங்களைச் சபிக்கப் போகிறேன்? உங்க தொந்தியைப் பார்த்துவிட்டு இந்தத் தெருவிலே எல்லாரும் சிரிச்சிண்டிருக்காளேன்னுதான் சொன்னேன்.

பஞ்சா: சிரிக்கட்டுமே, நல்ல டானிக்!

சொர்: அவாளுக்கு டானிக். உங்களுக்கு?

பஞ்சா: நான் இப்போ என்ன செய்யணும் என்கிறே, தெளிவாச் சொல்லிடு.



தொந்திகரைய,

காட்சி — 1

[ஞாயிற்றுக்கிழமை மத்தியானம். வராந்தாவில் சாய்வு நாற்காலியில் 'ஹாய்யா'கப் படுத்துக் கொண்டு அன்றைய தினசரிப் பத்திரிகையால் முகத்தை மூடியபடி விழிப்புக்கும், நித்திரைக்கும் இடையேயுள்ள ஒரு சுகமான நிலையை அநுபவித்துக் கொண்டிருக்கிறான் பஞ்சாட்சரம். அப்போது அவன் மனைவி சொர்ணம் அங்கு வருகிறாள்.]

சொர்ணம் (முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டு): நன்னாத்தான் இருக்கு. இப்படி வயிற்றை நிரப்பிக் கொண்டு படுத்துப் படுத்துப் பொழுதைக் கழித்தால் ஏன் நாலு பேர் சிரிக்க மாட்டா?

பஞ்சாட்சரம் (இன்ப உலகிலிருந்து உலுக்கி எழுப்பப்பட்டவனாகத் திடுக்கிட்டு): என்ன? என்ன சொல்றே?

சொர்: சனிசேர் துணியிலெல்லாம் என்னைப் பிசுக்கு ஏறுவதுதான் மிச்சம்.


பஞ்சா: அதனுலென்ன! வண்ணானுக்குப் போட்டால் போச்சு.

சொர்: 'கிச்சன் கார்டன்!' வீட்டின் கொல்லைப் பக்கத்தைக் கொத்தி நாலு விதைகளை ஊன்றினால் உங்களுக்கு உடலுழைப்பு. தேகப் பயிற்சியுமாச்சு; சமையலுக்கு நல்ல காய்கறியும் கிடைச்ச மாதிரி இருக்கும். பணமும் மிச்சமாகும். பையைத் தூக்கிண்டு மார்க்கெட்டுக்குப் போய் ஒண்ணுக்கு நாலு காசு கொடுத்து வாங்க வேண்டாம்!

பஞ்சா: ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் நான் நிம்மதியாக இருக்கிறது உன் கண்ணை உறுத்துகிறதாக்கும்.

சொர் (கண்களைப் புடவைத் தலைப்பால் கசக்கி விட்டபடியே): நான் அப்படியா சொன்னேன்? உங்களண்டை வாயைத் திறந்தாலே ஆபத்து. முதலில் நான் உங்களைச் சபிக்கிறேன் என்றீர்கள். இப்போது எனக்குக் கண்ணை உறுத்துகிறது என்கிறீர்கள். உங்களுக்கு நல்லதைத்தானே நான் நினைச்சேன். எப்போ பார்த்தாலும் என்னை ஏன் கரிச்சுக் கொட்டறேள்.....

பஞ்சா: அம்மணி! உன் கண்ணீருக்கு நான் அடிமை. இதோ இரண்டு கரங்களையும் உயர்த்தி உன்னிடம் சரணாகதி அடைந்திருக்



ரும் என்னைப் பார்! கிளம்பி விட்டேன், கொல்லைப் பக்கத்துக்கு!

காட்சி — 2

[பஞ்சாட்சரம் வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு கடப்பாறை, மண் வெட்டி சகிதம் 'வயலி'ல் இறங்கி விட்டான். அவனது பெண் பாருவும் பிள்ளை பாலுவும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். பக்கத்து வீட்டுக்காரன் சேஷாசலம் சில்க் சட்டை போட்டுக் கொண்டு வேலி ஓரமாய் வந்து நிற்கிறான்.]

சேஷாசலம்: என்ன பஞ்சா! என்ன இதெல்லாம் கூத்து! கையையும் காலையும் சேறாக அடிச்சிண்டு!

பாரு: மாமா! அப்பா காய்கறித் தோட்டம் போடப் போகிறார்.

பாலு: ஆமாம்! பூசணிக்காய், பறங்கிக் காய், முட்டைகோஸ்......., எல்லாம் இத்தனை பெரிசு!

சேஷா: நாசமாய்ப் போச்சு! 'குரோ மோர் புட் காம்பெய்னா?' ஏண்டா, பஞ்சா! நீ ஒருத்தன்தான் இந்த நாட்டிலேயிருந்து பஞ்சத்தை விரட்டி அடிக்கப் போகிறாயா?

பஞ்சா (வியர்வையை வழித்து விட்டுக் கொண்டு): நீ ஏண்டா போக மாட்டாய்? சில்க் சட்டை மாட்டிண்டு மாட்னி ஷோவுக்குக் கிளம்பி விட்டாயோ இல்லியோ? அகத்துக்காரி வேறே பிறந்தகம் போய் விட்டாள். தனிக்காட்டு ராஜா நீ! (மண்வெட்டியினால் ஆத்திரத்தோடு பூமியைப்பிளக்கிறான்!)

சேஷா: மெள்ளடா! கை சுளுக்கிக்கப் போகிறது!

பாரு: மாமா, சினிமாவா?

பாலு: மாமா! நானும் மாமா?

பாரு: நானும்.....?

சேஷா: நான் மாட்னி ஷோ போவதைக் கான்ஸல் பண்ணி விட்டேன்.

பஞ்சா: ஏண்டா பழி! குழந்தைகளுக்கு நான் காசு தரேண்டா; அழைச்சிண்டு போ!

சேஷா: சேச்சே! பணத்துக்காகச் சொல்லலே.....கொஞ்சம் இரு. வந்து விட்டேன். (உள்ளே போய் ஒரு சாய்வு நாற்காலியைக் கொண்டு வந்து வேப்பமரத்து நிழலில் போட்டுக் கொண்டு அமருகிறான்.) இந்த வேப்ப மரத்து நிழலில் காற்றோட்ட ஆனந்தமாய்த் தூங்குவதை விட்டுவிட்டு மாட்னி ஷோவுக்குப் போய் யாராவது புழுங்குவாரோ?

[சொர்ணத்தின் குரல் வீட்டினுள்ளேயிருந்து ஒலிக்கிறது.]

சொர்: ஏன்னா! இப்படி வாருங்களேன்!

[பஞ்சு மண் வெட்டியைத் தரையில் போட்டு விட்டுக் கொல்லைப்புறக் கதவருகே செல்கிறான்.]

சொர் (மெல்லிய குரலில்): என்ன சொல்கிறார் அந்த மனுஷர்?

பஞ்சா (வெறுப்புடன்): இன்னும் என்ன சொல்லணும்? கேலி செய்கிறான். என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள சினிமா புரோகிராமை கான்ஸல் பண்ணிட்டு வேப்ப மரத்து நிழலிலே 'டேரா' போட்டுண்டு வேடிக்கை பார்க்கிறான்.

சொர்: இடி விழ! நீங்க உள்ளே வாங்கோ சொல்றேன். ஞாயிற்றுக்கிழமையும் அதுவுமா வீட்டிலேயே அடைந்து கிடப்பானேன்? குஷாலா எங்கேயாவது வெளியே போயிட்டு வரலாம்; குழந்தைகளையும் அழைச்சிண்டு.

பஞ்சா: ஆல் ரைட்! இதோ இரண்டு நிமிஷத்திலே குளிச்சிட்டு வந்துடறேன்.

[முண்டாசு கட்டியிருந்த துண்டை அவிழ்த்து உதறித் தோளில் போட்டுக் கொள்கிறான். சொர்ணம் உள்ளே செல்கிறாள்.]

பஞ்சா (தனக்குள்): சேஷாசலம்! நான் சொல்லிக் கொடுத்தபடியே மிக நன்றாக நாடகமாடினாய்! ரொம்ப தாங்க்ஸ்! நிச்சயம் ஒரு கப் காப்பி உனக்கு வாங்கிக் கொடுத்து விட வேண்டியதுதான்!


தோட்டக்கலை



குட்டிகிருஷ்ணன்

காட்சி — 3

[காரியாலயத்தில் பஞ்சாட்சரம், சேஷாசலம், மணி, மாருதி முதலானோர். டிபன் வேளை.]



சேஷா: ஏண்டா பஞ்சா! இன்னிக்கு என்ன? கத்திரிக்காய் பஜ்ஜியா? தோட்டத் துக் கத்திரியா?

பஞ்சா: தோட்டமாவது, கத்திரியாவது?

மாருதி: ஏன் அப்படிச் சொல்லிப்பிட்டே இந்த 'ஹாபி' பிடிக்கலியா உனக்கு?

பஞ்சா: சேச்சே! அதெல்லாமில்லே. முதலில் அருவருப்பாகத்தான் இருந்தது. போகப் போக எனக்கே அதிலே ரொம்ப 'இன்டரஸ்ட்' ஏற்பட்டுப் போச்சு. இப்போ தெல்லாம் தினம் இரண்டு மணி நேரமா வது தோட்ட வேலே செய்யாமல் என்னுல் இருக்க முடியாது!

சேஷா: அப்படியானல்....?

பஞ்சா: ஏன் அலுத்துக்கறேன்னு கேட் கிறயா? பின்னே என்ன? நான் உழைச்சுப் பாடுபட வேண்டியது, அதன் பலனே யெல் லாம் பூச்சிகள் அனுபவிக்க வேண்டியது என் ஞல் அலுப்பு ஏற்படாதா? காய்க்க ஆரம்பிக் கிற சமயத்திலே கணக்கா எங்கேயிருந்தோ வந்துடறது, சனியன்கள்!

மாருதி: அடப் பாவமே!

மணி: த்சொ! த்சொ!

சேஷா: அப்புறம்?

பஞ்சா: அப்புறமென்ன? ஒரே ஒரு வெண்டைக்காயோ, கத்திரிக்காயோ உருப் படியாகக் கிடைக்கணுமே? கிடையாது!

மாருதி: சாம்பலைத் தூவிப் பார்க்கிறது தானே?

மணி: டிகாக்ஷன் இறங்கிய பிறகு காப்பிப் பொடி வண்டலைச் செடிகள் மேலே தூவிடச் சொல்லும்! பூச்சிகேச்சி யெல்லாம் ஓடிப் போய் விடும்.

பஞ்சா: அதெல்லாம் இல்லே. நேரே ஆனந்தா நர்சரிக்குப் போய் ஒண்ணரை ரூபாய் கொடுத்துப் பூச்சிமருந்து வாங்கிண்டு வந்து செடிகள் மேலே யெல்லாம் தூவி யிருக்கிறேனுக்கும்!

மாருதி: பஞ்சா! ஜாக்கிரதை! பூச்சி மருந்து அளவுக்கு மீறினுல் காய்கறிக்குள்ளே யெல்லாம் இறங்கி விடுகிறதாம். அப்புறம் அதை நன்ருகக் கழுவிச் சமையல் செய்து சாப்பிட்டால்கூட வயிற்றைப் புரட்டுமாம்!

பஞ்சா: எனக்கு எல்லாம் 'லிமிட்' தெரி யும் அப்பனே! சேஷா! நாளைக்குப் பாரு! உன் அகத்துக்காரி ஊரிலேயிருந்து திரும்பிய தும் உங்க வீட்டுக்குக் கூட நான்தான் காய் கறி சப்ளை பண்ணப் போறேன். அத்தனை விளையப் போகிறது. இரண்டு ரூபாய் கொடுத்து ரசாயன உரம் கூட வாங்கி ஒவ் வொரு செடிக்கும் வைச்சிருக்கேனுக்கும்!

சேஷா: பேஷ்! தோட்டக் கலையில் உனக்கு உற்சாகம் பிய்த்துக் கொண்டு போறுத் போலிருக்கிறதே!

[ஆபீஸ் பையன் வருகிருன்.]

பையன்: பஞ்சாட்சரம் சார்! அர்ஜண்ட் டெலிபோன்! வீட்டிலேயிருந்து அம்மா பேசினுங்க! செடிகளுக்கு நீங்கள் வாங்கி வைத்திருந்த பூச்சி மருந்தைக் கடைக்குட்டி காமு சர்க்கரைன்னு நினைச்சு வாயிலே அள்ளி........

பஞ்சா: ஐயய்யோ! நான் என்ன பண்ணு வேன்?

பையன்: நீங்க என்ன பண்ணனும் என் றதையும் அம்மாவே சொல்லியிருக்காங்க. டாக்டர் சிவபாதசுந்தரத்துக்கிட்டே அம்மா குழந்தையுடன் டாக்ஸியிலே போய்க் கொண் டிருக்காங்களாம். உங்களை அங்கே சீக்கிரமா வரச் சொன்னுங்க. டாக்டருக்குக் கொடுக்கப் பணம் கொண்டு வரச் சொன்னுங்க.

பஞ்சா (முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு): காஷியர் ஸார்.....!

மாருதி: மானேஜர் கையெழுத்தில்லாமே ஆபீஸ் பணத்திலே எப்படிக் கைவைக்கிறது? என் சொந்தப் பணம் பத்து ரூபாய் கடனுகத் தருகிறேன், இந்தாரும்.

[சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டை எடுத்துத் தருகிருர்.]

காட்சி — 4

[பஞ்சாட்சரத்தின் வீட்டின் கொல்லைப் புறம். இரண்டு ஆடுகளும் மூன்று மாடுகளும் தோட்டத்தில் நிம்மதி யாக மேய்ந்து வயிற்றை நிரப்பிக் கொண்டிருக்கின்றன. வேலிக்கு மறு புறத்திலிருந்து சேஷாசலம் குதூகலத் துடன் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிருன்.]

சேஷா: உம்! ஆகட்டும்! பேஷ், அப்படித் தான்! நிதானமாக நடக்கட்டும்! மனுஷன் ஞாயிற்றுக்கிழமையும் அதுவுமா வாசல் வராந்தாவிலே குறட்டை விடுகிருன்!

[மாடு அவனை நிமிர்ந்து பார்க்கிறது.]

சேஷா: உஷ்! என்னைப் பார்த்து முழித் துக் கொண்டு நின்று நேரத்தை வீணுக் காதே! இந்த மாதிரி ஆகாரம் மறுபடியும் உனக்குக் கிடைப்பதே அபூர்வம்!

[ஆடு மாடுகள் அவனுல் ஆபத்தில்லே என்பதைப் புரிந்து கொண்டு தங்கள் காரியத்தில் கண்ணுக இருக்கின்றன. நேரம் செல்கிறது......]

சேஷா (தனக்குள்): அடிசக்கை! எல்லாம் குளோஸ்! பிரமாதமாகப் பெருமையடித்துக் கொண்டானே! இப்போ வந்து பார்க்கட் டுமே! (உரக்க) பஞ்சா! பஞ்சா! என்னடாது கொள்ளைபோறது தெரியாத தூக்கம்? பஞ்சா!

[பஞ்சாட்சரம் அலறிப் புடைத்துக் கொண்டு கொல்லைப் பக்கம் ஓடி வருகிருன். ஆடு மாடுகளைப் பார்த்த தும் 'ஷோ ஷோ' என்று அடித்துக் கொண்டு அவற்றை விரட்டுகிருன்.]


பஞ்சா (சேறும் சகதியுமாக உருத் தெரி யாமல் அழிந்து கிடக்கும் தோட்டத்தைப் பார்த்தபடி கம்மிய குரலில்): போச்சு! எல்லாம் போச்சு!

சேஷா: அதோ ஒரு வெண்டைக்காய் இருக்கு பாருடா! அதையாவது உடனே பறித்து வைத்துக் கொள். ரொம்ப விலே உயர்ந்த வெண்டைக்காய் அது! முப்பத் தைந்து ரூபாய்க்குக் குறைவில்லே!

பஞ்சா: என்ன உளறுகிருய்?

சேஷா: உளறலா? நீயே கணக்குப் போட்டுப் பாரேன்! இந்த ஒரு வெண்டைக் காக நீ செய்திருக்கும் செலவை! டாக்டர் பீஸ் பத்து ரூபாய்! குழந்தைக்கு மருந்து

எக்கோணத்திலும் சரி



இதோ உங்களுக்குக்

கூடுதலான பாதுகாப்பு

அளிக்கக்கூடிய டயர்

இந்த டிரெட் அமைப்பு, மோட்டாரோட்டிகளுக்கு மிகவும் அதிகமான பாதுகாப்பளிப்பதற்கெனப் பல வருடங்களாக சோதனைத்தளங்களிலும் ஓட்டப் பந்தயப் பாதைகளிலும் ஆராய்ந்து சோதிக்கப் பட்டதாகும். ஆயிரக்கணக்கான கோணங்கள் ரஸ்தாவைக் கவ்விப் பிடிப்பதால், சுலபமாக வண்டியை ஓட்டுவதற்கு உதவுவதுடன் நீங்கள் ஓட்டத் தொடங்கும்போதும் நிறுத்தும்போதும் இவை சிறந்த இழுப்புத் தன்மையை அளிக்கின்றன. பயர்ஸ்டோனை வாங்கும்போது நீங்கள் எதைப் பெறுகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்

பயர்ஸ்டோன் தரத்துக்கும் உழைப்புக்கும் உங்கள் சின்னம்

வகையறு பதினைந்து ரூபாய்; டாக்சிச் செலவு ஐந்து ரூபாய்; விதைகள் மூன்று ரூபாய்; சாதாரண எரு மூன்று ரூபாய்; ரசாயன எரு இரண்டு ரூபாய்; பூச்சி மருந்து.... இத்யாதி இத்யாதி.....

பஞ்சா: (முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு) ஏதோ அகத்துக்காரியின் பேச்சைக் கேட்டுக் கெட்டுப் போனேன். இதை இவ்வளவு தூரம் இடித்துக் காட்டணுமா?

[உள்ளே இருந்து பானுவும் பாருவும் ஓடி வருகிறார்கள்.]

பானு: அப்பா! அம்மா சேர்ந்திருக்கிற மாதர் சங்கத்தின் தலைவி வந்திருக்காங்க!

பாரு: ஆமாம் அப்பா! அம்மாவுடைய 'கிச்சன் கார்டனு'க்கு 'பஸ்ட் பிரைஸ்' கிடைச்சிருக்காம்; நூறு ரூபாயாம்!

பஞ்சா (அதிசயத்துடன்): என்ன? என்ன? என்ன?

சேஷா (பொறுமையுடன்): என்ன?என்ன?

பாரு: ஆமாம் அப்பா! நேத்திக்கு சாயங்காலம் நீ ஆபீஸிலேயிருந்து வருவதற்கு முன்னாடியே இங்கே மாதர் சங்கத்திலேயிருந்து நீதிபதிகளெல்லாம் வந்து தோட்டத்தைப் பார்வையிட்டு விட்டு மார்க் போட்டுண்டு போனா!

பஞ்சா: எனக்கு என்ன ஆச்சரியம், நம்ம தோட்டத்துக்கு முதல் பரிசு எப்படிக் கிடைச்சதுன்னுதான்.

பாரு: ஸ்கூலிலே நூற்றுக்கு நாற்பது மார்க் வாங்கி ஒருத்தன் முதலாவதாக வந்தால் பாக்கிப் பேரெல்லாம் அதைவிடக் கம்மியாக மார்க் வாங்கியிருக்கிறார்கள் என்று தானே அர்த்தம்?

பஞ்சா: ஓகோ! மாதர் சங்கத்தின் மற்ற அங்கத்தினர்களின் வீட்டுத் தோட்டம் இதைவிடக் கேவலம் என்று சொல்லு! 'தோட்டம் போடுங்கோ, தோட்டம் போடுங்கோ'ன்னு உங்க அம்மா இதுக்குத்தான் என் பிராணனை வாங்கினளா?

பாரு: ஆமாம், அப்பா! ஆனால் நீங்க மண்வெட்டி பிடிச்சேன்னு சொல்லி வைக்காதீர்கள்! எல்லாம் அம்மாவே செய்ததாக இருந்தால்தான் மாதர் சங்கத்துக்குப் பெருமையாம்!

பஞ்சா: ரொம்ப சரி! அந்த மாதர் சங்கத்தின் தலைவி பரிசு பெற்ற தோட்டத்தைப் பார்க்க இங்கே வந்து விடப் போகிறாள்! காப்பி கொடுத்து அப்படியே வாசலோடு அனுப்பி விடச் சொல்லு, உன் அம்மாவை!

பாரு. ராமு (தோட்டத்தை அப்போது தான் கவனித்து): ஐயய்யோ! தோட்டமெல்லாம் என்ன ஆச்சு?

பஞ்சா: என்னவானு ஆயிட்டுப் போறது போ! பரிசுப் பணம் நூறு ரூபாயை வைச்சுண்டு இரண்டு மாசத்துக்கு மாம்பலம் மார்க்கெட்டிலேயிருந்து அருமையான காய்கறிகள் வாங்கிண்டு வரலாமே! சரி, நீங்கள் போங்க உள்ளே. சொன்னது நினைவிருக்கட்டும்!

[குழந்தைகள் செல்கிறார்கள்]

பஞ்சா: என்ன சேஷா! மார்க்கெட்டிலேயிருந்து உனக்கு ஏதாவது வாங்கிக் கொண்டு வரட்டுமா?

சேஷா: ஹிஹிஹி! ஒரு கிலோ பங்களூர் தக்காளி இருந்தால் போதும்!

பஞ்சா: அதுக்கென்ன தாராளமா வாங்கிண்டு வரேன்.

சேஷா: அது சரி, தோட்டக் கலைக்கு நீ முழுக்குப் போட்டு விட்டால் உன் தொந்தி இனி மேல் கரைவது எப்படி? உன் மனைவி அதைச் சொல்லிக் காட்ட மாட்டாளா?

பஞ்சா: அது ஒரு பிரச்னைதான்.

சேஷா: ஏன் என்று என்னைக் கேட்காதே! ஆனால் உனக்கு ஒரு விதத்தில் நன்மை செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனால் ஒரு யோசனை சொல்கிறேன். என் மனைவி நாளைக் காலையில் வருகிறாள். அவளிடம் உன் மனைவி சொர்ணம் பிரமாதமாகச் சமைக்கிறாள் என்றும் அந்த ருசி காரணமாகத்தான் நீ நிறையச் சாப்பிட்டுத் தொந்தி போட்டு விட்டது என்றும் நீ சொன்னதாகச் சொல்கிறேன். அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் அந்தச் செய்தி சொர்ணத்துக்குப் போய்விடும்.

பஞ்சா: அப்புறம் அவள் சந்தோஷத்தில் என் தொந்தியைப் பற்றிக் கவலைப்படாமல் நன்றாகச் சமைத்துப் போடுவாள்! ஆஹா! அருமையான யோசனை! தாங்க்ஸ்! மாதர் சங்கத் தலைவியை அனுப்பி விட்டுப் பிறகு வந்து சந்திக்கிறேன்! [போகிறான்]

WET PAINT?
IT DRIES IN 10 MINUTES

IT'S

Spartan

ஸ்பார்ட்டன்

சூபர் **பிளாஸ்டிக்** பெயிண்ட்

வீட்டு அலங்கார வேலைக்கு

உங்கள் இல்லத்தின் அழகிற்கு பொருத்தமான அநேக அழகு வண்ணங்களில் கிடைக்கும். மழ மழப்பு, பளபளப்பு, தூர்க்கந்த மின்மை இத்தியாதி குணங்களுடன் பிரஷ்ஷினால் பூசிய கவடு தெரியாமல் சீராகவும் மிகச் சுலபமாகவும் பூசலாம். இது மட்டுமல்ல. கழுவினாலும் கலையாது. இது தான் ஸ்பார்ட்டன் சூபர் பிளாஸ்டிக் பெயிண்ட்.



ஸ்பார்ட்டன் — உயர்தரத்தின் சின்னம்

அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் & கெமிகல்ஸ் லிமிடெட்
செம்பியம், சென்னை - 11

இந்தியன் பெயிண்ட்ஸ் அசோசியேஷனில் அங்கத்தினர்

இருமலை அகற்றுக

இருமல்

அகல விரைவான, கெடுதலற்ற, நிச்சயமான நிவாரண

க்ளைகோடின்

டெர்ப் வசாகா

இந்த ஆறு காரணங்களால், க்ளைகோடின்
இருமலுக்கு சிறந்த நிவாரணி:



1. எந்தவிதமான இருமலுக்கும், எப்பொழுதும் சிறந்தது
2. மருத்துவர்களால் அனுமதிக்கப்பட்ட சரியான பார்முலா
3. சிறுவரும் பெரியோரும் விரும்பும் இனிய சுவை
4. சிபார்சு செய்யப்பட்ட அளவில் உட்கொண்டால் கெடுதல் செய்யாதது
5. 4-வித சிக்கனமான சைசுகளில் கிடைக்கிறது
6. அலெம்பிக்கின் நம்பகமான தரம்

Alembic

30 வருடங்களுக்கு மேலாக இருமலுக்கு வீட்டிலேயே குணமளிக்கும் நிவாரண

GTV 1282 TAM EVEREST

இதோ மோகன்!



ஆர். சூடாமணி

"என்ன விமலா, சௌக்கியமா?"

"அட! சுமதியா? எப்போது வந்தாய் ஊரிலிருந்து?"

"நேற்று காலை."

"உன் அம்மா சொல்லவேயில்லையே!"

"அம்மாவுக்கே தெரியாது. அப்பா அம்மாவைப் பார்க்க ஒரு திடீர் விஜயம் செய்திருக்கிறேன்....!"

"உன் வீட்டுக்காரரும் வந்திருக்கிறாரா?"

"இல்லை. அவருக்கு இரண்டு வாரம் வெளியூரில் 'டூர்' இருந்தது. ஆகவே நான் இங்கே வந்துவிட்டுப் போகலாமென்று கிளம்பி வந்தேன், குழந்தைகளை அழைத்துக் கொண்டு."

"இன்று நான் இங்கே வந்ததைப் பற்றி ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது சுமதி. சிநேகிதியைச் சந்திப்பதென்றால் கேட்க வேண்டுமா?... அட, இது சேகர்தானே? ஏ, சேகர், என்னை நினைவிருக்கிறதா, உனக்கு?"

"......."

"இல்லை பாரேன்! ஏ சின்னப் பயலே, என்னடா, இது?"

"நான் ஒன்றும் சின்னப் பயல் இல்லை. எனக்கு அஞ்சு வயசு."

"ஓஹோஹோ! பலே ஆளாயிருக்கிறானே சுமதி உன் பையன்! குழந்தையாயிருந்த போதே அவன் கெட்டிக்காரன். சாயல் அப்படியே உன்னை உரித்து வைத்திருக்கிறான்."

"அது போகட்டும், விமலா! இதோ உள்ளே வருகிறானே, இந்தப் பயலைப் பற்றி உனக்கு என்ன தோன்றுகிறது, சொல்."

"உன் இரண்டாவது குழந்தையா? அடடா! எத்தனை அழகாயிருக்கிறான்? என்ன வயசாகிறது இவனுக்கு?"

"இரண்டரை."

"நல்ல துறுதுறுப்பாயிருப்பான் போல் இருக்கிறதே!"

"ஆமாம். நின்ற இடத்தில் நிற்பதில்லை."

"டேய், குட்டித் தங்கம், உன் பேரு என்னடா? நான்தான் உன் அம்மாவின் சிநேகிதி. கிட்டே வா பார்க்கலாம்!"

"அந்த மாமிகிட்டே போ மோகன்! கல்யாணம் செய்து கொண்டு உனக்கு ஓர் அழகான பெண்டாட்டியைப் பெற்றுக் கொடுப்பாள்."

"உன் சின்னப் பிள்ளை ரொம்ப வெட்கப்படுகிறான். சுமதி. உனக்கு வெட்க சுபாவம் கிடையாது; உன்னைக் கொள்ளவில்லைபோல் இருக்கிறது அவன். ஏன், அப்படித் திடுக்கிடுகிறாய்?"

"இல்லையே! வந்து... விமலா ... ஒருவேளை அவன் உருவத்தில் என்னைக் கொண்டிருக்கிறானோ?"

"தெரியவில்லையே. எதோ பார்க்கலாம்? உன் முகம் நீளவாகு. ஆனால் இவனுக்கு உருண்டை முகம்."

"ஆனால் அவன் அப்பாவின் முகம்கூட உருண்டைதானே?"

"உன் வீட்டுக்காரருடையதா? அவரை நான் ஒரு தடவைதான் பார்த்திருக்கிறேன், உன் கல்யாணத்தின்போது. ஆனால் என் ஞாபகம் அவர் முகமும் கொஞ்சம் நீளம் என்றுதான்."

"இல்லை விமலா, இல்லை. நன்றாய் யோசித்துப் பார்?...."

"என்ன சுமதி, எதற்கு இப்படிக் கவலைப் படுகிறாய்?"

"...ஒருவேளை மோகன் என் பெற்றோர்கள் யார் சாயலாகவாவது இருக்கிறானோ? என் கூடப் பிறந்தவர்கள் மாதிரி?"

"எனக்கு நிஜமாகவே புரியவில்லை."

"ஒருவேளை கொஞ்சம் சேகரின் ஜாடையாயிருக்கிறானோ?"

"சேகரின் ஜாடையாய் இருந்துதானாக வேண்டுமா?"

"அதற்கில்லை...."

"எனக்கு ஜாடை கண்டுபிடிப்பதில் அவ்வளவு சாமர்த்தியம் போதாது சுமதி. எப்படி இருந்தாலும் நீ ஏன் இப்படிப் பதற்றப் படுகிறாய்? உன் முகமெல்லாம் சிவந்து விட்டதே?"

"ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை."

"நல்ல வேடிக்கைதான் நீ போ! இதோ உன் அப்பா வருகிறாரே. என்ன மாமா, எதிர்பாராமல் ஊரிலிருந்து திடீரென்று பெண் வந்திருக்கிறாள் போலிருக்கிறதே!"

"ஆமாம் விமலா. எங்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோஷம்."

"அப்பா, அதோ பாருங்கள்!"

''என்ன சுமதி?''

''மோகன் ரயில் விளையாட்டு விளையாடுகிறான்!''

''அதற்கென்ன?''

சேகரும் அப்படித்தான் முன்பெல்லாம் விளையாடுவான். சேகரைப் போல் இவன் இந்த விஷயத்தில் இருக்கிறான். தன் அண்ணனைப் போல.''

''அனேகமாய் எல்லா ஆண் குழந்தைகளுமே விரும்பி விளையாடுவதுதானே இந்த ரயில் விளையாட்டு சுமதி? அந்தக் குணம் சேகருக்கு மட்டும் தான் என்று இல்லையே?''

''போ விமலா. நீ ஒன்று.''

''இரண்டாவது பிள்ளைதான் உனக்குச் செல்லமா சுமதி? அவனைப் பற்றியே இப்படியெல்லாம் அக்கறையாய்....''

''அவன் சாப்பிடுகிற விதத்தை நீ பார்க்க வேண்டுமே விமலா! அப்படியே சேகர்மாதிரிதான். இல்லையா அப்பா?''

''இருக்கலாம் சுமதி. இருக்கலாம்.''

''உங்களுக்கு நிச்சயமாயில்லை. ஆனால் அம்மா கவனித்திருப்பாள். ஏனம்மா, மோகனுக்குச் சில அம்சங்கள் சேகர் மாதிரியே இல்லை?''

''எல்லாக் குழந்தைகளுக்குமேபொதுவானதாகச் சில அம்சங்கள் உண்டம்மா சுமதி.''

''அவன் ஒரு விதமாகச் சாய்ந்துகொண்டு நிற்கும் விதம் இருக்கிறதே. அது அவன் அப்பா மாதிரி இல்லையா?''

''எனக்குத் தெரியவில்லை. ஆனால் உன் வீட்டுக்காரர் நிற்கிற விதங்களெல்லாம் உனக்குத்தானே தெரியும்?''

''போதுமம்மா பரிகாசம்.''

''ஏண்டி குழந்தையைப் பரிகாசம் பண்ணுகிறாய்? எந்தப் பெண்தான் தன் குழந்தை தன் புருஷனின் சாயலாய் இருக்கவேண்டுமென்று விரும்ப மாட்டாள்?''

''அப்பா! உங்கள், பொதுப்படையான பிரசங்கமெல்லாம் எனக்கு வேண்டாம். மோகன் தன் அப்பா மாதிரி இருக்கிறானா இல்லையா? அல்லது என் மாதிரியாவது? உங்களுக்கும் அம்மாவுக்கும்தான் என்னைக் குழந்தையிலிருந்தே தெரியுமே. மோகன் ஏதாவது ஓர் உருவ ஜாடையிலோ ஒரு சைகையிலோ ஒரு 'டேஸ்ட்டி'லாவதோ என்னைப் போல் இருக்கிறானா இல்லையா?''

''இதை ஒரு பிரச்னையாகவே அல்லவா செய்து கொண்டிருக்கிறாள் சுமதி! என்ன மாமா விஷயம்?''

''தெரியவில்லையம்மா விமலா. உன் சிநேகிதி நிஜத்திலேயே விசித்திரமாகத்தான் பேசுகிறாள்'' என்றாள் சுமதியின் தாயார்.

''சுமதி, நில்லு!... அட, அறையை விட்டு ஓடிவிட்டாளே! குழந்தைகளும் பின்னோடு போய்விட்டார்கள்.''

''அவளுக்கு உடம்பு கிடம்பு சரியில்லையோ என்னமோ. என்னுடைய பெற்ற வயிறு கலங்குகிறது.''

''அதெல்லாம் கவலைக்கு எதுவுமே இல்லை. நம் மகளுக்கு என்ன கோளாறு என்று எனக்குத் தெரியும்.''

''சுமதிக்கு என்ன கோளாறு மாமா?''

''அவளுக்குச் சந்தேகம், மோகன் நிஜத்தில் தன் குழந்தைதானா என்று.''

''என்ன...?''

''இந்தச் சந்தேகம் அவளுக்குப் பிரசவ ஆஸ்பத்திரியிலேயே ஆரம்பித்தது. அவளுடைய இரண்டாவது குழந்தை பிறந்த போது. குழந்தை அப்போதுதான் பிறந்து. அவள் ஒருதரம்தான் அதைப் பார்த்திருந்தாள். குழந்தையைக் குளிப்பாட்ட எடுத்துக் கொண்டு போன நர்ஸ் அதைத் திரும்பக் கொண்டு வந்தபோது, குழந்தையின் கையெண்ணும், தாயின் கை எண்ணும் ஒன்றாயில்லை என்பதைக் கவனித்தாள். உடனே அதை எடுத்துக் கொண்டு போய், எண் சரியாயிருப்பதான வேறொரு குழந்தையைக் கொண்டு வந்தாள். சுமதியிடம், 'இதோ உங்கள் குழந்தை. சரியாகத்தானே இருக்கிறது. தலையில் அடர்த்தியான சுருட்டைமயிர் நினைவு வருகிறதல்லவா? உங்களுக்கு?' என்று வேறு கேட்டிருக்கிறாள். சுமதிக்குக் குழந்தையின் அந்தத் தலைமயிர் நினைவு இருந்தது. விஷயம் அப்போதைக்கு அதோடு முடிந்து விட்டது. சுமதி அந்தக் குழந்தையோடு வீடு திரும்பினாள். அதைச் சீராட்டினாள். ஆசையைப் பொழிந்தாள். ஆனால்...''

''ஆனால்?''

''அவளையறியாமல் மனசின் ஒரு கோடியில் மங்கலாகச் சந்தேக விதை விழுந்து விட்டது. ஒருவேளை அந்த முதல் குழந்தைதான் அவளுடையதோ? இது இல்லையோ? ஒருவேளை எண்களில் குழப்பம் ஏற்பட்டு நர்ஸ் ஏதோ யதேச்சையாய் அந்தக் குறிப்பிட்ட எண்ணை இந்தக் குறிப்பிட்ட குழந்தையின் கையில் கட்டியிருப்பாளோ?... இல்லையா, – இப்படியெல்லாம்தான் ஏதேதோ சந்தேகங்கள். மனம் ஓடுகிற ஓட்டத்தைக் கேட்கவா வேண்டும்?''

''அட பாவமே! நரக வேதனையாயிருக்குமே அவளுக்கு!''

''ஆமாம். யாரைச் சந்தித்தாலும் மோகன் அவளையோ அவள் வீட்டுக்காரரையோ, சேகரையோ அல்லது இரு பக்கங்களில் யாரையாவதோ உருவத்தில் ஒத்திருக்கிறானா என்று கேட்டுக் கொண்டேயிருக்கிறாள். இப்போது அது கொஞ்சம் வெறியாகவே ஆகிவிட்டது.''


''ஐயோ பாவம்... ஆனால் மாமா, இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?''

''சரிதான்! நீயும் அவள் மாதிரி பைத்தியமாகிவிட்டாயா அம்மா? விஷயம் என்னவென்றால், குழந்தைகள் சிலசமயம் பெரியவர்களின் ஜாடையைக் கொள்கிறார்கள். சில சமயம் கொள்வதில்லை. ரத்தப் பரம்பரையின் சக்தி மிக வலுவானது. எத்தனையோ தலைமுறைகளுக்கு முன்பிருந்த ஒரு மூதாதையை ஒரு குழந்தை உருவத்திலோ குணத்திலோ ஒத்திருக்கலாம். அது நமக்குத் தெரியாமலே போய்விடும். ஆகவே, தெரிந்த உறவினர்களில் யார் சாயலும் மோகனிடம் இல்லாமலேயே போனாலும்கூட அதனால் அவன் அவளுடைய குழந்தை அல்ல என்று ஆகிவிடாது.''

''இருந்தாலும் அவளுக்கு எத்தனை வேதனை!''

''ஏன்?''

''ஏனா? என்ன கேள்வி மாமா இது? அவளுக்கு நிச்சயமாய்த் தெரிய முடிந்தால் நன்றாயிருக்கும்.''



அக்கோப்ரூஃப்

—ஸிமென்டுக்கு நீரேற்காத் தன்மை தரும் ஏஸிஸியின் சேர்க்கைப் பொருள்



பருவமழை பாதிக்கக் கூடாத, நீரேற்காத் தன்மை வேண்டிய கட்டட வேலைகளுக்கு

ஸிமென்டுக்கு நீரேற்காத் தன்மை தரும் ஏஸிஸியின் அக்கோப்ரூஃப் துணைகொண்டு நீர் ஒழுக்குகள், கசிவுகள், சரப்பற்று முதலியவற்றை ஒழியுங்கள். அக்கோப்ரூஃபும் ஸிமென்டும் கலந்த கலவையை, மணலுடன் தக்க அளவில் சேர்த்துக் காரையாகவோ, அல்லது மணலுடனும் சரளைக் கற்களோடும் சேர்த்துக் கான்க்ரீட்டாகவோ நிர்மாண வேலைகளுக்குப் பயன் படுத்தும்போது, அது உங்கள் வீடுகளை கூரை முதல் அடித்தளம் வரை நீரேற்காப் பண்போடு விளங்கச் செய்கிறது.

நீர்த் தேக்கங்கள், நீர் சேமிப்புத் தொட்டிகள், நீச்சல் குளங்கள், சாக்கடைகள், தண்ணீர்க் குழாய்கள் முதலிய வேலைகளுக்கும் சாலச் சிறந்தது அக்கோப்ரூஃப்.

அக்கோப்ரூஃப் உங்கள் அருகாமையிலுள்ள ஸிமென்ட் மார்கெடிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட் கிளை அலுவலகத்தில் தயாராகக் கிடைக்கிறது.

தி அஸோஸியேடட்
ஸிமென்ட்
கம்பெனீஸ் லிமிடெட்
தி ஸிமென்ட் மார்கெடிங்
கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்

ஏஸிஸி
சிறந்த
ஸிமென்டின்
சின்னம்

இக் கூப்பனை அனுப்புக:

**தி ஸிமென்ட் மார்கெடிங்
கம்பெனி ஆஃப் இந்தியா
லிமிடெட்**

தன் பில்டிங், 175/1 மவுன்டு ரோடு,
மதராஸ் அல்லது 6/27, ரேஸ் கோர்ஸ்,
கோயம்புத்தூர்

அக்கோப்ரூஃப் பற்றிய
உங்கள் இலவச சிறு நூலை
தயவு செய்து எனக்கனுப்ப
வேண்டுகிறேன்.

பெயர்: ....

தொழில்: ....

முகவரி: ....

K

"நிச்சயமாய் எது தெரிந்தாலுமா?"

"இல்லையில்லை! ... வந்து ... அட கடவுளே!"

"சாப்பாட்டுக்கப்புறம் களைப்பா யிருப்பாயே கமலி! இப்படி வந்து என்னோடு உட்கார்ந்து கொள்."

"களைப்பு என்ன அப்பா? உடம்பைப் பொறுத்தவரை தான் நன்றாகவே இருக்கிறேன்."

"உன் மனமும் அலை பாயக் கூடாதம்மா."

"உங்களுக்குத்தான் தெரியுமே அப்பா."

"என்னைக் கேட்டால், கமலி, நீ ஒன்றுமில்லாத தற்கு உன்னையே சித்திரவதை செய்து கொள்வதாகத்தான் தோன்றுகிறது."

"இருக்கலாம். ஆனால் மனம் என்வசத்திலில்லையே! ஒவ்வொரு தரம் நான் மோகனைப் பார்க்கும் போதும் இதே எண்ணம் தான். இந்தக் குழந்தை யார்? என்னுடையவன் தானா என்று?"

"உன்னுடையவனேதான்."

"அவன் தன் உறவினர்களில் யாரைப் போலவும் இல்லையே அப்பா. நானும் எல்லாரையும் கேட்கிறேன்..."

"வைத்தியம்தான் உனக்கு."

"....ஆனால் யாரும் எனக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்தில் எதுவும் சொல்லவில்லை."

"கவலைப்படாதே கமலி. சும்மா குழந்தையைப் பார்த்துவிட்டுச் சந்தோஷமாயிரு. எத்தனை அழகாயிருக்கிறான்! என்ன துறுதுறுப்பு! ஏ மோகன், அந்த மேஜைத் துணியை அப்படிப் பிடித்திழுக்காதே!.. ரேடியோ உன் தலைமேல் விழும்."

"இந்தப் பெட்டிக்குள்ளேருந்து யார் பாடறது தாத்தா?"

"ஒரு பெரிய பாட்டுக்காரர். நீயும் பெரியவனானப்புறம் இந்த வித்வான் மாதிரிப் பாடறயா?"

"அப்பா! அவனுக்குப் பாட்டென்றால் உயிர்! நாங்கள் யாராவது குழந்தையாயிருந்த போது பாட்டில் ஆசையா யிருந்தோமோ?"

"பாட்டுக்காரர் இப்போ இந்தப் பெட்டிக்குள் இருக்காரா தாத்தா?"


"ஆமாம்டா கண்ணு."

"மூடியைத் திறந்தா நான் அவரைப் பார்க்க முடியுமோ?"

"டே, டே, துடுக்குப் பயலே, இப்போ ரேடியோவை உடைக்கத்தான் போகிறாய் நீ. இங்கே வா."

"எனக்கு அவரைப் பார்க்க முடியலியே! அவர் ஏன் வெளியே வரமாட்டேங்கிறார், தாத்தா?"

"இந்தச் சின்னப் பெட்டியிலேருந்து எப்படி வருவார்?"



"நான் எப்போதுமே வழ வழ கொழ கொழப் பேச்சே பேச மாட்டேனுங்க. எனக்குப் பிடிக்காதுங்க."

"..........."

"என்னங்க சும்மா இருக்கீங்க? நான் சொல்றது புரிஞ்சுதா?"

"புழிஞ்சுது! நீழ் நான் வழ வழ கொழ கொழப் பேழ்ச்சே புழ்டிக்காழ்துன்னு சொழ்ன்னீங்களே."

"பின்னே எப்படி அதுக்குள்ளே போனாராம்?"

"சரியான ஆள்தானம்மா கமலி உன் பிள்ளை! பேசாமல் அவனை வக்கீலாக்கி விடு. யாரையும் வாதத்தில் மிஞ்சி விடுவான். எங்கேடா போகிறாய் மோகன்?"

"ரோட்டிலே விளையாட."

"இந்த வெய்யிலிலே ரோட்டுக்குப் போகக் கூடாது. இப்படி என்கிட்டே வா. ஏண்டா கொஞ்ச நேரம் தூங்கேன்! குழந்தைகள் மத்தியான வேளையில் தூங்கணும், தெரியுமா?"

"எனக்குத் தூக்கம் வரலே. நான் தூங்க மாட்டேன்!..."

"பின்னே இப்படி வந்து என் மடியில் உட்கார்ந்து கொள். நான் படங்கள் காட்டறேன்."

"என்ன படங்கள்? ரயில் படமா? சிங்கம் படமா?"

"எல்லாம்தான் வா இப்படி... டேடே, என் மூக்குக் கண்ணாடியைப் பிடுங்காதேடா. காது ரெண்டும் அறுந்து விழுந்து விடப் போகிறது எங்கேயாவது! துஷ்டு."

"நான் இதைப் போட்டுக்கணும் தாத்தா"

"ஆகட்டும். பெரியவனானப்புறம் போட்டுக்கலாம்டா தங்கம். போய் உன் அண்ணனோடு விளையாடேன்! சேகர் எங்கே, கமலி?"

"இதோ அம்மாவோடு தூங்கிக்கொண்டிருக்கிறான்."

"தாத்தா! படம் காட்டு."

"நான் எங்கேடா போவேன் படத்துக்கு?"

"பின்னே சொன்னியே, படம் காட்டறேன்னு."

"ஆமாம். சொன்னேன். தெரியாமல்— சொல்லிட்டு உன்கிட்டே மாட்டிக்கொண்டேன், பார்!"

"நான் ரோட்டுக்குப் போறேன், என்னை விடு. இப்போ ஐஸ்கிரீம்காரன் வருவான்."

"வேணாம், வேணாம், வெயிலில் போகாதேடா கண்ணு. உனக்குப் படம் காட்டறேன். கமலி, இங்கே ஏதாவது படப் புத்தகம் இருக்கா பார்."

"இல்லையே அப்பா!"

"அதோ அந்தப் பீரோ மேலே ஏதோ இருக்கே. என்ன அது பார்க்கலாம், எடு."

"அது உங்க போட்டோ ஆல்பம் அப்பா!"

"அதைத்தான் அவனுக்குக் காட்டலாமே? கொண்டா இப்படி. ஒருவேளை அவனுக்குப் பிடித்திருக்கலாம். எங்கே மோகன், இந்தப் படங்களைப் பாரு. பிடிச்சிருக்கா?"

"இவாள்ளாம் யாரு?"

"எல்லாம் உன் உறவுக்காரர்கள்தான். இதோ இந்தப் படத்திலே இருக்கிறது யாரு சொல், பார்க்கலாம்?"

''இது அம்மா!''
''ரைட்! சரியாகச் சொல்லிட்டியே! இது?''
''தெரியலே.''
''இதுதான் உன் மாமா சீனு. உனக்கு ஞாபகமில்லையா?''
''அப்பா, அவனுக்குப் பழக்கமானவர்களுடைய படங்களையே காட்டுங்கள். சீனுவை அவன் பார்த்து எத்தனையோ மாதமாயிற்று. மறந்து போய் விட்டான்.''
''இப்போ சொல் மோகன், இது யாரு?''
''நீ சொல்லு.''
''என்ன, உன் தாத்தாவைத் தெரியலையா? நான்தான்டா இது!''
''ஆமாம்...... மோகன் எங்கே தாத்தா இதுலே?''
''இவன் படம் ஒன்றுகூட என்கிட்டே இல்லையே கமலி. சேகர் படங்கள்தான் நீ கொடுத்திருக்கிறாயே தவிர இவனுடையது கொடுத்ததே இல்லே.''
''இவனை அதிகமாய்ப் படம் எடுக்கவேயில்லை அப்பா. இந்தத் தடவை நான் ஊருக்குத் திரும்பிப் போவதற்குள் இவனைப் படமெடுத்து உங்களுக்குச் சில பிரதிகள் கொடுத்து விட்டுப் போகிறேன்.''
''தாத்தா!, மோகன் எங்கே இதுலே?''
''குழந்தைகளுக்குத்தான் தங்களிடமே என்ன ஆசை!''
''தான் என்கிற உணர்ச்சி, உயிருக்குள்ளேயே மெல்ல மெல்ல விழித்துக் கொள்ள ஆரம்பிக்கும் அறிகுறி இது.''
''அப்பா! இந்தப் படத்தில் நீங்கள் எத்தனை கம்பீரமாயிருக்கிறீர்கள்! என்ன தீர்க்கமான முகவெட்டு!''
''உனக்கு மட்டும் என்னம்மா குறைச்சல் கமலி? உனக்கும் எனக்கும் சாயல் அதிகமுண்டு.''
''இருந்தாலும் உங்களத்தனை இல்லையப்பா நான்.''
''என்ன அப்படிச் சொல்கிறாய்? உன்னை இரண்டு வயதில் எடுத்த படமொன்று இந்த ஆல்பத்தில் இருக்கிறது. உனக்கும் எனக்கும் முக ஜாடையிலுள்ள ஒற்றுமை அதில் பளிச் சென்று தெரிவதாக ரொம்பப் பேர் சொல்லியிருக்கிறார்கள்.''
''எந்தப் படமப்பா அது?''
''காட்டுகிறேன் பார். அந்தப் படத்தில் நீ முழங்கால் வரையில் தொங்கிக் கொண்டிருக்கிற ஒரு சொக்காய் மட்டும்தான் உடுத்தியிருக்கிறாய். பரட்டைத் தலை. மொத்தத்தில் உன்னைப் பார்த்தால் அந்தப் படத்தில் ஒரு பையனைப் போல் இருக்கிறது. இதோ இதைத்தான் சொல்கிறேன்.''
''இது மோகன்! இதோ மோகன்! தாத்தா, பாரு, அம்மா, பாரு, மோகன் இங்கே இருக்கானே! இதோ மோகன்! தாத்தா, இதோ பாரு மோகன்!''
''என்ன! கமலி!''
''அப்பா! அப்பா! என்ன இது? இவன் என்ன சொல்கிறான்! என்னப்பா, இது?''
''அம்மா, இதோ பாரும்மா மோகன்! இங்கே இருக்கான் பாரு! இதோ மோகன் பாரு தாத்தா!''
''கமலி!''
''அப்பா!...... ஆஹா, கடவுளே...! இப்போது எல்லாம் தெளிவாகி விட்டது அப்பா! இவன் என் சந்தேகத்தைத் தீர்த்து விட்டான்! குழந்தையின் கண்கள் சாயலைப் பார்த்து விட்டன. இவன் என் படத்தைப் பார்த்து விட்டுத்தான் மோகன் என்று சொல்கிறான்! மோகன், மோகன், நீ என்னடா சொல்கிறாய்? இது யாரென்று சொன்னாய்?''
''மோகன். இது மோகன். அம்மா, நான் மோகனுக்கு ஒரு முத்தம் கொடுக்கப் போகிறேன்!''
''தங்கம், கண்ணே, ராஜா, என் குழந்தை!..... ஆமாம், நிஜமாகவே என் குழந்தைதான்! என் மகன்தான்! என் கண்மணிதான்!''
''ஜாக்கிரதை, கமலி! இப்படி இறுக்கிக் கட்டிக் கொண்டால் குழந்தைக்கு மூச்சுத் திணறும்.''
''அப்பா! அப்பா!.... ஆஹா, இப்போது எத்தனை நிம்மதி, எத்தனை ஆனந்தம்! என் மகன், என் குழந்தை!..... கடவுளே, உனக்கு நான் எப்படி நன்றி சொல்லுவேன்! எனக்கு எப்படிப்பட்ட ருசுவைக் காட்டி விட்டாய்!.....''
''அம்மா, நான் மோகனுக்கு முத்தம் கொடுக்கப் போகிறேன்.''
''நானும்தான்டா, கண்ணு நானும்தான். எனக்கும் என் குட்டி மோகனுக்கும் முத்தம் கொடுக்கணும் போலத்தான் இருக்கு! இந்தா, எடுத்துக் கொள், ஒண்ணு, ரெண்டு மூணு..''

''இப்போதுதான் கமலி ஊரிலிருந்து வந்தது போல் இருக்கிறது மாமா, அதற்குள் திரும்பிப் போய் விட்டாளே.''
''அவள் வீட்டுக்காரர் ஊருக்குத் திரும்பி விடவே அவளும் கிளம்பி விட்டாள்.''
''ஏதோ அவள் வந்த வரையில் திருப்திதான், போன வருஷம் வந்ததுதானே, கடைசியாக ?''
''இங்கே அவள் ரொம்ப சந்தோஷமாய் இருந்து விட்டுப் போனாள் விமலா. முகம் தெளிந்து உடம்பு தேறி, தகதகவென்று ஆகி விட்டாள்.''
''குழந்தையைப் பற்றிய நிச்சயம் ஏற்பட்டதுமே அவளுக்கு மன நிம்மதி உண்டாகி விட்டதென்று நினைக்கிறேன்.''
''ம்.''
''அவள் விஷயத்தைச் சொன்னபோது எனக்குக் கூட ரொம்ப சந்தோஷமாயிருந்தது மாமா. நாம் எதிர்பார்க்கவே முடியாத அபூர்வமான ஒரு சந்தர்ப்பம்தான் அவளுக்கு உண்மை தெரிய வந்த அதிசயம், இல்லையா?''
''உண்மையா?''
''ஆமாம், பின்னே?''
''ஆமாம்.''
''எனக்கு உங்களைப் புரியவில்லை மாமா; உங்களோடு அவள் போட்டோக்களைப் பார்த்துக் கொண்டிருந்த போதுதானே அது நடந்தது ?''
''ஆமாம்.''
''ஒரு பச்சிளங் குழந்தையின் தூய்மையான பார்வை உண்மையைக் கண்டுபிடித்துச் சந்தேகத்தை நிவர்த்தி செய்தது மெய் சிலிர்க்க வைக்கிறது மாமா.''
''ஓஹோ!''
''ஜாடை ஒற்றுமை குழந்தையின் இயல்பான, தெய்வீகமான நுண்ணறிவுத் திற

மைக்குப் பலிச்சென்று புலனாகி யிருக்க வேண்டும்.''

''அப்படியா?''

''சுமதிக்குத்தான் எத்தனை சந்தோஷம், நிம்மதி!''

''அதைச் சொல்லு. அதுதான் முக்கிய விஷயம்.''

''என்ன மாமா, சொல்கிறீர்கள்?''

''மன நிம்மதி என்பது மிக விலை உயர்ந்த பொருள். மிக அவசியமான விஷயம். சுமதி தன்னைத் தானே கவலையோடு வதைத்துக் கொண்டிருந்ததைப் பார்க்க எனக்கு ரொம்பவும் வருத்தமாயிருந்தது விமலா. இப்போது அவள் தன் மன நிம்மதியைத் திரும்பப் பெற்றுச் சந்தோஷமாயிருக்கிறாள் என்பதில் எனக்கும் எல்லையில்லாத திருப்தி.''

''நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள், மாமா?''

''அப்படி யென்றால்?''

''உங்கள் பேச்சில் ஏதோ உள் அர்த்தம் தொனிப்பது போல் இருக்கிறதே? சிரிக்கிறீர்கள், மாமா! நிஜமாய்த்தான் கேட்கிறேன்.''



''என்னைக் கடைத் தெருவிலே விட்டுட்டு வந்துட்டீங்களே. நீங்க ஒரு மனுஷரா?''

''அடியம்மா! உனக்காக முன்னாலே வந்து விட்டு வாசற் கதவைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறேனே. நேரே உள்ளே போய் எல்லாவற்றையும் இறக்கி வை.''

''உன் ஊகம்தான் என்ன?''

''இதென்ன, ஏதாவது விளையாட்டா?''

''சேச்சே! மன நிம்மதி என்பது விளையாட்டா அம்மா? பெரிய விஷயமாயிற்றே, அது!''

''சுமதி குழந்தையாயிருந்த போது எடுத்த படத்தைப் பார்த்ததும் மோகன் தன் பெயரைச் சொல்லிக் கூவவில்லையா?''

''உண்மைதான்.''

''பின்னே?''

''நான் வேண்டுமென்றேதான் சம்பாஷணையை அந்த மாதிரி கொண்டு போனேன். மோகன் பார்க்க வேண்டும் என்பதற்காகவேதான் அந்தப் படத்தைத் திறந்து காட்டினேன்.''

''அவன் உடனே தன்னை அடையாளம் கண்டு கொண்டான்!''

''சின்னக் குழந்தைகளுக்கே, எந்தக் குழந்தையின் உருவத்தோடும் தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் இயல்பான தன்மை பொதுவாக உண்டு என்பது உனக்குத் தெரியாதா, விமலா?''

''மாமா!''

''ஆல்பத்தில் வேறு எந்தக் குழந்தையின் படத்தையும் அவன் பார்க்கும்படி நான் திறக்கவில்லை.''

''அட, கடவுளே!..... அப்படியானால், அது நிச்சயமான ருசு இல்லையா?''

''எதன் ருசு விமலா?''

''மோகன் அவள் குழந்தை என்பதற்கு.''

''அதைப் பற்றிய சந்தேகமே முதலில் ஏன் எழ வேண்டும்? ஆஸ்பத்திரியில் மாறாட்டம் எதுவும் நேரவில்லை என்பதுதான் என் உறுதி. அம்மாதிரி மாற்றங்களெல்லாம் கதையிலும் சினிமாவிலும்தான் அம்மா வரும். உண்மை வாழ்க்கையில் இதெல்லாம் வெகு அபூர்வம். அம்மாதிரியானதொன்று நிகழக் கூடும் என்றே நாம் சரியானதாகக் கருத வேண்டாம். சுமதி காரணமில்லாமலேயே தன்னை வருத்திக் கொண்டிருந்தாள் என்பதே என் அபிப்பிராயம்.''

''ஆனால்.....இது வெறும் அனுமானம்தான்..... ஒரு வேளை.... ஒரு வேளை அந்த அபூர்வமான, துர்லபமான சந்தர்ப்பம் வாழ்க்கையில் நடந்து விட்டது என்று வைத்துக்கொள்வோம்...''

''சரி?''

''அப்போது?''

''அப்போது மட்டும் என்ன? சுமதி அந்தக் குழந்தையைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தாள். அதனிடம் பாசம் வைத்தாள். அதைத் தன்னுடையதாகவே பரிபாலித்தாள். ஆகவே அந்தக் குழந்தை அவளுடையதுதான். நம் குழந்தைகள் நம் வயிற்றில் பிறப்பதாலேயே நம்முடையதாகின்றன என்று நினைப்பது தவறு விமலா. பிறப்பு என்பது எதேச்சையான விஷயம். ஏதோ ஒரு தாய் தந்தைக்குப் பிறக்க நேருகிறது. அவ்வளவுதான். ஆனால் அந்தக் குழந்தைகளிடம் நாம் அன்பு வைத்து அவர்களுக்கு நம் மனதில் இடம் கொடுத்து அவர்களின் சுக துக்கங்களில் சுகமும் துக்கமும் கொள்கிறோம். பார், அந்த இதய நெருக்கம்தான் நித்திய பந்தத்தை உருவாக்குகிறது; அதன் காரணமாகத்தான் அவர்கள் நம் குழந்தைகளாகிறார்கள். ஆகையால், ஒருகால் நீ சொல்வது போல் இந்தச் சந்தர்ப்பத்தில் அபூர்வமாக நடைபெற்றிருந்தால் கூட மோகன் அவளுடைய குழந்தைதான். அவன் அவளுடைய குழந்தையாகவும் அவள் அவனுடைய தாயாகவும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அதுவே சாசுவதமான உண்மை.''

''நீங்கள் சொல்வது..... குழப்பமாய்த்தான் இருக்கிறது, எனக்கு. அதாவது, இன்னும் அவன் வேறு யாருடைய குழந்தையாகவோ இருக்கலாம் என்று......''

''இப்போதுதானே, நான் அவன் அவளுடைய குழந்தைதான் என்று உனக்கு நிரூபித்துக் காட்டினேன்!''

''சுமதிக்கு இது தெரிந்தால்?''

''தெரியவே வேண்டாம். அவளிடம் பரந்த மனப்பான்மை இல்லை. ஆகவே நான் என் மகளுக்கு மன நிம்மதியை இந்த வழியில் கொடுக்க வேண்டியதாயிற்று.''

''வழி..... வழி சரியானதுதானா?''

''அன்பின் வழி என்றுமே சரியானதுதான், அம்மா!''

கோட்டை விட்டார்!

"அபர்ணா"

சில ஆண்டுகளுக்கு முன் உண்மையாக நடந்த நிகழ்ச்சி இது.

விழுப்புரம் சந்திப்பு நிலையத்தில், தூத்துக்குடி செல்லும் எக்ஸ்பிரஸ் வந்து நின்றது. தொடர் வண்டியின் தலைமைக் கார்டு, தம்முடைய 'கோட்'டைக் கழற்றித் தம் 'பெட்டி'யிலேயே ('கார்டு வான்') ஓரிடத்தில் மாட்டி விட்டுக் கீழே இறங்கினார். சென்னையிலிருந்து விழுப்புரம் வரை வந்த இஞ்சினை அவிழ்த்து விட்டு, வேறு இஞ்சினைக் கோத்தார்கள்.

எக்ஸ்பிரஸ் புறப்பட வேண்டிய நேரம் வந்ததும், பிளாட்பாரத்திலிருக்கும் மணி அடிக்கப்பட்டது. அண்டர் கார்டு தம் வேலை முடிந்து விட்டது என்பதற்கறிகுறியாகத் தலைமை கார்டுக்குப் 'பச்சை' காட்டினார். தம் பெட்டிக்கு அருகிலேயே நின்று கொண்டு, ஸ்டேஷன் மாஸ்டரிடம் சம்பாஷித்துக் கொண்டிருந்த அவர், டிரைவருக்குப் பச்சை விளக்கைக் காட்டினார், இனிமையாக விஸில் அடித்தபடி.

ஒன்றிரண்டு பேர்கள் பெட்டிகளை விட்டு இறங்கித் தேநீர் அருந்த ஸ்டாலுக்குச் சென்றவர்கள் கார்டு பச்சைக் கொடி காட்டியதும் பாய்ந்தோடித் தத்தம் பெட்டிகளுக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் அவர்கள் பெட்டியில் அமர்ந்து சில நிமிஷங்கள் கழிந்து விட்டது. வண்டி புறப்படுவதற்கான அறிகுறி தெரியாமல் போகவே அவர்கள் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்கள். விழுப்புரம் பிளாட்பாரத்திலேதான் இன்னும் வண்டி நின்றுகொண்டிருந்தது. ஐந்து நிமிஷங்களும் கழிந்துவிட்டன. வண்டி நகருவதாக இல்லை.

'என்ன ஆபத்தோ?' என்று பரிதவித்த வண்ணம் கார்டும், ஸ்டேஷன்மாஸ்டரும் இஞ்சினருகே வந்தார்கள்.

''ஸார், 'வாக்குவம்' ஏறவில்லை!'' என்று உதட்டைப் பிதுக்கினார் டிரைவர்.

இந்த 'வாக்குவம்' (Vacuum) என்பது வண்டித் தொடரின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனை வரை தொடர்புபடுத்திக் கொடுக்கும் 'வெற்றிடச் சக்தி'. அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்ததும் வண்டி நிற்பது இதன் காரணமாகத்தான். ஒரு வண்டித் தொடரில் 'வெற்றிடம்' எவ்வளவு இருக்கிறது என்பதை அங்குலக் கணக்கில் சொல்வார்கள். இஞ்சினிலும் கார்டுப் பெட்டியிலும் வாக்குவத்தின் அளவைக் காட்டும் கருவிகள் உள்ளன. குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்த வாக்குவத்துடன் வண்டியைக் கிளப்ப மாட்டார்கள்.

ஸ்டேஷன் மாஸ்டர், 'டிரெயின் எக்ஸாமினர்'ரைப் பார்த்தார். அவரும் அவருடைய சிப்பந்திகளுமாக ஒவ்வொரு பெட்டியாகக் குனிந்து பார்த்துப் பரிசோதனை செய்யத் தொடங்கினார்கள்.

அரை மணி ஆயிற்று.

இஞ்சினில், 'வாக்குவம்' கருவி ஆரம்பத்தில் இருந்ததைப் போல, மூன்று அங்குலத்தையேதான் தொடர்ந்து காட்டிக் கொண்டிருந்தது.

''ஸார்! நீங்கள் வரும்போது வண்டியில் கோளாறு ஏதும் இல்லையே?'' என்று சந்தேகத்துடன் கேட்டார் ஸ்டேஷன்மாஸ்டர். வண்டி ஸ்டேஷனை விட்டு நகராதது அவர் வயிற்றினுள்ளே புளியைக் கரைத்த மாதிரி இருந்தது.

''இல்லை..... நூறு மைல் தகராறில்லாமல் வந்து சேர்ந்திருக்கிறோமே?'' என்று பதில் சொன்னார் கார்டு.

''இஞ்சின்தான் இங்கே புதிதாகச் சேர்ந்தது. அதில் தகராறு இருக்கலாம்....'' என்று ஒரு புதுப் பிரச்னையைக் கிளப்பினார் அங்கிருந்த ரயில்வே சிப்பந்திகளில் ஒருவர்.

''நோ, நோ!..... 'ஷெட்'டில் ரொம்ப கரெக்டாகப் பரிசோதனை செய்து விட்டுத்தான் இஞ்சினை எடுத்து வந்திருக்கிறேன்....'' என்றார் டிரைவர்.

வண்டி வந்து ஒரு மணியும் ஆகிவிட்டது: 'பொழுது விடிந்தால், ஆயிரம் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்குமே?' என்று கையைப் பிசைந்தார், டிரெயின் எக்ஸாமினர். அதிகாரிகள் சும்மா விடமாட்டார்களே, அவரை.

இப்படி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் போதே ஒரு சிப்பந்தி ஓடி வந்தார். ''ஸார், ஸார், இத்தனை நேரமாக 'வாக்குவம்' ஏறாத காரணத்தைக் கண்டுபிடித்து விட்டேன்!'' என்று உற்சாகத்துடன் கூவினார்.

''எங்கே, எங்கே?'' என்று அனைவரும் ஏகோபித்த குரலில் முழங்கியபடியே அவரைப் பின்தொடர்ந்தனர்.

''இப்படி வாருங்கள், காட்டுகிறேன்....''

எல்லோருமாக, அவரைத் தொடர்ந்து கார்டுப் பெட்டிக்குச் சென்றார்கள்.

''பார்த்தீர்களா, அங்கே?'' என்று சுட்டிக் காட்டினார்.

''மை காட்!'' என்று அலறினார் கார்டு.




ஆமாம், அவர் பெட்டியில் இருந்த கருவியில் எந்தக் கைப்பிடியைக் கீழ்நோக்கி அழுத்தினால், வண்டித் தொடரின் 'வாக்குவம்' அழிந்து, வண்டி நிற்குமோ, அந்தக் கைப்பிடியில் அவருடைய கோட்டு தொங்கிக்கொண்டிருந்தது! கோட்டின் கனம் காரணமாகக் கைப்பிடி சற்றே இறங்க, அதன் வழியாக மெல்ல மெல்ல 'வெற்றிடச் சக்தி' வெளியேறிக் கொண்டிருக்கிறது அவ்வளவு நேரமும்!

'கோட்'டை எடுத்த மறுநிமிடம் டிரைவர் 'ஊ' என்று குரல் கொடுத்தார்: 'நான் போகத் தயார்!' என்று!

விழுப்புரம் ஸ்டேஷனை விட்டு வெகு நேரமாக நகராமல் இருந்த தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் நகர்ந்தது.

அனைவருக்கும் அப்பொழுதுதான் நிம்மதி பிறந்தது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



அமிர்தாஞ்சனம்

தடவி விரைவில் நிவாரணம் பெறுங்கள்

உடலில் ஒரு பகுதியை மட்டும் பாதிக்கும் வலிக்காக உள்ளுக்கு மருந்து சாப்பிடுவானேன்? வலிக்கும் இடத்தின் மேல் மட்டும் அமிர்தாஞ்சனம் தடவி விரைவாக வலி நிவாரணம் அடையுங்கள். பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள அமிர்தாஞ்சனம் தசைவலி, தலைவலி, சுளுக்கு மற்றும் மூட்டு வலிகளுக்கு சிறந்த வகையில் நல்ல நிவாரணமளிக்கும். மற்றும் மார்ப்புச்சளி, ஜலதோஷம் போன்றவைக்கும் ஏற்ற மருந்து அமிர்தாஞ்சனம் ஒரு சமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால், ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக் கணக்கில் வரும்.

அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில் பயன்படுவரும் கைகண்ட நிவாரணி.

பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி



அமிர்தாஞ்சன் லிமிடெட், மதறாஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon